தத் ஸத்

ஸ்ரீ பர ப்ரஹ்மணே நமஹ.

அனேக ரகஸ்யங்கள் அடங்கிய

மூன்றாம் பதிப்பு

ஜனன மரண ரகஸ்யம்.

இது,

வெட்டவெளி பரம்பரையில் வந்த நித்தியாநந்த

சுவாமிகளின் ப்ரிய சிஷ்யராகிய

கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வர

ரவர்களால் இயற்றி

காஞ்சிபுரம்,

தி. அரங்கசாமி நாயுடு அவர்களால் பார்வையிட்டு

சென்னை - சூளை,

ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

மூன்றாம் பதிப்பு 1000.

1947.

All Rights Reserved] [விலை

மேற்படி யோகீஸ்வர ரவர்களால் எழுதிய நூல்கள்.

		ரூ.	அ.
1.	முன்பதிப்புக்களை விட இதில் இன்னும் அநேக தேவ ரஹஸ்யங்களும், அநேக படங்களும் அடங்கிய பத்தாம் பதிப்பு "ஜீவப் பிரம்மைக்யவேதாந்த ரஹஸ்யம்" உயர்ந்த காலிக்கோ பயிண்டு	4	8
2.	ஷை நூல் இங்கிலீஷ் முதற்பாகம்	2	12
3.	"ஜீவப் பிரம்மைக்ய ராஜயோக சாராம்ருதம்." தெலுங்கு நான்காம் பதிப்பு	5	0
4.	ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதருபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை ஆறாம் பதிப்பு உயர்ந்த காலிகோ பயிண்டு	2	8
5.	மேற்படி தெலுங்கு பகவகீத்தை இரண்டாம் பதிப்பு	2	8
6.	தமிழ் ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம் நான்காம் பதிப்பு	2	8
7.	தெலுங்கு கபீர்தாஸ் சரித்திரம் இரண்டாம்பதிப்பு	2	8
8.	யோகாப்பியாசம் செய்யவேடிய முறைகளை உபதேசிக்கும் நூல்	2	0
9.	மாயையின் ரகஸ்யார்த்தம் வெளிப்படுத்தி மனதை நிறுதும் நூல்	0	12
10.	ததுவ பரிசோதனை அன்னதான பலன் என்னும் நூல் நான்காம் பதிப்பு	0	12
11.	சரீர தேவாலய ரஹஸ்யார்த்த பாரிஜாதம். இது மிகவும் சிரேஷ்ட்டமான நூல்	0	12
12.	ஜனனமரண ரகசியம்	0	12
13.	ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் பூர்ஜன்ம இச்ஜன்ம சரித்திரம் நான்காம் பதிப்பு ...	0	12
14.	மனோ ஓட்டத்தை நிறுத்திக் காட்டும் நூல் ...	0	8
	ஷை நூல் இங்கிலீஷ்	0	6
15.	$1\frac{1}{4}$-மணிநேரம் எரியும் உயர்ந்த ஊதுவதி 100-க்கு	2	0
16.	மூன்று மாதம் 13-று, தினங்கள் யோகசமாதியிலிருந்து வெளிவந்தபோது பிடித பெரியசயிஸ் போட்டோ. இது, பூஜைக்கு உபயோகமானது ...	2	8
17.	ஷை போட்டோ ஆர்டுபேபரில் பிரிடுசெய்தது ...	1	0
18.	சரீரதின்மேல் கட்டிக்காட்டிய சிவன் கோயில் போட்டோ பெரிய சயிஸ்	0	8
19.	ஷை சரீரத்தின்மேல் கட்டிக் காட்டிய விஷ்ணு கோவில் போட்டோ பெரிய சயிஸ் ...	0	8

ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனி,
சூளை, போஸ்டு, சென்னை.

T R Venkatesan
1950

தத் ஸத்.

ஸ்ரீ பர ப்ரஹ்மணே நமஃ

அனேக ரகஸ்யங்கள் அடங்கிய

மூன்றும் பதிப்பு

ஜனன மரண ரகஸ்யம்.

இது,

வெட்டவெளி பரம்பரையில் வந்த நித்தியாநந்த சுவாமிகளின் ப்ரிய சிஷ்யராகிய

கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வர ரவர்களால் இயற்றி

காஞ்சிபுரம்,
தி. அரங்கசாமி நாயுடு அவர்களால் பார்வையிட்டு
சென்னை - சூளை,
ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

மூன்றும் பதிப்பு 1000.

1947.

All Rights Reserved] [விலை அ...

இந்நூல் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்:—

ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனி,

சூளை போஸ்டு, சென்னை.



కడప శ్రీ పరమహంస సచ్చిదానంద యోగీశ్వరులు

బెంగళూరు సిటి కెంపాపుర అగ్రహార మఠములో, 245-దినములు యోగమునందుండి వెలుపలకువచ్చిన వెంటనే పట్టినపోటో (వయస్సు-76)

கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்

பெங்களூர் சிடி கெம்பாபுர அக்ரஹார மடத்தில், 245-நாள் யோகத்திலிருந்து வெளிவந்தவுடன் பிடித்த படம். (வயது-76)

இந்நூலாசிரியர் வரவேற்பு.

திருவே வருக திறம்பொலிந்த
சிவமே வருக செழுஞ்சுடரின்
உருவே வருக உண்மைநிலை
உயர்வே வருக உலகமதின்
கருவே வருக கருதுதவக்
கனியே வருக காரணசற்
குருவே வருக குறையகற்றுங்
குணமே வருக வருகவே. (1)

மறையே வருக மாதவத்தின்
மலையே வருக வளர்யோகத்
துறையே வருக தொலைவறுநற்
சுகமே வருக தொண்டர்மன
நிறையே வருக நிர்மலநன்
நிலையே வருக நிகிலமதற்
கிறையே வருக வெம்முளத்தின்
இனிவே வருக வருகவே. (2)

பொருளே பொறியே புகன்றிடுநற்
புகழே பொலிவே புயலெனச்செய்
அருளே அளியே அசைவுதவிர்
அறிவே அழலே அருவுருவே
இருளே யொளியே யிலதுளதென்
றிசைக்காப் பொருளே இடரகற்றும்
தெருளே செல்வச் சிவம்வருகத்
தேனே வருக வருகவே. (3)

நிகழு மகண்ட பரிபூரணத்
தேஜோன் மய ஸச்சிதாநந்த
புகழு நிகில நிராங்கார
புண்ய பரம நிஷ்களங்க
நிகழு மரிய பரப்பிரம்ம
நித்யா னந்த நிராதார
மகிழு மழியாப் பொருள்வருக
மதியே வருக வருகவே. (4)

அடியார் வேண்டுகோள்.

உண்மைநிலையை அறியாமல்
உழலுமடியேம் உணர்ந்திடவே
வண்மைமொழி மந்திரமொன்றும்
மலர்வாய்த்திறந்து வழுத்திடுவீர்
திண்மைப்பொருளைத் தெரிந்தபசுந்
தேனே திகட்டாத் தெள்ளமுதே
தண்மைப் பொழில்சூழ் கடப்பைநகர்
தனில் வீற்றிருக்கும் தவக்கொழுந்தே.

மதத்தைத் தவிர்த்து மலமொழித்து
மயலைக்கெடுத்து மனநிறுத்தும்
விதத்தையுணர்த்தி விளங்குகின்ற
மெஞ்ஞானப் பேரின்பநல்ல
முதத்தையருந்திப் பிறப்பாழி
முழுகா தருளு முளரியஞ்செம்
பதத்தைமனத்தில் நிலைநிறுத்திப்
பணிந்தோம் சிரத்தி லணிந்தோமே.

வெண்பா.

பின்சொல் எனினும் புகலுமிவை யெல்லாம்
இன்சொல் எனமனதில் எண்ணியே—நன்சொல்
திருவாய் மலர்ந்தருள்வீர் சேவித்தேன் பாதம்
குருவாய்ச் சிரமீதில் கொண்டு.

ஆசிரிய விருத்தம்.

பந்தமெனு மக்கள்மனை வீடுதோட் டந்துறவு
பணமாகு மிதுக ளெல்லாம்
பாரினில் வரும்போது வந்ததிலை நாளைக்குப்
பாடைமேல் போகும் போதும்
சொந்தமென வந்திடா திடையினிற் கனவுபோல்
தோன்றியே யழிவ தென்று
சுத்தமா யெண்ணமல் நித்தமே சதமென்று
தொல்லுலகி லெண்ணிநா ளும்
வந்தமட மாதினே டினிதாக வாடியே
வலிவை யெல்லா மிழந்து
வாழ்நாட் கழித்துட னிறப்பதங் யாயமே
மன மஞ்சுகின்ற தையோ
சந்ததமு முந்தனெரு மந்த்ரமெனும் விந்தைமொழி
தந்தெளிதி லாண் டருளுவாய்
தடப்பொழில்கள் பலசூழ்ந்த கடப்பைவளர் பர
மாம்ஸ ஸச்சிதாநந்த குருவே.

சோத்திரந் தொக்கினெடு சட்சினஞ் சிங்குவை
தோன்றுமாக் ராண மென்று
சொல்லுமைம் புலனையும் நில்லென வடக்கியே
தொலையாத வாசை யென்ற

ஆத்திரம் விட்டுமன மென்னுங் குரங்கினை
யடக்கிப் பிடித்து வைத்தே
அந்தர்முக நாட்டம் படுத்தியே பேரின்பம்
அடைகின்ற வித மருளுவாய்
காத்திரம் நித்யமென வெண்ணலா காஜீவன்
கட்டு மொரு கூடதாகும்
காலம்வந் தால்விட்டு விட்டோடு மாதலால்
கருதினே னுன் பாதமே
சாத்திரங் கற்றதிலை தொண்டர்க்குத் தொண்டெனச்
சாற்றிடும் நான் சிறுவனே
தடப்பொழில்கள் பலசூழ்ந்த கடப்பைவளர் பர
மாம்ஸ ஸச்சிதாநந்த குருவே.

சஞ்சிதம் ப்ராரத்வ மாகாம்ய மென்றுமிகச்
சாற்றிடும் வினைகள் மூன்றும்
தப்பா தொழிந்துவிடி லப்போ தலோபிறவி
தானுந் தொலைந்து போகும்
வஞ்சக மிகுந்தமன முள்ளவரை யிற்பிறவி
வாரா தொழிந் திடாதே
மனமற்ற விடமாகு மழிவற்ற சுகமென
வழுத்துவது மிகவுண் மையே
மிஞ்சிவெளி யோடித் திரிந்திடு மனத்தினை
வீக்கி சூட்சுமம தாக்கி
மிக்கவதை யுஞ்சூன்ய மாக்கியே பேரின்ப
வீடடையு மார்க்க மருள்வாய்
தஞ்சமென வுந்தனிரு செஞ்சர ணடந்தனன்
தமியேனும் நான் சிறுவனே
தடப்பொழில்கள் பலசூழ்ந்த கடப்பைவளர் பர
மாம்ஸ ஸச்சிதாநந்த குருவே.

ஓம்
தத் ஸத்
ஸ்ரீ பர ப்ரஹ்மணேநம.

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்மேல்
வேலாயுதசாமி பாடிய பாடல்கள்.

தன்யாஸ்] [ஆதி

பல்லவி

பரமஹம்ஸஸச்சி தானந்த யோகப்
பண்ணவர் பதந் துணையே (ப)

அநுபல்லவி

வரமருள்யோக மார்க்கானுபோக
பிரமவிவேக பேரொளிதேக (ப)

சரணங்கள்.

சஞ்சிதவினைகளைத் தவிர்த்தினிதாக்கும்
சாகரமென்றசமு சாரத்தைப்போக்கும்
தஞ்சமென்றடைந்தவர் தமக்கருள்தேக்கும்
சலனமிகுமனத்தின் சந்தேகம்நீக்கும் (ப)

ஆரணமதின்முடி வாய்விளையாடும்
அகிலசராசரங்கள் அனைத்துமாய்நீடும்
காரணசற்குருவாய் கதியினைத்தேடும்
காணுமடியவர்கள் கருத்தில்கொண்டாடும் (ப)

மாயையென்றிடும்பெரு வல்லிருள்மாற்றும்
மயிலினையொழித்திட மந்திரஞ்சாற்றும்
ஆயுமறையுங்காண வரிதெனத்தோற்றும்
அடியவர்க்கடியன்வே லாயுதன்போற்றும் (ப)

செஞ்சுருட்டி] [ஏகம்

பல்லவி

பேரின்ப வானந்தநல் யோகப் பெரியவராம் (பே)

அநுபல்லவி

ப்ரம்மநிலையை யறிந்தஞான
ஜன்மமதனில் சிறந்தமோன (பே)

சரணங்கள்

பாரின்பமேதுறந்த பக்தியதில்சிறந்த
சீரின்மடைதிறந்த
சித்தசத்திய மெத்தநித்திய (பே)

மனநிலையைக்கண்ட வடிந்திடுமமுதுண்ட
கன தவங்கைக்கொண்ட
காரணக்குரு பூரணத்திரு (பே)

மேலாந்துதிசாற்றும் மெய்த்தமிழைக்காப்பற்றும்
வேலாயுதன்போற்றும்
வித்தகபாக்கிய சித்தவைராக்ய (பே)

இந்துஸ்தான்தோடி] [ஏகம்

பல்லவி

பூரண வானந்த
புண்யஜனனர் கண்யமனனர் (பூ)

அநுபல்லவி

காரணசற்குருவாம் காணும்திருவுருவாம்
கதியளித்திடு பரமபாக்ய
மதிநிறுத்திடு மதிசிலாக்ய (பூ)

மனநிலையாம்நேமம் வருகும்பிராணயாமம்
வாசியடக்கி யோகமியற்றிடும்
பாசமொழித்து மோகமகற்றிடும் (பூ)

பரப்ரம்மதரிசனமே பக்குவமுற்றார்கனமே
பத்தனென்றிடும் வேலாயுதன்
நித்தமுந்தொழும் யோகீஸ்வர (பூ)

இந்துஸ்தான்தோடி] பல்லவி. [ஆதி

சித்தமே தெளிந்தசிவயோகி மெஞ்ஞானம்
செய்திடும் த்யாகி (சி)

அநுபல்லவி.

நித்தமே நிலையுணர்போகி சுந்தர
நிர்மல தேகி (சி)

தோஹையரு.

தேஜோன்மயானந்த ப்ரம்மமேதானாய்த்
திகழ்ந்திடும் பரமஞானி
காஷாயவஸ்த்ரதர மெய்யலங்காரசுக
கருணைவளர்மிகுநிதானி

அநுபல்லவித்தோடர்.

காரணம் கண்டசன்யாசி கடப்பை
கனநகர் வாசி (சி)

தோஹையரு.

பனிரெண்டுவருடங்கள்வரையுமானஸபூஜை
பழகித்தெரிந்தத்யானி
தனியானபொருளீதென் றுறுதியாகச்சிந்தை
தங்கும்யோகாபிமானி

அநுபல்லவித்தோடர்.

சச்சிதா நந்தயோகேசர் சதுர்வே
தாநுபோகேசர் (சி)

தோஹையரு.

பூர்வஜன்மங்கண்டு மாந்தர்களுய்யப்
புகன்றிடும் புண்யசாலி
ஆர்வமாய்ப்போற்றிடும் தொண்டருக்கருள்தனை
யளிக்குங்க்ருபாநுகூலி

அநுபல்லவித்தோடர்.

அன்பன்வே லாயுதசாமி போற்றிடும்
அந்தரியாமி (சி)

இந்துஸ்தான் ப்யாக்] பல்லவி [ஏகம்.

நிஷ்டாநுபோகாவலி நிமலநிர்விகல்ப
நிகிலபரம நிஷ்களங்க
வகிலசரண சத்யதுங்க

அநுபல்லவி.

சிஷ்டோபதேசதிரு சின்மயானந்தவுரு
திகழுங்குரு
தேசுறவேவளர் சஞ்சிதங்கொய்திட
ரேசகபூரக கும்பகஞ்செய்திடும் (தி)

தோஹையரு.

லோகோபகாரார்த்தமாயவதரித்துண்மை
நூலுணர்ந்திடுமப்யாசி
பாகூறவே ஜீவ ப்ரமைக்ய ரகசியம்
பகரும் சுயம்ப்ரகாசி

அநுபல்லவித்தொடர்.

பற்றற்றமெய்த்துறவி பக்தர்கள்கூட்டுறவி
பலன்பிறவி
படித்தவர்மலி கடப்பைநகரில்
முடித்திடுமொரு மடத்தினில்வளர் (தி)

தோஹையரு.

திருநகரமர்ந்த வேகாம்பரேசுரர்வனசச்
செழும்பதத்தொண்டராகி
வருடமீராறு மானஸ பூஜை செய்துமன
மகிழுங்க்ருபா விவேகி (தி)

அநுபல்லவித்தொடர்.

வாழ்ப்ரம்மசம்மந்த வளர்சச்சிதானந்த
மனமிறந்த
வாலாயதி யானசற்குரு
வேலாயுத சாமிசொற்கருள்

சுருட்டி] பல்லவி [ஏகம்.

ஆத்மவிவேகி சச்சி
தானந்தயோகி பரம (ஆ)

அநுபல்லவிச்சந்தம்.

காஞ்சிதனிலேபிறந்து கடப்பைதனிலேசிறந்து
வாஞ்சைதனையேதுறந்து மனந்தன்னையேமறந்து
கருதுயோகநித்திரை கைகளோசின்முத்திரை
கட்டிடுங்கௌ பீனமான
மட்டருஞ்சி வாபிமான (ஆ).

சிந்துபைரவி] பல்லவி [சாப்பு

பரமாம்சஸச்சிதா னந்தயோகீஸ்வரர்
பக்தரைக்கார்க்கப் பிறந்தவராம் (ப)

அநுபல்லவி.

திரமாகிய ஜீவ ப்ரம்மைக்ய வேதாந்தம்
செய்துமிகவும் சிறந்தவராம்
பாதிமதிவேணி ஏகாம்பரேசரருளால்
படைத்தார் மெஞ்ஞானதாரம்
ஆதிகுருசங்கராச்சார்யரென்றேபுகல
ஆனார் திருவவதாரம்
பலவிடமலைகிற மனதைக்கட்டி
நலமுடனொருநிலை பெறுமதிகெட்டி
படுத்தும்வைராக்கிய
கிடைத்திடும் யோக்கிய
கடப்பையின் பாக்கியக் காரணனார் (ப)
முன்ஜனனங் க்றிஸ்தவராகிக் கடவுளொன்றென்றே
மொழிந்துபதேசித்ததாலே
பின்ஜனனமாகுமிதில் விட்டகுறை வந்தடையப்
பெற்றார்சிலாக்ய மேலே

செஞ்சுருட்டி] பல்லவி [ஆதி.

வேதாந்தசாரவைபோகி
நாதாந்ததீரமெய்யோகி (வே)
பனிரெண்டுவயதிலேயே பழகினவர்சிந்தை
இனிவாகநிறுத்துதற்கு இயம்பிடிலோவிந்தை

பத்தரைமாற்றின் தங்கமெனும்படி
இத்தரைபோற்றும் தக்கமிகுந்த (வே)
தசவிதமானநாதம் தான்கண்ட சீமான்
நிஜமிதுவென்றுசிந்தை நிச்சயித்தபூமான் (வே)
சந்தமுழங்குந் தமிழ்வேலாயுதன்
முந்திவணங்கும் பரமாதரர (வே)

செஞ்சுருட்டி] கண்ணிகள் [ஆதி.

தவம்புரிந்துண்மைப்பொருள் கண்டவர் தாரணியிற்
ஸச்சிதானந்தயோகியே உலகமெங்கும் [கடப்பை
மெச்சும் பெறுவிவேகியே விரி
தாரணிக்குளதி ரகஸ்யமானதை
பூரணத்தில்மிக வெளியினிலோதிய
சத்துவபோகத்யாகியே சந்தேகமற்ற
தத்துவஞானயோகியே (த)
பவம்பெருஞ்சஞ்சிதவினையற்றிடபாரவஷ்ட்டாங்கயோகம்
பழகித்தெரிந்தஜோதியே பத்மாசன
வழகிற்சிறந்த நீதியே (த)

இந்துஸ்த்தான்தோடி] பல்லவி [ஆதி.

சமாதியோகதவ சாதனநிதி (ச)

அநுபல்லவி

ப்ரமாதமானதாகும் ஜீவ ப்ரம்மைக்ய வேதாந்தம்
பேரின்பப் பாலூற்றிவைத்த பெரும்பாண்டம்
பெற்றுதந்தசாந்தம் பற்றும்சிந்தைகாந்தம் வரும்
பிறப்பெனுங்கடல் தனைக்கடந்ததி
சிறப்படைந்தொரு நினைப்பினின்றிடு
பிஞ்சகனென்றபரந்தனில் சிந்தனை (ச)
விவேகமீறும்பதினெண்சித்தர் மேன்மைபெற்ற நாயனர்
வேமன்னர் பட்டினத்தார் பத்திரகிரியார்
மிக்கக்களித்துரைத்தார் நிற்க ஒளித்துவைத்தார் அதை
வெட்டவெளியுடன் மட்டிமடையநு
மிட்டபரகதி திட்டமுடனுற
விரித்து வழுத்தும் பெருத்நு பழுத்த (ச)

தத் ஸத்

ஸ்ரீ பரப்பிரம்மணே நமஃ

நூலாசிரியர் குருஸ்துதி.

ஆனந்த மானந்த கரம் ப்ரஸந்நம்
ஞானஸ்வ ரூபம் நிஜபோத யுக்தம்
யோகீந்த்ர மீட்யம் பவரோக வைத்யம்
ஸ்ரீ ஸத்குரும் நித்யமஹம் நமாமி.

ஸந்தோஷத்தை உண்டாக்கப்பட்டவனும், அனுக்ரஹம் கொடுக்கப்பட்டவனும், ஆநந்த ஸ்வரூபனுய் இருக்கப்பட்டவனும், தான்தாணுயிருந்து யோகீஸ்வரர்களால் துதிக்கப்பட்டவனும், ஸம்சாரமென்னும் வியாதிக்கு வைத்யனுயும் குருவாயும் இருக்கப்பட்ட உன் ஒருவனுக்கே இரண்டு கைகளையும் குவித்து நமஸ்கரிக்கின்றேன்.

நமோஸ்த்து குரவே தஸ்மை இஷ்ட்டவேத ஸ்வரூபிணே
யஸ்யவாக்யாம் ருதம்ஹந்தி விஷயம் ஸம்ஸார பங்கிலம்.

யாருடைய அம்ருத வாக்கினல் ஸம்சாரமென்னும் விஷத்தைப் போக்கடிக்கின்றதோ அப்படிப்பட்ட குருநாதனுக்கு நமஸகரிக்கின்றேன்.

நமஸ்த்தே ஸததே ஜகத்காரணய
நமஸ்த்தே சித்தே ஸர்வலோ காஸ்ரயாய
நமோத்வைத தத்வாயா முக்தி ப்ரதாய
நமோ ப்ரஹ்மணே வ்யாபிநே ஸாஸ்வதாய.

சுயம்ப்ரகாசனும், உலகத்திற்கெல்லாம் ஞானஸ்வரூபனும் உலகத்தைக் காப்பாற்றப்பட்டவனும், நீ நான் என்னும் பேதமில்லாமல் இருக்கப்பட்டவனும், எல்லாவற்றிலும் சமரசமாய் இருக்கப்பட்டவனும், மோக்ஷத்தைக் கொடுக்கப்பட்டவனும், எப்பொழுதும் ப்ரம்மமாய் இருக்கப்பட்டவனுமாகிய உனக்கு நான் நமஸ்கரிக்கின்றேன்.

வயம் த்வாம் ஸ்மராமோ வயம் த்வாம் பஜாமோ
வயம் த்வாம் ஜகத் ஸாக்ஷிரூபம் நமாமஹ
நவேகம் நிதானம் நிராலம்ப மீஸம்
பவாம்போதபோதம் ஸரண்யம் வ்ரஜாமஹ.

நான் உன்னை துதிசெய்கிறேன், பஜனை செய்கிறேன், ஜகத்திற்கெல்லாம் சாக்ஷிபூதமாயிருக்கும் உனக்கு நமஸ்கரிக்கின்றேன். நீயே சத்ய ஸ்வரூபன், ஆதிபுருஷன் நீயே, எந்த ஆதாரமும் இல்லாமல் வெட்டவெளியாய் இருக்கப்பட்டவன் நீயே, சம்ஸாரமென்னும் சமுத்திரத்தைக் கடந்து செல்வதற்கு தோணியைப்போல் இருக்கப்பட்டவன் நீயே இப்படிப்பட்ட உன்னை நமஸ்கரிக்கின்றேன்

த்வமேவ மாதா ச பிதா த்வமேவ பந்துஸ்ச்ச ஸகா த்வமேவ
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ ஸர்வம் மமதேவதேவ.

எனக்கு தாயும் நீயே, தந்தையும் நீயே, ஸ்னேகிதனும் நீயே, பந்துவும் நீயே, வித்தையும் நீயே, தனமும் நீயே, தைவமும் நீயே, எல்லாம் நீயாகவே இருப்பதனால் உன்னை நான் நமஸ்கரிக்கின்றேன்.

ஜனன மரண ரகஸ்யம்

மாம்சக்கண்கள் இரண்டு மனக்கண் ஒன்று இவைகள் செய்யும் வேலைகள்.

சிறு குழந்தைமுதல் பெரியோர்கள் வரையில் அவரவர்களின் ஜாண்களால் அவரவர்களின் சரீரத்தை அளந்து பார்த்தால் எண்ஜாண்கள் சரீரமேயிருக்கும். இந்த எண் ஜாண் சரீரத்திற்கும் சிரசே பிரதானம். இந்த சிரசில் எது பிரதானமென்றால், இரண்டு கண்கள். இந்த இரண்டு கண்களிலும் எது பிரதானமென்றால், கண்களில் இருக்கும் கருவிழிகள். இதிலும் பிரதானம் எதுவென்றால், கருவிழிகளின் மத்தியில் உள்ள கருவி அக்கருவியின் மத்தியில் ரந்திர மொன்றுண்டு. அந்த ரந்திரம்தான் கண்களுக்கு முக்கியமான வஸ்து.

ஒரு வீட்டிற்கு இருக்கும் முதல் வாசற்படி இருபக்கமும் இரண்டு ஜன்னல்கள் எப்படியிருக்கின்றனவோ அதுபோல் சரீரமென்னும் வீட்டின் மேல்புரமாயிருக்கும் இரண்டு கண்களும் இரண்டு ஜன்னல்களாய் இருக்கின்றன. இக்கண்கள் மாம்சமாய் இருப்பதனால் எந்த வஸ்துவையும் அறியாது. ஆனால், இக்கண்கள் சுழன்றுசுழன்று எல்லா வஸ்துக்களையும் காட்டும். அப்பொழுது அக்கண்ணில் இருக்கும் ரந்திரங்களின் வழியாய் மனம்பார்த்து அவ்வஸ்துக்களை அறிந்து அதற்குவேண்டிய வேலைகளுக்காக மனம் ஆலோசனை செய்துகொண்டிருக்கும். கண்களுக்குக் கருவிழிகளும், அக்கருவிழிகளின் மத்தியில் ஒருகருவியும், அதன் மத்தியில் ரந்திரமும் இல்லாவிட்டால் மனம் எந்த வஸ்துக்களையும் பார்த்து எதையும் அறியமாட்டாது. ஆதலால், சரீரத்திற்கெல்லாம் கண்களின் கருவிழிகளும்,

அதன் மத்தியிலுள்ள கருவிழியும், அதன் மத்தியில் ரந்திரமும், பிரதானமாய் இருக்கின்றன. சரீரமென்னும் வீட்டிற்கு இரண்டு கண்களும் இரண்டு ஜன்னல்களாயிருந்து, அந்த ஜன்னல்களின் வழியாய் மனம்பார்த்து எல்லா வஸ்த்துக்களையும் கண்டறிகிறது. இதுவரையில் கண்களின் விஷயம் சொன்னோம். கண்களில் இருக்கும் ரந்திரங்களின் வழியாய் ஒருவஸ்துவை மனம் அறிந்து அம்மனம் செய்யும் வேலைகளை இனி சொல்லப்போகிறோம்.

பதினாயிரம் மைல் தூரத்தில் இருக்கும் பட்டணத்திற்குப் போக ஒருவன் பிரயாணப்பட்டு கப்பல் ஏறி சில மாதங்கள் சென்றபிறகு அவ்வூர் போய்ச் சேர்ந்தபின் சில மாதங்கள் அங்கிருந்து அவன் வேலைகளைப் பார்த்துக்கொண்டு மறுபடியும் தன் ஊர்வர பிரயாணப்பட்டு வரும்பொழுது அவன் இருந்த வீட்டின் மாடத்தில் ஒரு அதிசயமான வஸ்து இருந்தது. அப்பொழுது அவன் அம்மாடத்தினிடம் சென்று சற்றுநேரம் நின்று அவ் வஸ்துவை நன்றாய்ப்பார்த்து பிறகு, கப்பலேறி அனேகமாதங்கள் சென்றபிறகு தன் ஊர்வந்து சேர்ந்தான். சேர்ந்து சில மாதங்கள் சென்றபிறகு, முன் மாடத்தில் கண்ட அதிசயமான வஸ்துவைப் பார்க்கவேண்டுமென்று ஞாபகம் வந்து ஓரிடத்தில் உட்கார்ந்து கண்களைமூடி இரண்டு கண்களின் புருவமத்தியில் அவ்வஸ்துவை மனதினால் நினைத்துப் பார்த்தான். அப்பொழுது அந்த மாடமும், அம்மாடத்திலிருந்த அதிசயமான வஸ்துவும் அந்தக்ஷணமே அவன் மனதிற்குக் காணப்பட்டது. ரெப்பைமூடி மவ்வளவு நேரமும் ஆலஸ்யம் இல்லாமல் பதினாயிரம் மைல் தூரத்திலிருந்த வஸ்து எவ்வளவு சீக்கிரமாய்க் காணப்பட்டதோ பாருங்கள். பதினாயிரம் மைல் தூரமே அல்ல. அனேக லக்ஷம் மைல் தூரத்தில் இருந்தபோதிலும் சரி.

அவ்விடம் பார்த்த வஸ்துவைத் தன் வீடுவந்து சேர்ந்த பிறகு, கண்களைமூடி அவ்வஸ்துவை மனதினால் நினைத்தவுடன் அந்தக்ஷணமே அவ்வஸ்து மனக் கண்ணுக்குக் காணப்படும். இம் மனோவேகத்திற்குச் சமானமான வஸ்து உலகத்தில் எதுவுமேயில்லை. இம் மனமானது, அதல விதல சுதல பாதாள லோகமென்கிற பதினான்கு உலகங்களையும் பார்த்துக்கொண்டு மறுபடியும் அந்த க்ஷணமே வந்துவிடும். இதற்கே மனக்கண் என்று சொல்லப்படும்.

இந் நூலாசிரியராகிய ஸ்ரீ யோகீஸ்வரர் இம் மனக் கண்ணால் பன்னிரண்டு வருஷங்கள் மானசபூஜை எவ்வாறு செய்துவந்தாரோ அதை இனி சொல்லப்போகிறோம் கேளுங்கள்.

இந் நூலாசிரியராகிய ஸ்ரீ யோகீஸ்வரர் மனக் கண்ணால் மானசபூஜை செய்தது.

ஓ சகோதர! சகோதரிகளே!!

தென் இந்தியாவில் செங்கல்பட்டு ஜில்லா இருக்கின்றது. இந்த ஜில்லாவில் காஞ்சிநகர் என்கிற பிரசித்திப் பெற்ற திவ்ய க்ஷேத்திரம் இருக்கின்றது. இந்நூலாசிரியர் சிவமதஸ்த்தர், துளுவவேளாள ஜாதியில் பிறந்தவர். மேற்சொல்லிய காஞ்சிநகரில் பச்சையப்பன் பாடசாலை இருக்கின்றது. அப்பாடசாலையில் இந்நூலாசிரியர், 1877௵ வாசித்தார். அப்பொழுது பன்னிரண்டு வயதுடைய சிறியவராய் இருந்தார். இவ்வாறு இருக்கும்பொழுது ஒருநாள் காஞ்சி நகரிலுள்ள எல்லா கோவில்களையும் பார்க்கவேண்டுமென்கிற ஓர் எண்ணமுண்டாய் அதன் பிறகு ஸ்ரீ காஞ்சிவரதர், ஸ்ரீ நரசிங்கப்பெருமாள், ஸ்ரீ உலகளந்தப்பெருமாள், ஸ்ரீ பச்சைவண்ணர், ஸ்ரீ

வைகுண்டப்பெருமாள், ஸ்ரீ காமாக்ஷியம்மன், ஸ்ரீ கச்சாலீஸ்வரர், ஸ்ரீ சுப்பிரமணியர், ஸ்ரீ சப்பாணிப்பிள்ளையார், ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரர் முதலாகிய கோவில்களுக்குச் சென்று அந்த விக்கிரகங்களையெல்லாம் தரிசித்துவந்தார். அக்காலத்தில் பவழவண்ணர் கோவில் கட்டவில்லை. அதன் பிறகு கட்டினார்கள். மேற்சொல்லிய விக்கிரகங்களையெல்லாம் தரிசித்து வந்தபிறகு இரவு சயனித்து தனக்குள் என்ன ஆலோசனை செய்தாரென்றால்,

ஆஹா! இதென்ன ஆச்சரியம்! கடவுளுக்கு இத்தனை ரூபங்களுண்டோ? அவர் ஒரே ரூபமாயல்லவோ இருக்க வேண்டும். அப்படியிராமல், ஒன்று பெரிதாயும் ஒன்று சிறியதாயும் ஒன்று குட்டையாயும் ஒன்று உயரமாயும் மற்றொன்று பார்க்க பயங்கரமாயும் அகோர ரூபமாயும் இருக்கின்றனவே என்று வெகுநேரம் ஆலோசித்துப் பிறகு ஓர் எண்ணம் தோன்றிற்று. அதாவது நான் சிவகுலத்தில் பிறந்ததனால் சிவனையே பூஜை செய்யவேண்டுமென்று எண்ணமுண்டாய் காலை ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரர் கோவிலுக்குச் சென்று அங்கு குருக்கள் லிங்கத்திற்கு எவ்வாறு பூஜை செய்கிறாரோ அதைப் பார்த்துவந்து நானும் அதுபோல் மனதினால் பூஜை செய்யவேண்டுமென்று நினைத்துப் பிறகு மறுநாள்காலை ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரர் கோவிலுக்குச் சென்று குருக்கள் பூஜை செய்யும்பொழுது இந்நூலாசிரியர் பார்த்தார்.

குருக்கள் முன்னாள் பூஜைசெய்த புஷ்பங்களையும், லிங்கத்திற்குப் போட்டிருந்த தங்கப் பூணூல், ஆவடையாருக்குச் சுற்றியிருந்த வஸ்திரம் இவைகளை யெல்லாம் எடுத்தார். அந்த லிங்கம் ஆதியில் அம்மன் ஆற்றுமணலை நான்கு பட்டைகளாய்க் குவித்து லிங்கம் அமைத்து அந்த லிங்கம் அந்ததேவியால் பூஜை செய்யப்பட்டுவந்தது.

ஆதலால், அந்த லிங்கத்திற்கு அபிஷேகம் செய்தால் கரைந்துவிடுமென்று எண்ணி லிங்கத்திற்கு அபிஷேகம் செய்யாமல்ஆவடையாருக்குமாத்திரம் அபிஷேகம்செய்து ஆவடையாருக்கு வஸ்திரம் சுற்றி தங்கப் பூணூலை மாட்டி சிரசில் ரோஜாபுஷ்பம் வைத்து அலங்கரித்து வில்வத்தால் அர்ச்சனைசெய்து தூபதீப நைவேத்யம் லிங்கத்திற்குக் காட்டினார். இதுகளையெல்லாம் இந்நூலாசிரியர் நன்றாய்ப் பார்த்து வீடுவந்து சேர்ந்து மறுநாள் முதல் ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரரை தன் † உபாசனாமூர்த்தியாய் மனதில் நினைத்து கீழ்சொல்லுவதுபோல் மனதினால் பூஜைசெய்துவந்தார்.

ஐயா! இந்நூலாசிரியராகிய ஸ்ரீ யோகீஸ்வரர், 1877௵ ஸ்ரீ காஞ்சி நகரிலுள்ள பச்சையப்பன் பாடசாலையில் வாசிக்கும்பொழுது பன்னிரண்டு வயதுடைய சிறியவராய் இருந்தார். அப்பொழுது எவர்களிடமும் உபதேசம் பெறாமல் தனக்குத்தானாகவே ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரரை மனக்கண்ணால் பார்த்து பன்னிரண்டு வருஷங்கள் பூஜைசெய்துவந்ததை இனி சொல்லப்போகிறோம்.

தன் வீட்டிலிருக்கும் பூஜை அறைக்குள் சென்று கதவைச்சாற்றித் தாள்போட்டு வடக்குமுகமாய் ஆசனத்தின் மேல் உட்கார்ந்து கண்களைமூடி அசையாமலும், கூன் வளையாமலும் நேராய்நின்று சின்முத்திரையை விரல்களால் பிடித்துத் தன் புருவமத்தியில் என்றால், கண்களுக்குமேல் இருக்கும் இரண்டு புருவங்களின் மத்தியில் பார்த்தார். அங்கு ஒன்று மில்லை. வெட்டவெளியாயிருந்தது. அந்த வெளியில் நான்குபக்கங்களிலும் மிகவும் உயரமுள்ள தங்க திருமதில் சுவர்களில் கிழக்குமுகமா யிருக்கும் சுவர் மத்தியில் கோபுரம்கட்ட இடம்விட்டு நான்கு சுவர்கள் இருக்க வேண்டுமென்று மனதில் நினைத்தார். இவர் எவ்வாறு

† உபாசனாமூர்த்தி=மோக்ஷத்திற்கு வழிகாட்டும் கடவுள்.

இருக்கவேண்டுமென்று மனதில் நினைத்தாரோ அதுபோல் அந்த வெளியில் காணப்பட்டது. பிறகு, நான்கு மதில் சுவர்களில் கிழக்குமுகமாயிருக்கும் சுவரில் இடம் விட்டிருந்த ஸ்தானத்தில் பதினாறு தங்கக் கலசங்களுடன்மிகவும் உயரமுள்ள தங்கக்கோபுரம் இருக்கவேண்டுமென்று நினைத்தார். இவர் எவ்வாறு நினைத்தாரோ அதுபோல் அங்கு காணப்பட்டது. பிறகு, நான்கு திருமதில் சுவர்களுக்கு மத்தியில் மூலஸ்தானம் கோவில்கட்ட எட்டடி உத்தளவுவைத்து சுற்று நான்கு பக்கங்களிலும் தங்கத்தினால் நான்குசுவர்களும் அதற்குமேல்நெல்லிக்கனிபோல்கோபுரமும் அதன்மேல் தங்க ஒத்தைக் கலசமும் இருக்கவேண்டுமென்று நினைத்தவுடன் அதுபோல் அங்குகாணப்பட்டது.

மூலஸ்தானம் கோபுரம் தங்கத்தினால் கட்டிமுடிந்த பிறகு, அந்த மூலஸ்தானம் மத்தியில் ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரரை எழுந்தருளச்செய்ய இரண்டடி உயரம் இரண்டடி அகலமுள்ள தங்கத்தினால் மேடையும்,மேடை சுவர் நான்கு பக்கமும்மத்தியில்நவரத்தினங்கள் புதைத்திருக்கவேண்டுமென்று நினைத்தவுடன் அதுபோல் அங்கு உண்டாயிற்று. பிறகு, கருப்பாயும், மிகவும் பளபளப்பாயும் சிலையினால் ஆவுடையார் அம்மேடை மத்தியில் இருக்கவேண்டுமென்று நினைத்தார் அதுபோல் ஆவுடையார் அங்குக் காணப்பட்டது. அம்மேடைக்கு வலது கைப்புறமாய் ஈஸ்வரருக்கு நைவேத்யம்வைப்பதற்காகஇரண்டடி உயரம் ஆறடி நீளம் ஒண்ணரையடி அகலமுள்ள தங்க பீடமும், ஆவுடையார்இருக்கும் நவரத்தினமேடைக்கு இருபக்கமும் எட்டடி உயரமுள்ள இரண்டு தங்கக் குத்துவிளக்குகள் இருக்கவேண்டுமென்று நினைத்தவுடன் இரண்டு தங்க குத்துவிளக்குகளும் அந்தயிடத்தில் காணப்பட்டன. பிறகு, மூலஸ்தானம் வாசற்படியில் வெங்கல மணிகளை

யுடைய இரண்டு தங்கக் கதவுகள் அவ்வாசற்காலில் அமைக்கவேண்டுமென்று நினைத்தார். அதுபோல்வெங்கல மணிகளையுடைய இரண்டு கதவுகள் வாசக்காலில் அமைக்கப்பட்டது. கோவிலை தங்கத்தினால் கட்டிமுடிந்த பிறகு,

மூலஸ்தானத்திற்குக் கிழக்குப்புரமாய் வலதுகைப் பக்கம் ஒரு பெரிய தங்க மடப்பள்ளியும், அதன் மத்தியில் கிணறும் இருக்கவேண்டுமென்று நினைத்தார். பிறகு, அதில் தங்கப்பானைகள், குடங்கள், கிண்ணங்கள், மேல்மூடி தட்டுடன் இருக்கவேண்டும் அன்றியும், உறல், உலக்கை, அம்மி, ருப்புஉரல், முறம், துடைப்பம் இவைகளும் மடப்பள்ளியில் இருக்கவேண்டுமென்று நினைத்தமாத்திரத்தில் அதுகளெல்லாம் அங்கு உண்டாயிற்று. பிறகு,

மூலஸ்தானத்திற்குப் பின்புரம் வலதுகைப்பக்கம் நவரத்தினங்கள் இழைத்தப் பதினாறு படிகளையுடைய ஒரு திருக்குளம் இருக்கவேண்டுமென்று நினைத்தவுடன் அதுபோல் அங்கு குளம் காணப்பட்டது. பிறகு, அதில் பன்னிரண்டு படிகள்வரையில் கங்கைவந்துஇருக்கவேண்டுமென்று நினைத்தார். அதுபோல் கங்கைவந்திருந்தது. பிறகு, அவ்வாலயம் திருமதில் சுவருக்குள் இடது கைப்புறமாய் பூந்தோட்டம் இருக்கவேண்டும், அத்தோட்டத்தில் தேவலோகத்திலுள்ள மிகவும் சிரேஷ்டமான வாசனையுடைய பாரிஜாத புஷ்பச்செடிகளும், மல்லிகை, முல்லை இருவாக்ஷி, தவனம், குரிவேர், மரிக்கொழுந்து, சாமந்தி, கதிர்பச்சை முதலாகிய புஷ்பச் செடிகளும்,செழிப்பாய்த் தழைத்து தாழ்ந்திருக்கும் வில்வச்செடிகளும் இருக்கவேண்டுமென்று நினைத்த உடனே இவைகளெல்லாம் அங்கு உண்டாயிற்று. பிறகு,

முன்கட்டிய தங்க மடப்பள்ளியில் மிகவும் திவ்யமான பச்சரிசி, கோதுமை, துவரம்பருப்பு, கடலை, உளுத்தம்

பருப்பு, கடலைபருப்பு, பச்சைப்பருப்பு, மிளகு, சீரகம், வெந்தயம், காயம், உப்பு, புளி, மிளகாய், தனியா, சர்க்கரை பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, திராக்ஷை, முந்திரிபருப்பு, காமதேனுவின் பால், கட்டித்தயிர், வெண்ணெய், நெய், கோதுமைமாஉளுத்தம்பருப்பு கடலைபருப்பு முதலானவைகளின் மாவு தினுசுகள் இதுகளெல்லாம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தங்கபாத்திரத்தில் இருந்து அதன்மேல் தட்டுகளால் மூடவேண்டும். பிறகு, மா, வாழை, பலா முதலிய பழதினுசுகள் மடப்பள்ளியில் இருக்க வேண்டுமென்று நினைத்தவுடன் அவைகளெல்லாம் அங்கிருந்தன. இவைகளெல்லாம் சேகரித்து வைத்தபின்,

வேகவதி ஆற்றில் அம்மன் மணலை நான்கு பட்டைகளாய்க் குவித்து லிங்கமாய்ச் செய்து பூஜித்த லிங்கம் போன்ற லிங்கம் கருப்புநிரமாய் சிலையில்செய்து முன் அமைத்த ஆவடையார் மத்தியில் வந்து அமரவேண்டுமென்று மனதில் நினைத்தவுடன் அதுபோல் அந்த லிங்கம் வந்து ஆவடையார் மத்தியில் அமர்ந்தது. இனி இந்த லிங்கத்தைப் பூஜை செய்வதற்காக பிராம்மணர்களை வரவழைக்கவேண்டுமென்று எண்ணி பத்து பிராமணர்களை மனதில் நினைத்தார். இவர் நினைத்தவுடன் பத்து பிராம்மணர்களும் வந்து ஒன்றும் பேசாமல் இவர் எதிரில் நின்றார்கள். அவர்களில் ஐவரை மடப்பள்ளிக்குச் சென்று அங்கு சேகரித்து வைத்திருக்கும் சாமான்களில் சுவாமி நைவேத்தியத்திற்காக,

சர்க்கரைப்பொங்கல், மிளகுபொங்கல், புளியோரை, ததம்பம், ததியோதனம், தேன்குழல், அப்பம், வடை, தோசை, புட்டு, மா, வாழை, பலா, காமதேனுவின் கட்டித் தயிர், பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, கற்கண்டு இவைகளையெல்லாம் காமதேனுவின்பாலில் கலந்து சுண்டக்காய்ச்சி

தங்கக் கிண்ணத்தில்விட்டு இவைகளையெல்லாம் சீக்கிரமாய்த் தயார்செய்யவேண்டுமென்று நினைத்தவுடன் ஐந்து பிராம்மணர்களும் மடப்பள்ளிக்குச் சென்றுவிட்டார்கள். பிறகு, மூன்று பிராம்மணர்களை நந்தவனத்திற்குச்சென்று வில்வம் புஷ்பங்களை பூக்குடலையில் கொண்டுவரவேண்டுமென்று நினைத்தவுடன் மூவரும் அதுபோல் நந்தவனத்திற்குச் சென்று விட்டார்கள் பிறகு,

மற்ற இருவரையும் ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரருக்கு அபிஷேகம் செய்ய மூலஸ்தானத்திற்குள் அழைத்துச்சென்றார். அங்கு சென்றபிறகு லிங்கத்தின் இருபக்கம் இருக்கும் தங்கக்குத்துவிளக்குகள் எரியவேண்டுமென்று நினைத்தார். அதுபோல் இரண்டு குத்துவிளக்குகளும் எரிந்தன. விளக்குகள் எரிந்தபின், தங்கக்கிண்ணத்தில் எண்ணெய் அரைத்த சீக்கா தங்கக்குடத்தில் திருக்குளத்திலிருக்கும் ஜலம் காமதேனுவின் பால் தயிர் இளநீர் நெய் தேன் பஞ்சாம்ருதம் பன்னீர் சந்தனம் விபூதி தங்கப்பூணூல் ரோஜா புஷ்பம் இவைகளெல்லாம் முன் அமைத்த தங்கப்பீடத்தின்மேல் வந்திருக்கவேண்டுமென்று நினைத்தார். அதுபோல் அவைகளெல்லாம் பீடத்தின்மேல் வந்திருந்தன. அதன் பிறகு,

பிராம்மணர்கள் இருவரையும் பார்த்து லிங்கத்திற்கு அபிஷேகம் செய்வதற்காக மேல்வேஷ்டியை இடுப்பில் கட்டவேண்டுமென்று நினைத்தார். இவர் நினைத்தவுடன் அதுபோல் அவர்கள் இருவரும் மேல்வேஷ்ட்டியை இடுப்பில் கட்டினார்கள். பிறகு, ஒருவர் அபிஷேகம்செய்ய லிங்கத்தினிடம் நிற்கவேண்டுமென்று நினைத்தார். அதுபோல் ஒருவர் லிங்கத்தினிடம் நின்றார். மற்றவரை எண்ணெய் எடுத்துக் கொடுக்கும்படி நினைத்தார். அதுபோல் அவர் எண்ணெய் எடுத்துக் கொடுக்க மற்றவர் வாங்கி லிங்கம்

சிரசில்விட்டு தேய்க்க நினைத்தார். அதுபோல் அவர்செய்ய பிறகு சீக்காய்ஜலம் கொடுக்க நினைத்தார். அதுபோல் அவர் கொடுக்க சீக்காஜலத்தால் லிங்கத்திற்குத் தேய்க்க நினைத்தார். அதுபோல் அவர் தேய்த்துக்கொண்டிருக்கும் பொழுது தங்கக்குடத்திலிருக்கும் ஜலத்தைக் கொடுக்கும் படி நினைத்தார். அதுபோல் அவர் கொடுக்க மற்றவரை வாங்கி அபிஷேகம் செய்யும்படி நினைத்தார். அதுபோல் அவர் வாங்கி ஜலத்தால் அபிஷேகம் செய்தார். பிறகு,

தங்கக்குடத்திலிருக்கும் பாலைக் கொடுக்கும்படி நினைத்தார். அதை மற்றவர் வாங்கி அபிஷேகம் செய்ய நினைத்தார். அதுபோல் அப்பாலை வாங்கி அபிஷேகம் செய்யும்பொழுது லிங்கத்தின் கருப்பு நிரமெல்லாம் மாறி லிங்கம் சுத்த வெண்மையாய்விட்டது. பிறகு ஜலத்தால் அபிஷேகம்செய்ய நினைத்தார். அதுபோல் ஜல அபிஷேகம் செய்தார். இதுபோல், தயிர் இளநீர் நெய் தேன் பஞ்சாம்ருதம் பன்னீர் சந்தணம் விபூதி ஒவ்வொரு தினுசுகளாய் அபிஷேகம்செய்ய நினைத்தார். அதுபோல் அவர்கள் செய்துமுடிந்தபின், லிங்கம் ஆவுடையார் இவைகளை தளுவத்தால் துடைத்து பதினாறு முழம் நீளமுள்ள பட்டு பீதாம்பரம் வேஷ்டியை ஆவுடையாருக்கு அணிய வேண்டுமென்று அவர்களுக்கு ஆஞ்ஞாபித்து, நந்தவனத்திலிருக்கும் மூவரும் வில்வ, புஷ்பக் குடல்களை சீக்கிரமாய்க் கொண்டுவரவேண்டுமென்று நினைத்தார். இவர் நினைத்தவுடன் அம்மூவரும் புஷ்பக் குடல்களைக் கொண்டு வந்தார்கள். பிறகு அவர்களைப் பார்த்து மடப்பள்ளிக்குச்சென்று அங்கு தயார் செய்துவைத்திருக்கும் பிரசாத தட்டுகளை நீங்கள் மூவரும், அவர்கள் ஐவரும் சேர்ந்து கொண்டுவந்து தங்கப்பீடத்தின்மேல் வைக்கவேண்டுமென்று நினைத்தவுடன் அவர்கள் மூவரும் மடப்பள்ளிக்

குச்சென்று எட்டு பெயர்களும் பிரசாதங்களைக் கொண்டு வந்து தங்க பீடத்தின்மேல் வைத்து நின்றார்கள்.

அதன்பிறகு, ஆவுடையாருக்குப்பீதாம்பரம் அணிந்து முடிந்தபின் லிங்கத்திற்கு தங்கபூனூல் அணிந்து ரோஜா புஷ்பம் லிங்கம் சிரசில் வைக்க நினைத்தார். அதுபோல் அவர்கள் வைத்தார்கள். பிறகு, வில்வக் குடல்களைக் கொடுத்து அர்ச்சனை செய்ய நினைத்தார். அதுபோல ஒருவர் புஷ்பக்குடலை கொடுத்தார். அதை மற்றவர் வாங்கி அர்ச்சனை முடிந்ததும் தூபதீப நைவேத்யங்களைக் காட்டும் படி நினைத்தார். அதுபோல் அவர்கள் தூபதீபம் காட்டி, அதன்பிறகு, சர்க்கரைப்பொங்கல் மிளகுபொங்கல் புளியோரை கதம்பம் ததியோதரம் தேன்குழல் அப்பம் வடை தோசை புட்டு, மா வாழை பெலா காமதேனுவின் கட்டித் தயிர், பச்சைக்கர்ப்பூரம்குங்குமப்பூகற்கண்டுகளால் காய்ச்சிய காமதேனுவின்பால் இவைகளையெல்லாம் ஒவ்வொரு தட்டும், கிண்ணங்களும்கொடுத்துநைவேத்யம்காட்டும்படி நினைத்தார். இவர்நினைத்ததுபோல் அவர்கள் செய்தார்கள்.

இவைகளையெல்லாம் செய்து முடிந்தபின் விபூதி பிரசாதம் தரவேண்டுமென்று நினைக்க அதுபோல் விபூதி பிரசாதம் கொடுப்பார். பிறகு, தங்கத்தட்டில் எல்லா பிரசாதம்வைத்து அடியேனுக்குத் தந்து மிகுதி பிரசாதங்களை பத்துப்பெயரும் எடுத்துக்கொண்டு கோவில் கதவைச் சாற்றிப் பூட்டி சாவியை அடியேனிடம் கொடுத்து வீட்டிற்குப் போகவேண்டுமென்று நினைத்தவுடன் அவர்கள் அதுபோல் எடுத்துக்கொண்டு வெங்கல மணிகளையுடைய தங்கக் கதவைச் சாற்றும்பொழுது 'கலகல' வென்று பெரிய சப்தம் கேழ்க்கும். அந்த சப்தத்துடன் கதவைச் சாற்றிப் பூட்டி சாவியை அடியேனிடம் கொடுத்துச் சென்றுவிடுவார்கள். பிறகு, பிரசாத தட்டை திருக்குளத்

தினிடம் கொண்டுபோய் படிமேல் உட்கார்ந்து சாப்பிட்டு சிறிது பிரசாதம் அடியேனுடைய தாய்க்குக் கொடுப்பது. மேற்சொல்லியதுபோல் பூஜைகளைச்செய்து பிரசாதம் சாப்பிட்டு முடிந்தபின் கண்களைத் திறந்துபார்த்தால், முன்னிருந்த பழைய சுவர்கள் மாத்திரம் காணப்படும். மற்றொன்றும் இராது. பிறகு பூஜை அறையைவிட்டு வெளியில் வந்து சாப்பிட்டுத் தன் வேலை எதுவோ அதைப் பார்ப்பார். பிறகு,

மாலை பூஜை அறைக்குள்சென்று ஆசனத்தில் உட்கார்ந்து கண்களைமூடி காலைவந்த் பிராம்மணர்களை நினைப்பார். நினைத்தவுடன் பத்துப்பெயரும் எதிரில்வந்து நிற்பார்கள். குருக்களிடம் கோவில் சாவியைக் கொடுத்து கதவைத்திறந்து காலை பூஜைசெய்த புஷ்பம், வில்வம் முதலானவைகளை எடுத்துப் பிறகு ஐந்துபேர் பிரசாதம் செய்ய மடப்பள்ளிக்கும், வில்வம், புஷ்பம் கொண்டுவர மூன்றுபேர் நந்தவனம் செல்லவேண்டுமென்று நினைப்பார். நினைத்தவுடன் அவர்கள் அதுபோல் சென்றுவிடுவார்கள். பிறகு, மூலஸ்தான கோவிலிடம் சென்று குருக்கள் கதவைத் திறக்கவேண்டுமென்று நினைப்பார் நினைத்தவுடன் கதவைத் திறப்பார்கள். அப்பொழுது 'கலகலகல' வென்று பெரும் ஸப்தம் கேழ்க்கும். அதன்பிறகு, காலை எவ்வாறு பூஜை செய்யப்பட்டதோ அதுபோல் மாலையிலும் செய்யப்படும். இதுபோல் இவர் பன்னிரண்டு வருஷங்கள் மானச பூஜை செய்துவந்தனர். மேற்சொல்லிய லிங்கத்திற்குப் பூணூல் சாற்றி சிரசில் ரோஜாபுஷ்பம் வைத்து இந்நூலாசிரியராகிய ஸ்ரீ யோகீஸ்வரர் பால்யத்தில் மனதினால் பூஜை செய்த லிங்கம் ☞ இதோ எதிரிலிருக்கும் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது பாருங்கள். அந்த லிங்கம் எதிரில் நந்தி, நந்தியின் பின்புறம் பலிபீடம்



இது, ஸ்ரீ யோகீஸ்வரர் மனதினால் பூஜைசெய்த லிங்கம்.

இருக்கின்றது. அதையும் கவனியுங்கள்: இந்நூலாசிரியராகிய ஸ்ரீ யோகீஸ்வரருக்கு இந்த லிங்கம் உபாசனாமூர்த்தியாய் இருப்பதனால் என்றால், மோக்ஷமென்னும் தம்சொந்த வீட்டிற்கு வழிகாட்டும் கடவுளாய் இருப்பதனால் இவர் மனதினால் பூஜைசெய்த லிங்கத்தை சிலையில் செய்வித்து, செங்கல்பட்டுஜில்லா பொன்னேரிதாலூக்கா 'பஞ்ஜேஷ்டி' என்னும் கிராமத்தில் இருக்கும் இவரது ஆஸ்ரமத்தில் தற்சமயம் அந்த லிங்கத்தை அங்கு வைத்திருக்கின்றார். இந்தியாவிலுள்ள கோவில்களில் இருக்கும் லிங்கங்கள் எல்லாம் குண்டாயிருக்கும். இந்த லிங்கம்போன்ற லிங்கம் இந்தியாவிலாகிலும், அல்லது மற்ற எந்த தேசங்களிலாகிலும் இராது. அதேனென்றால், ஸ்ரீ காஞ்சிநகரில் இப்பொழுது ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரர் கோவில் இருக்குமிடத்தில் முன்காலத்தில் வேகவதி ஆறு இருந்தது. அந்த ஆற்றுமணலை அம்மன் சதுரத்திற்குச் சதுரம் நான்கு பட்டைகளாய்ச் செய்து லிங்கம்போல் நிறுத்தி அதை அம்மன் பூஜை செய்துவந்தாள். அதனால் இந்த லிங்கம்போன்ற லிங்கம் எந்த தேசத்திலும் இல்லை. காஞ்சிநகர் மத்தியில் முன்காலத்தில் வேகவதி என்ற ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆறு இப்பொழுது சுமார் அரை மைல் தூரத்தில் ஒதுங்கிவிட்டது. இந்த ரகஸ்யங்களெல்லாம் அனேகர்களுக்குத் தெரியவராது. அதனால் வேகவதி ஆறு தூரத்தில் ஒதுங்கிவிட்டதை இந்நூல் மூலமாய் எல்லோருக்கும் தெரிவிக்கின்றோம்.

நூலாசிரியர் குரு உபதேசம் பெறுதல்.

இவர் பன்னிரண்டு வருஷங்கள் மானசபூஜை செய்த பின் வயது, 24-இருபத்திநான்கு ஆயிற்று. 25-வது, இருபத்தைந்தாவது வயதில் அதாவது, 1890௵ விவாகமாயிற்று. அப்பொழுது இவர்செய்திருந்த வியாபாரத்தில்நல்ல லாபம் வந்துகொண்டிருந்தபடியால் ஒரு துரையை ரயிட்டராய் வைத்திருந்தார். அப்பொழுது நாலுசக்ரமுள்ள குதிரை கோச்சுவண்டி இந்நூலாசிரியரிடம் இருந்தது.

இவ்வாறிருக்கும் சமயத்தில் ஒருநாள் இந்நூலாசிரியர் கோச்சுவண்டி சமீபமாய் நின்றிருந்தார். அச்சமயத்தில் யாரோ ஒரு பெரியவர் இவர் சமீபமாய் வந்துகொண்டிருந்தார். அவரை இவர் பார்த்து இவர் யாரோ மிகவும் பெரியவராய் இருக்கின்றார் என்று எண்ணிக்கொண்டிருக்கும்பொழுது இதற்குள் இவர் சமீபமாய்வந்து அவ்விடம் இருக்கும் கோச்சுவண்டியில் ஏறி உள்ளேசென்று உட்கார்ந்தார். பிறகு, இந்நூலாசிரியரையும் வண்டிக்குள் வரும்படியாய்க் கூப்பிட்டார். இவர் உள்ளே சென்றதும் தன் எதிரில் உட்காரும்படிச் சொன்னார். அதுபோல் உட்கார்ந்தார். உட்கார்ந்த பிறகு, கதவைச்சாற்றி வண்டியில் இருக்கும் ஆறு ஜன்னல் ரெக்கைகளையும் மேல்தூக்கி அவைகளுக்கிருக்கும் காற்றுவரும் இரக்கைகளைத் திறந்து சுவாமிகள் என்ன கேழ்க்கின்றாரென்றால், "நீ என்ன செய்கிறாய்" என்று கேட்டார். "நான் வியாபாரம் செய்கிறே"னென்று சொன்னது. "நான் அதைக் கேழ்க்கவில்லை என்ன பூஜை செய்கிறாய்" என்று சுவாமி கேட்டது.

அப்பொழுது பன்னிரண்டு வருஷங்களாய்ச் செய்து வந்த "மானசபூஜை"யை விவரமாய் சுவாமிகளுக்குச்

சொல்லிற்று. சுவாமிகள் அதைக் கேட்டவுடன் மிகவும் ஆச்சர்யப்பட்டு ஆள்காட்டும் விரலை மூக்கின்மேல் வைத்து "முன்ஜன்மத்தில் நீ நல்ல புண்ணியம் செய்தாய். அதனால் எந்த குருவும் உபதேசம் செய்யாமலே சிறு பிராயத்திலேயே இப்படிப்பட்ட அற்புதமான பூஜையைச் செய்து வந்தாய்" என்று சந்தோஷித்து, "இனி அந்த "ஏகாம்பரனை" பூஜை செய்யவேண்டாம். அது மிகவும் கீழ்ப்படி. அதற்கு மேல்படியாகிய "யோகத்தை" இப்பொழுது உபதேசிக்கின்றேன். இன்றுமுதல் யோகாப்பியாசம் செய்துவா" என்று சொல்லி, உடல், பொருள், ஆவி, இம்மூன்றையும் தத்தம் செய்துக்கொண்டு அஸ்த்த மஸ்த்தகசையோகம் செய்து என்றால், சுவாமிகள் வலதுகையை நூலாசிரியர் சிரசில்வைத்து கண்களைமூடி வெட்டவெளியாயிருந்து ஆசீர்வதித்தார். இதற்கே அஸ்த்த மஸ்த்தகஸய்யோகம் என்று சொல்லப்படும். இதன் கருத்து என்னவென்றால். அஸ்த்தம் என்றால் கை; மஸ்த்தகமென்றால் சிரசு; ஸய்யோகமென்றால் சேர்ப்பது (வைப்பது) கையை சிரசின்மேல் வைப்பது. இதற்கே அஸ்த மஸ்த்தக ஸய்யோகமென்று சொல்லப்படும்.

உடல், பொருள், ஆவி, இம்மூன்றையும் தத்தம்செய்துகொண்டு ரேசக-பூரக-கும்பக மென்கிற பிராணாயாமத்தை எவ்வாறு உபதேசித்தாரோ அதை இனி சொல்லப் போகிறோம்.

ரேசகமென்றால் மூச்சை வெளிவிடுவது. பூரகமென்றால் மூச்சை உள்ளுக்கிழுப்பது. கும்பகமென்றால் உள்ளுக்கிழுத்த மூச்சை வெளிவிடாமல் நிறுத்துவது. இதற்கே ரேசக-பூரக-கும்பக மென்று சொல்லப்படும்.

அதன்பிறகு சுவாமிகள் கண்களையும் இடது நாசியையும் மூடி வலது நுரையீரலில் தங்கியிருக்கும் மூச்சையெல்

லாம் ஓம்! ஓம்! ஓம்! என்னும் மந்திரத்தை மூச்சியில் சேர்த்து இரண்டு இரண்டு அங்குலம் நீளமவ்வளவு மூச்சை மிகவும் நிதானமாய் எல்லா மூச்சையும் வெளியில் விட்டு முடித்ததும் மறுபடியும் அதன் தொடர்ச்சியாகவே, ஓம்! ஓம்! ஓம்! என்னும் மந்திரத்தை மூச்சியில் 'சேர்த்து இரண்டு இரண்டு அங்குலம் நீளமவ்வளவு மூச்சை மிகவும் நிதானமாய் நுரையீரலில் எவ்வளவு மூச்சி அடங்குகிறதோ அவ்வளவு மூச்சையும் கொண்டுபோய் விழுங்கி மறுபடியும் அம்மூச்சி வெளிவராமல்இருக்கும்படி கண்டத்தினிடம் அதாவது தொண்டையிடம் மூடி, இரண்டு கைகளையும் இரண்டு துடைகள்மேல் வைத்து வலதுகை ஐந்து விரலையும் நிதானமாய் மடித்துப் பிறகு, இடதுகைச் சுண்டு விரலை மடித்துப் பிறகு மறுபடியும், வலதுகை ஐந்து விரலையும் மடித்து இடதுகை மோதிர விரலை மடித்து மறுபடியும் வலதுகை ஐந்துவிரலையும் நிதானமாய் மடித்து இடதுகை நடுவிரலைமடித்து,மறுபடியும் வலதுகை ஐந்துவிரலையும் நிதானமாய் மடித்துஇடதுகை ஆள்காட்டும் விரலை மடித்து மறுபடியும் வலதுகை ஐந்துவிரலையும் நிதானமாய் மடித்து இடதுகை பெருவிரலை மடித்தார். அப்பொழுது ஐயைந்து இருபத்தைந்து எண்ணும் வரையில் சுவாமிகள் மூச்சை நிறுத்தினார். பிறகு மூச்சிவிடும்பொழுது வலது நாசியை மூடி ஓம்! என்னும் மந்திரத்தை மூச்சியில் சேர்த்து இடது நாசியில் முகவாய்க்கட்டை வரையில் விட்டு, விட்ட அவ்வளவு மூச்சியில் ஓம்! என்னும் மந்திரத்தைச் சேர்த்து இடதுநாசியில் உள்ளுக்கிழுத்து இடது நாசியைமூடி, வலதுநாசியில் மூச்சை ஓம்! என்னும் மந்திரத்துடன் முகவாய்க்கட்டைவரையில் விட்டு, விட்ட அவ்வளவு மூச்சை வலது நாசியில் இழுத்து மூடி இதுபோல் மூச்சை இரண்டு நாசிகளிலும் ஓம்! என்னும் மந்திரத்துடன் மாற்றிமாற்றி

விட்டும், இழுத்தும் வந்து மூச்சியின் வேகம் அடங்கும் வரையில் செய்து மூச்சியின் வேகம் அடங்கியபின் விரல் களையெடுத்து சரீரத்தில் உண்டாகிய வியர்வையை கைக ளால் நன்ருய் அரக்கித்தேய்த்துப் பிறகு தளுவத்தால் துடைத்து ஆயாசம் தீர்த்துக் கொள்வதற்காக "சின் முத்திரையை" விரல்களால் பிடித்து கண்களைமூடி மூச்சி உள்ளே போகும்பொழுது அம்மூச்சியில் 'லோ' என்னும் மந்திரத்தைச் சேர்த்து மெதுவாய் உள்ளுக்கிழுத்து சற்று நேரம் நிறுத்தி மறுபடியும் 'ஹம்' என்னும் மந்திரத்தை மூச்சியில் சேர்த்து மெதுவாய் வெளியில்விட்டு இதுபோல் இரண்டு மூச்சியிலும் இரண்டு மந்திரங்களைச் சேர்த்து சுமார் ஐந்துநிமிஷங்கள் வரையில் மூச்சை 'ஸோஹம்' மந்திரத்தால் ஜபம் செய்தனர். இவ்வாறு செய்துமுடிந்த பின்.

இதுவரையில் வலது நாசியில் செய்ததுபோல் இடது நாசியிலும் செய்து ஐந்து நிமிஷங்கள் வரையில் 'ஸோஹம்' மந்திரம் மூச்சியில்சேர்த்து ஜபம்செய்து முடித்துப் பிறகு,

வலது இடது இரண்டு நாசிகளின்மேல் பெருவிரல், மோதிரவிரல்களைவைத்து இடது நாசியைமூடி மூச்சை ஓம்! என்னும் மந்திரத்துடன் வலதுநாசியில் முகவாய்க் கட்டைவரையில் விட்டு வலதுநாசியைமூடி, இடது நாசி யில் முகவாய்க்கட்டை வரையில் மூச்சை ஓம்! என் னும் மந்திரத்துடன் விட்டு இடது நாசியைமூடி, வலது நாசியில் முகவாய்க்கட்டைவரையில் மூச்சைவிட்டு இது போல் உள்ளே தங்கியிருக்கும் மூச்சையெல்லாம், வலது இடது இரண்டு நாசிகளிலும் விட்டுக்கொண்டேவந்து கடைசியில் மூச்சி கொஞ்சமாய் இருக்கும்பொழுது வலது நாசியில்விட்டு, அதன் தொடர்ச்சியாகவே மூச்சை வலது நாசியில் ஓம்! என்னும் மந்திரத்துடன் இரண்டங்குலம்

நீளமவ்வளவு மூச்சை உள்ளுக்கிழுத்து, வலதுநாசியைமூடி இடதுநாசியில் ஓம் என்னும் மந்திரத்துடன் இரண்டங்கு லம் நீளமவ்வளவு மூச்சை உள்ளுக்கிழுத்து இடதுநாசியை மூடி இரண்டு நுரை ஈரலிலும் எவ்வளவு மூச்சி பிடிக் கின்றதோ அவ்வளவு மூச்சையும் ஓம்! என்னும் மந்தி ரத்துடன் வலது, இடது இரண்டு நாசிகளிலும் உள்ளுக் கிழுத்துக்கொண்டேசென்று கடைசியில் மூச்சி கொஞ்ச மாய் இருக்கும்பொழுது வலதுநாசியில் இழுத்து விழுங்கி விரல்களை எடுத்து இதுவரை முன்பு இருபத்தைந்து எண் ணியதுபோல் இதிலும் எண்ணி முடிந்தபிறகு, வலது நாசி யைமூடி முகவாய்க் கட்டைவரையில் ஓம்! என்னும் மந்தி ரத்துடன் மூச்சை இடதுநாசியில்விட்டு, விட்ட அவ்வளவு மூச்சை ஓம்! என்னும் மந்திரத்துடன் இடதுநாசியில் உள் ளுக்கிழுத்து இடதுநாசியைமூடி வலதுநாசியில் முகவாய்க் கட்டைவரையில் ஓம்! என்னும் மந்திரத்துடன் மூச்சை விட்டு இதுபோல் மூச்சியின் வேகம் அடங்கும்வரையில் இரண்டு நாசிகளிலும் ஓம்! என்னும் மந்திரத்துடன் மூச்சை மாற்றிமாற்றி விட்டுக்கொண்டேவந்து மூச்சியின் வேகம் அடங்கியபிறகு விரல்களை எடுத்துவிட்டு வியர்வையைத் தேய்த்து முன்போல் ஐந்துநிமிஷங்கள் வரையில் 'ஸோ ஹம்' மந்திரத்துடன் ஜபம் செய்தார்.

இந்த மூன்று நாசிகளிலும் செய்தால்தான் ஒரு பிராணுயாமம், அல்லது ஒரு சந்தயாவந்தனமாகிறது. ஒரு மூக்கிலாகிலும் அல்லது, இரண்டு மூக்கிலாகிலும் செய்ய லாகாது. மூன்று நாசிகளிலும் செய்தே தீரவேண்டும்.

இன்று உனக்கு "பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ் வரர்" என்று ஞானப்பெயர் கொடுத்தோம். நீ இதுவரை யில் மனதினல் செய்துவந்த லிங்கபூஜையை இன்றுமுதல்

செய்யவேண்டாம் விட்டுவிடு. இந்த, பிராணாயாமத்தையே செய்துவா. இது, லிங்க பூஜையைவிட மேல்படி; லிங்க பூஜை மிகவும் தாழ்ந்தபடி. ஆதலால், இனி லிங்க பூஜையை விட்டுவிடு. என்றுசொல்லிமுடித்துவண்டிகதவைத்திறந்து போகப் பிரயாணப்பட்டார். அப்பொழுது "நீங்கள் எந்த பரம்பரையில் சேர்ந்தவர்கள் தங்கள் நாமதேயமென்ன"வென்று நூலாசிரியர் சுவாமிகளைக் கேட்டது. "எங்கள் பரம்பரையோ வெட்டவெளி பரம்பரை. இவன் பெயரோ நித்யானந்தன் என்று சொல்லுவார்கள்" என்று சொல்லிமுடித்துக் கதவைத்திறந்து இறங்கி மெதுவாய் சென்றுவிட்டார். மறுபடியும் அவரை அந்நாள் முதல் இந்நாள்வரையில் கண்டிலேன். ஸ்ரீ சுவாமிகள் சொல்லியதை ஆலோசிக்குமளவில், ஈஸ்வரன் பரம்பரையே வெட்டவெளி பரம்பரை. நித்தியாநந்தனென்றால் நித்தியம் ஆனந்தத்தில் இருக்கப்பட்டவன் கடவுளேயாம். அக்கடவுளே சுவாமிகளாய் வந்து உபதேசித்ததாய் அவர் சொன்ன வாக்கால் தெரியவருகிறது.

சுவாமிகள் உபதேம்செய்து சென்றபிறகு அன்று மாலை பூஜை அறையில் பிராணாயாமம் செய்ய உட்கார்ந்து கண்களை மூடினவுடன் இவர் நினைக்காமலே இவர் புருமத்தியில், ஏகாம்பரலிங்கம் வந்து நின்றுவிட்டது. குருவானவர் லிங்க பூஜையை செய்யவேண்டாமென்று சொன்னாரே, நான்நினைக்காமலே லிங்கம்வந்து புருவமத்தியில்நின்றுவிட்டதே? இத்தனை வருஷங்களாய்ப் பூஜைசெய்த லிங்கம் நினைக்காமலே தானாய்வந்து எதிரில் நின்றபிறகு பூஜை செய்யாமல் எப்படி யிருக்கமுடியும் என்று இதுவரையில் லிங்கத்தின்மேல் இருந்த அன்பினால் முதல் அவரை பூஜை செய்துப் பிறகு, பிராணாயாமம்செய்ய ஆரம்பிப்பார். இதுபோல் ஒரு வருஷம்வரையில் பிராணாயாமம் செய்யவிடா

மல் தானாகவே லிங்கம் வந்து எதிரில் நிற்கும். ஒருவருஷம் சென்றபிறகு, லிங்கம் வராமல் நின்றுவிட்டது. பிராணாயாமம செய்ய ஒரு வருஷம் குறைவாய் இருந்ததுபோல் இருக்கிறது. அதனால் லிங்கம் வந்து எதிரில் நின்றுகொண்டிருந்ததென்று தெரியவந்தது. லிங்கம் மறைந்தது முதல் பிராணாயாமம் அபிவிருத்தியாய் வந்தன.

ஓ சகோதர! சகோதரிகளே!! மனக்கண் எப்படிப்பட்ட அற்புதமான பூஜையை செய்துவந்ததோ பார்த்தீர்களா? இப்படிப்பட்ட பூஜை செய்வது மிகவும் அரிது! அரிது!! அரிது!!! என்று மூன்றுமுறை உங்களுக்குச் சொன்னோம்! சொன்னோம்!! சொன்னோம்!!!

ஈஸ்வரன் பிரபஞ்சத்தை சிருஷ்டி செய்ததை இனி சொல்லப்போகிறோம்.

ஈஸ்வரன் பிரபஞ்சத்தை சிருஷ்டி செய்தது.

ஈஸ்வரன், ஈஸ்வரன் என்று சொல்லுகிறார்களல்லவா? அந்த ஈஸ்வரன் எப்படி இருக்கின்றாரோ அதை இனி சொல்லப்போகிறோம் கேளுங்கள்.

பிரபஞ்சத்தில் வெட்டவெளி இல்லாதவிடம் எங்குமே இல்லை. பூமியை வெட்டிக்கொண்டே போகப்போக வெட்டம்வெளி வந்துகொண்டேயிருக்கும். பூமிக்குக் கீழும், பூமிக்கு மேலும் வெட்டவெளியே இருக்கின்றன. இந்த வெட்ட வெளிகளெல்லாம் வெரும் வெட்டவெளியல்ல. இந்த வெட்டவெளியில் காற்று அடங்கியிருக்கிறது. அதை எப்படித் தெரிந்துகொள்ளலாமென்றால், ஒருவன் பாதை வழியாய் மல்லிகைப் புஷ்பம் கொண்டுபோகிறான். அப்பொழுது அவன் சமீபமாயிருக்கும் காற்று மல்லிகைப்

புஷ்பவாசனையை எடுத்துக்கொண்டு,சிலதூரத்திலிருக்கும் காற்றினிடம் கொண்டுபோய்விடும். அங்குவிட்டவுடன் அங்கிருக்கும் காற்றில் புஷ்பவாசனைக் கலந்துவிடும். அப்பொழுது அங்கிருக்கப்பட்டவர்கள் எல்லோரும் புஷ்பவாசனைக் கலந்திருக்கும் காற்றை மூக்குத் துவாரங்களின் வழியாய் உள்ளே இழுப்பார்கள். அப்பொழுது அந்த வாசனையை அறிந்ததனால், அவர்கள் புஷ்பத்தைப் பார்க்காவிட்டாலும் எவனோ ஒருவன் பாதை வழியாய் மல்லிகைப் புஷ்பம் கொண்டுபோகிறானென்று உடனே சொல்லிவிடுவார்கள்.

வெளிவெளிக்குள் காற்று, அக்காற்றில் புஷ்பவாசனை எவ்வாறு கலந்திருக்கிறதோ அதுபோல் ஈஸ்வரனும் நமக்கெதிரில் காணப்படும் வெளிக்குள் வெளியாய்க் கலந்திருக்கின்றார். இந்த ஈஸ்வரன் இல்லாதவிடம் ஊசிநாட்டும் இடமும் எங்குமேகிடையாது.பூமியைவெட்டிக்கொண்டே சென்றால், வெளியே வந்துகொண் டிருக்கும். இந்த வெளிக்கு முடிவே இல்லை. இந்த வெளிகளில் எல்லாம் கடவுள் கலந்திருக்கின்றார்.

எங்குபார்த்தாலும் வெளியாயிருக்கும் இக்கடவுளுக்கு,ரூபமும் நிறமும் பெயரும் ஜாதி குலகோத்திரங்கள் எவையுமே இல்லை. இவ்வாறாக இருக்கும்பொழுது அந்த வெட்டவெளிக்கு ஆதியிலிருந்த பெரியோர்கள், பிரம்மம் என்று ஒரு பெயரை வைத்தார்கள். அந்த வெட்டவெளி அவ்வாறாகவே சும்மாயிராமல் பிரபஞ்சத்தை சிருஷ்டி செய்யவேண்டுமென்று ஓர்ஸங்கல்பம் அதாவது எண்ணம் அந்த பிரம்மத்திற்கு உண்டாயிற்று. இச்சங்கல்பம் உண்டானபிறகு பிரம்மமாகிய தான் எண்பத்திநான்கு லக்ஷ ஜீவராசிகளைச் சிருஷ்ட்டிசெய்து அந்த ஜீவராசிகளில்

தானும் எவ்வாறு போய்ச் சேர்ந்தாரோ இவற்றையெல்லாம் இனிசொல்லப்போகிறோம். முதல் எண்பத்திநான்கு லக்ஷ ஜீவராசிகளைச் சிருஷ்ட்டிசெய்தார். இதற்குச் சுருதிப் பிரமாணம்.

"சுரு || ஸ்தாவரோ லக்ஷவிம்ஸத்ய ஜலஜோ நவலக்ஷஹ
க்ரிமீணும் ருத்ரஸங்க்யாஸ்ச்ச சாதுர்லக்ஷந்து மாநுஷஹ
த்ரிம்ஸ லக்ஷம் கவாநாம் ச பக்ஷீணும் தஸலக்ஷஹ."

அசையாமல் நின்றிருக்கும் மலைகள் விருக்ஷங்கள், 20-லக்ஷம். ஜலத்திலுள்ள மீன்கள் முதலாகிய ஜலஜந்துக்கள், 9-லக்ஷம். புழு பாம்பு பல்லி தேள் முதலாகிய நகர்ந்து செல்லும் ஜந்துக்கள், 11-லக்ஷம். அநேகஜாதியில் அநேக பாஷைகளைப்பேசும் மனிதர்கள், 4-லக்ஷம். பசு எருமை யானை ஒட்டை குதிரை முதலாகிய மிருக ஜாதிகள், 30-லக்ஷம். பரந்துசெல்லும் பக்ஷிகள் 10-லக்ஷம். ஆக மொத்தம், 84-எண்பத்தி நான்குலக்ஷ ஜீவராசிகளை ஆதியில் சிருஷ்ட்டி செய்தார். இவ்வாறாக பிரம்மமென்கிற கடவுள் ஜீவராசிகளைச் சிருஷ்ட்டி செய்தபின் அக்கடவுள் என்ன செய்தாரோ அதை இனி சொல்லப்போகிறோம்.

உலகத்திலுள்ள ஸ்திரீ புருஷர்களும் ஜீவராசிகளும் தினந்தோறும் புண்ய பாவங்களைச் செய்துவருகிறார்கள். அவர்கள் தினந்தோறும் செய்துவரும் புண்யபாவங்களையெல்லாம், எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் பிரம்மமென்கிற ஒரே கடவுளானவர் பார்க்க அவரால் முடியாததனால் என்னசெய்தாரென்றால், உலகத்தில் எத்தனை ஜீவராசிகள் இருக்கின்றனவோ அவ்வளவிலும் பிரம்மமாகிய தான் போய்ச் சேர்வதற்காக அணுவாயும் என்றால் கண்களுக்குக் காணப்படாத மிகவும் சிறிதாயிருக்கும் ஜந்துவில் தான்போய்ச்சேர அந்தஜந்துவைவிட மிகவும் சிறிதாயும்,

பெரிய ஜந்துக்களில் போய்ச்சேர பெரிதாயும் தன் அம்சத்திலிருந்து புறப்பட்டு எல்லாஜீவராசிகளின் இருதய கமலத்திலிருக்கும் ஜலத்தில் போய்ச்சேர்ந்தார். இதற்கு கடோபநிஷத் பிரமாணம்,

“ அணோரணீயாம் மஹதோ மஹீயாம்
ஆத்மஸ்ச்ச ஜந்தோர் நிஹிதோ குஹாயாம் ”

பிரம்மமாகிய தான் அந்தந்த ஜீவஜந்துக்களுக்குத் தக்கபடி சிறிதாயும், பெரிதாயும் வெட்ட வெளியாயிருக்கும் தன் அம்சத்தில் இருந்து புறப்பட்டு எல்லா ஜீவராசிகளின் இருதய கமலத்திலிருக்கும் ஜலத்தில் போய்ச்சேர்ந்தார். அங்குபோய்ச் சேர்ந்தபிறகு, அந்த பிரம்மத்திற்கு ஆத்மா யென்று ஒரு பெயர்வைத்தார்கள். பிறகு, எல்லா ஜீவராசிகளிலும் ஆத்மா நிறைந்திருப்பதனால், அந்தஆத்மாவிற்கு ஜீவாத்மா என்று இன்னொரு பெயர் வைத்தார்கள் எல்லா ஜீவராசிகளுக்கும் பூதம் என்று சொல்லப்படும். ஆதலால், எல்லா பூதங்களிலும் ஆத்மா இருப்பதனால் அந்த ஆத்மாவிற்கு சாக்ஷிபூதனென்று மற்றொரு பெயர் வைத்தார்கள். எல்லா ஜீவராசிகளின் இருதய கமலமென்னும் கூண்டுக்குள் ஆத்மா இருப்பதனால் கூடஸ்த்தன் என்று வேறொருபெயர் வைத்தார்கள். இதன்றியும், எல்லா ஜீவராசிகளின் இரண்டு ஸ்தனங்களுக்கு மத்தியில் தாமரைக் கமலம்போன்ற ஓர் கமலம் மாம்சத்தில் அதோமுகமாய் என்றால், தலைகீழாய்த் தொங்கிக்கொண்டிருக்கும். அக்கமலமத்தியில்,அந்தந்த ஜீவராசிகளுக்குத்தக்கபடி சிறிதாயும், பெரிதாயும் ஆகாயம் என்றால், வெளி அக்கமலத்தில் இருக்கும். அந்த ஆகாயத்தில் சமுத்திரம்போல் ஜலம் நிறைந்திருக்கும். அந்த ஜலமத்தியில் ஆத்மா நிவசித்துக் கொண்டிருப்பதனால் இந்த ஆத்மாவிற்கு ‘ நாராயணன் ’

என்று பெயருண்டாயிற்று. நாராயணன் என்னும் பதத்திற்கு அர்த்தமென்னவென்றால், நார=என்றால், ஜலம். அயந=என்றால், ஸ்தானம். அதாவது, ஜலமே தனக்கு ஸ்தானமாயிருந்து அந்த ஜலத்தில் ஆத்மா நிவசித்துக் கொண்டிருப்பதனால் அந்த ஆத்மாவிற்கு நாராயணன் என்று பெயருண்டாயிற்று. இதன்றியும்,

மேற்சொல்லிய இருதய கமலத்தை இருபிளவாய்ப் பிளந்து பார்க்கும்பொழுது அது, ஆல இலையைப்போல் இருக்கும். அந்த இலை மத்தியிலுள்ள ஜலத்தில் ஆத்மா இருப்பதனால் அந்த ஆத்மாவிற்கு ஆலிலைமேல் பள்ளிக் கொண்டான் என்று பெயருண்டாயிற்று. இத்தனை பெயர்களுடன் எல்லா ஜீவராசிகளிலும் எவ்வாறு நிவசித்துக் கொண்டிருக்கின்றாரோ அதை இனி சொல்லப்போகிறோம்.

ஏரியில் இருக்கும் ஜலத்திற்கு ஏரிஜலமென்றும், குளத்திலிருக்கும் ஜலத்திற்கு குளத்து ஜலமென்றும், கிணற்றிலிருக்கும் ஜலத்திற்கு கிணற்று ஜலமென்றும் சொல்லப்படும். இப்பெயர்கள் வெவ்வேறாய் இருந்தபோதிலும் எல்லாவற்றிலும் ஒரே ஜலம் இருக்கின்றது.

குளத்திலிருக்கும் ஜலத்தை சிலர் தவலையிலும், சிலர் செப்புக்குடங்களிலும், சிலர் மட்குடங்களிலும், சிலர் பெரிய சொம்புகளிலும், சிலர் சிறிய சொம்புகளிலும் கொண்டுபோவார்கள். அவரவர்கள் கொண்டுபோவது பாத்திரங்களின் வித்யாசமே யொழிய எல்லோரும் கொண்டுபோவது குளத்துஜலமேயாம். அதுபோல் எல்லா ஜாதி ஜீவராசிகளின் இருதய கமலத்தில் ஆத்மாவாகிய ஒரே கடவுள் நிவசித்துக்கொண்டிருக்கின்றார். சரீர வித்யாசங்களே யொழிய எல்லாஜாதி சரீரங்களிலும் ஆத்மாவாகிய ஒரே கடவுள் நிவசித்துக்கொண்டிருக்கிறார்.

பறையன்! பறையன்!! பறையன்!!! என்று சொல்லுகிறார்களல்லவா? அந்தப் பறையன் யாரோ அவனைச் சொல்லுகிறோம் கேளுங்கள். பறை என்றால், தப்பட்டை. அறையன் என்றால், அடிக்கப்பட்டவன். அதாவது, ஊர் எங்கும் தெரிவிப்பதற்காக தப்பட்டை அடித்துத் தெரிவிக்கப்பட்டவனை பறையனென்று சொல்லப்படுமேயொழிய பறைஜாதி என்பது கிடையாது. பிரம்ம க்ஷத்ரிய வைஸ்ய ஸூத்திரர் என்று இந்நான்கு ஜாதிகள் மாத்திரம் ஆதியில் ஏற்பட்டது. இப்பொழுது மத்தியில் பறைஜாதியென்று ஒருஜாதியை இவர்கள் ஏற்படுத்திக்கொண்டார்கள். பறை அறையப்பட்ட பறையன் இருதய கமலத்திலும், உயர்ந்த ஜாதியார் இருதய கமலத்திலும் ஆத்மாவாகிய ஒரே கடவுள் நிவசித்துக்கொண்டிருக்கின்றார். அன்றியும், உயர்ந்த ஜாதியார் சரீரத்தில், மாம்சம் ரத்தம் கொழுப்பு எலும்பு மலமூத்திரங்கள் எவ்வாறிருக்கின்றனவோ அதுபோல் தாழ்ந்த ஜாதியார் சரீரத்திலும் இருக்கின்றன. இவர்கள் இருவர் சரீரமும் ஒன்றாயிருக்க ஜாதிபேதம் எங்கிருக்கின்றது. ஆண்ஜாதி ஒன்று, பெண் ஜாதி ஒன்று இந்த இரண்டுஜாதிகள் தவிர வேறே ஜாதிகள் கிடையாது.

அவனை ஒரு அறை அறையடா? என்று சொல்லுகிறார்களல்லவா? இதன் அர்த்தம் என்னவென்றால், அவனை கையினால், ஒரு அறை கொடு. அறை என்றால், அடிப்பது அதுபோல்பறை, தப்பட்டை; அறை, அடித்து. தப்பட்டை அடித்துத் தெரிவிக்கப்பட்டவனுக்குப் பறையன் என்று பெயருண்டாயிற்றேயொழிய பறையன் என்று ஒரு ஜாதி கிடையாது. இந்த பறை ஜாதியிலும் மாம்ச பக்ஷணை இல்லாமல் பிராமணர்களைப்போல் மிகவும் சுசி, ஆசாரத்துடன் அனேகர் இருக்கின்றார்கள். ஜாதியில்

பறை ஜாதியேயொழிய ஆசாரத்தில் பிராம்மண ஆசாரமுண்டு. இப்படியிருக்க அவர்களை பறையர் என்று எப்படிச் சொல்லலாம். ஆதலால்,

எனதன்பர்களே! இனிமேல், ஜாதி பேதங்களை வைத்துக்கொள்ளாமல் எல்லோரும் சமமாய் இருக்கவேண்டும்.

எல்லா ஜீவராசிகளின் சரீரத்தில் ஆத்மா சாக்ஷியாயிருந்து அவர்கள் செய்யும் வேலைகளை பார்த்துவருவதை இனி சொல்லப்போகிறோம்.

ஆத்மா சாட்சியாய் இருந்து ஸ்ரீபுருஷர்கள் செய்யும் வேலைகளைப் பார்த்து வருகிறார்.

"சுரு || நஸாக்ஷிணம் சாக்ஷி தர்மாஹ ஸம்ஸ் ப்ரஸந்தி
விலக்ஷணம் அவிகார மதாஸீனம் க்ருஹதர்மாஹ ப்ரதீபதஹ"

விவாகம் நடக்கும் வீட்டில் ஒரு பெரிய வெளிச்சமுடைய விளக்கை வைப்பார்கள். அவ்வெளிச்சத்தின் சகாயத்தினால் அனேகர் அனேகவேலைகளைச்செய்வார்கள் அப்பொழுது யார் யார் என்னென்ன வேலையைச் செய்கிறார்களோ அந்த வேலைகளையெல்லாம் மேற்சொல்லிய விளக்கு தான் சாக்ஷியாயிருந்து பார்த்துக்கொண்டிருக்கும். ஆனால், நாம் செய்யும் வேலையை விளக்குப் பார்க்கிறதென்று அவர்களுக்குத் தெரியாது. அவரவர்கள்செய்யும் வேலைகளை விளக்கு சாக்ஷியாயிருந்து எப்படிப் பார்த்துக்கொண்டிருக்கிறதோ அதுபோல்,

ஆத்மா என்னும் கடவுள் எல்லா ஜீவராசிகளின் இருதயகமலத்தில் தான் சாக்ஷியாயிருந்து அவர்கள் செய்யும் புண்யபாவங்களையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்து,

அந்தந்த புண்யபாவங்களுக்குத் தக்க உயர்வு, தாழ்வான ஜன்மங்களைக்கொடுத்து ஆத்மாவாகிய தானும் அவர்களுடன் கூடவே தொடர்ந்துச்சென்று, அவர்கள் எந்த சரீரத்தில் போய்ச் சேருகிறார்களோ அந்தச் சரீரத்தில் ஆத்மாவாகிய தானும் போய்ச்சேருவார். இதற்கு ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம், 15-சுலோகம், 8-பிரமாணம்.

> ஸரீரம் யதவாப்நோதி யச்சாப்யுத் க்ராமதீஸ்வரஹ
> க்ருஹீ த்வைதாநி ஸம்யாதி வாயுர்கந்தாநி வாஸயாத்.

அந்தந்த ஜீவர்கள் அந்தந்த சரீரத்தைவிட்டுப் போகும்பொழுது அந்தந்த ஜீவர்களுக்குச் சாக்ஷிமாத்ரனாயும், சுவாமியாயும் இருக்கும் ஆத்மாவாகிய கடவுள் என்ன செய்கிறாரென்றால், புஷ்பத்தில் இருக்கும் வாசனையைக் காற்றானது எவ்வாறு இழுத்துக்கொண்டு செல்லுகிறதோ அதுபோல், முன்சொல்லிய சுவாமியாகிய ஆத்மாவானவர் என்ன செய்கிறாரென்றால், அந்தந்த ஜீவனையும், அந்தந்த ஜீவனைப் பற்றியிருந்த எல்லா ஆசாபாசங்களையும், அவர்களிடம் இருக்கும் நல்ல கெட்ட குணங்களையும் அந்தந்த ஜீவர்களின் மூச்சியென்னும் பிராணனில் ஒன்றாய்ச்சேர்த்துக்கட்டி ஆத்மாவாகிய தானும் அந்த ஜீவனுடன்கூடவே சேர்ந்து பழைய சரீரத்தைவிட்டு வெளிவரும். வெளிவந்தபின் ஆத்மாவாகியதான், வேறு ஸ்திரீகர்ப்பத்தில் புதிதாய் சிருஷ்டிசெய்து வைத்திருக்கும் சிசுவின் புதிய சரீரத்தில் தான் அழைத்துவந்த ஜீவனைக் கொண்டுபோய்ச் சேர்த்து தானும் அந்த ஜீவனுடன்கூடவே இருப்பார். இந்த ஜீவன் மோக்ஷமென்னும் தன் சொந்தவீட்டைப் போய்ச் சேரும்வரையில் ஆத்மாவாகிய தானும் அந்த ஜீவனுடன்கூடவே இருப்பார். ஒவ்வொரு ஜீவர்களும் எத்தனை ஜன்மங்கள் எடுத்ததும், அந்தந்த ஜன்மத்தில் அவர்கள் என்னென்ன செய்ததும் இதுகளெல்லாம் ஒவ்வொரு ஜீவர்களிலும் இருக்கும் ஆத்மாவிற்கு நன்றாய்த் தெரியவரும். ஒரு சிசு எடுத்த ஜன்மங்களையெல்லாம் ஆத்மாவாகிய கடவுள் அந்தச் சிசுவிற்குக் காட்டுவதை கீழ் சொல்லப்போகிறோம்.

சிசுவின் பூர்வ ஜனமங்களையெல்லாம் ஆத்மாவாகிய கடவுள் காட்டுகிறார்.

பிரபஞ்சத்திலுள்ள மானவ ஜனங்களெல்லோரும் இரண்டு கட்டில் கட்டுப்பட்டிருக்கின்றார்கள். அக்கட்டுகள் எவையென்றால், முதல் தாயின் கர்ப்பத்திலிருக்கும் பொழுது ஒருபையில் சிசு கட்டுப்பட்டிருக்கும். அப்பையிற்கு 'மாவி' என்று சொல்லப்படும். முதல் இந்த மாவியென்னும் பையில் கட்டுப்பட்டிருந்து அக்கட்டிலிருந்து வெளிவந்தபின், ஆசாபாசங்களென்னும் மாயையில் கட்டுப்பட்டார்கள். இந்த இரண்டு கட்டுகளிலிருந்து தப்பித்துக் கொண்டால் மறுபடியும் அவர்களுக்கு ஜனன மரணமென்னும் பிறப்பு, இறப்பு என்பது இல்லை. தாயின் கர்ப்பத்தில் மாவி என்னும் பையில் கட்டுப்பட்டிருக்கும் சிசு எத்தனை ஜன்மங்கள் எடுத்ததும் சிசுவுடன்கூடவேதொடர்ந்துவரும் ஆத்மாவென்னும் கடவுளுக்கு நன்றாய்த் தெரியவரும். ஆதலால், அந்த சிசுவின் பூர்வ ஜன்மங்களையெல்லாம் சிசுவிற்கு எவ்விதமாய்க் காட்டுகிறாரோ அதை கீழ் சொல்லப்போகிறோம்.

அப்பா குழந்தாய்! நீ முன்ஜன்மத்தில் பிராம்மண ஜாதியில் பிறந்தாய். அந்த பிராம்மண சரீரத்திற்கு மனைவியாயிருந்தவள் இவள்தானா என்று அந்த ஜன்மத்தில்வந்த

மனைவியின் சரீரத்தை தன் மாயையால் அந்த சிசுவிற்குக் காட்டி ஆத்மாவாகிய கடவுள்கேழ்க்கின்றார். அப்பொழுது அச்சிசு அச்சரீரத்தைப்பார்த்து ஆம்; இவள் என்மனைவிதான் என்று சொல்லிற்று. அச்சரீரத்தை மறைத்து, அவன் பிள்ளைகள் பெண்கள் பந்துஜனங்கள் எல்லோருடைய சரீரத்தைக் காட்டி, உனது பிள்ளைகள் பெண்கள் பந்துஜனங்கள் எல்லோரும் இவர்கள் தானாவென்று ஆத்மா கேட்டது. ஆம், இவர்களெல்லோரும் என் பெண்டுபிள்ளைகளும் பந்துஜனங்களேயாம் என்று சிசு சொல்லிற்று. அவர்களையெல்லாம் மறைத்து சிசுவின் ஆபீஸ் அறையைக்காட்டி இது,உன்னுடைய ஆபீஸ் அறைதானா பார் என்று ஆத்மா கேட்டது. சிசு அந்த அறையைப் பார்த்து இதுதான் என்னுடைய ஆபீஸ் அறை என்று சிசு சொல்லிற்று. இதுபோல் அந்த பிராம்மண ஜன்மத்தில் எதை எதை சிசு அனுபவித்ததோ அவற்றையெல்லாம் காட்டி பிராம்மண ஜன்மத்தை மறைத்து அதற்குமுன் க்ஷத்ரியனாயிருந்த ஜன்மத்தை ஆத்மா காட்டுகின்றார்.

அப்பா குழந்தாய்! அதற்குமுன் ஜன்மத்தில் நீ க்ஷத்ரியஜாதியில் பிறந்தாய். அந்த க்ஷத்ரிய சரீரத்திற்கு வந்த பெண்டுபிள்ளைகள் பந்துஜனங்கள் எல்லோருடைய சரீரத்தை தன் மாயையால் காட்டி, இவர்கள் எல்லோரும் உன்னுடைய பெண்டுபிள்ளைகள், பந்துஜனங்கள் தானாவென்று ஆத்மா கேட்டது. இவர்கள் எல்லோரும் என் பெண்டுபிள்ளைகள் ,பந்துஜனங்கள் தான் என்று சிசு சொல்லிற்று. க்ஷத்ரிய ஜன்மத்தில் சிசு எதை எதை அனுபவித்ததோ அவற்றையெல்லாம் ஆத்மாகாட்டி மறுபடியும் அவைகளையெல்லாம் மறைத்து அதற்குமுன் ஜன்மத்தில் வைஸ்யஜாதியில் அனுபவித்ததுகளையெல்லாம் ஆத்மா

சிசுவிற்குக் காட்டுகின்றார். அப்பா குழந்தாய்! அதற்குமுன் ஜன்மத்தில் நீ வைஸ்யஜாதியில் பிறந்தாய். அந்த வைஸ்ய சரீரத்திற்கு வந்த மனைவிமக்கள் பந்துஜனங்கள் எல்லோரையும் காட்டி இவர்களெல்லோரும் உன் மனைவிமக்கள், பந்துஜனங்கள்தானா வென்று ஆத்மா கேட்டது. ஆம். இவர்கள் எல்லோரும் என் மனைவிமக்கள் பந்துஜனங்களே என்று சிசு சொல்லிற்று. அவர்களையெல்லாம் தன் மாயையால் மறைத்து, அவன் வியாபாரம் செய்திருந்த மளிகை கடைகளையெல்லாம் ஆத்மா காட்டி இவைகளெல்லாம் உன் மளிகை கடைகள்தானா பார் என்று ஆத்மா கேட்டது. அந்த மளிகை கடைகளைப்பார்த்து இவைகளெல்லாம் என்னுடைய மளிகை கடைகள்தான் என்று சிசு சொல்லிற்று. இதுபோல் சிசு வைஸ்யஜாதியில் எதை எதை அனுபவித்ததோ அவற்றையெல்லாம் காட்டி மறைத்து அதற்கு முன்னிருந்த ரெட்டி ஜாதியை சிசுவிற்குக் காட்டுகின்றார்.

அப்பா! அதற்குமுன் நீ ரெட்டிஜாதியில் பிறந்தாய். அந்த ரெட்டி ஜன்மத்தில் வந்த மனைவிமக்கள், பந்துஜனங்களையெல்லாம் தன் மாயையால்காட்டி இவர்களெல்லோரும் உன் மனைவிமக்கள், பந்துஜனங்கள் தானா வென்று ஆத்மாகேட்டது. அவர்களையெல்லாம் சிசு பார்த்து ஆம்; இவர்களெல்லோரும் என்மனைவிமக்கள் பந்துஜனங்களே என்று சிசு சொல்லிற்று. பிறகு அவர்களையெல்லாம் மறைத்து சிசுவினிடமிருந்த பசு, எருதுகள், எருமைகள் முதலானவைகளையெல்லாம் தன் மாயையால் உண்டாக்கி சிசுவிற்கு அவைகளைக் காட்டி இந்த பசுவுகள், எருதுகள், எருமைகள் யாவும் உன்னுடையதுதானாவென்று ஆத்மா கேட்டது. அவற்றையெல்லாம் சிசு பார்த்து இவையாவும் என்னுடையதே என்று சிசு சொல்லிற்று. அவற்றை

மறைத்துப் பிறகு இரண்டு சேங்கன்றுகளைக் காட்டி இந்த இரண்டு சேங்கன்றுகளையும் ஐந்நூறு ரூபாய் கொடுத்து வாங்கி இதன்மேல் மிகவும் பிரீதியாயிருந்தாயல்லவா என்று ஆத்மா கேட்டது. அக்கன்றுகளை சிசு பார்த்து வாஸ்தவம்தான். இக்கன்றுகளை ஐந்நூறுரூபாய்கொடுத்து வாங்கி, இவைகள்மேல் மிகவும் பிரீதியாயிருந்தேன் என்று சிசு சொல்லிற்று. இதுபோல் அந்த ரெட்டி ஜன்மத்தில் சிசுவாயிருக்கும் தான் எதை எதை அனுபவித்ததோ அவற்றையெல்லாம் சிசுவிற்குக்காட்டி இதுபோல் எத்தனை ஜன்மங்களை அச்சிசு எடுத்ததோ அவற்றையெல்லாம் ஏழு, எட்டு, ஒன்பது இம்மூன்றுமாதம் வரையில் கர்ப்பத்திலிருக்கும் சிசுவிற்குக் காட்டிக்கொண்டே வரும்பொழுது சிசுவிற்கு ஜனனகாலம் சமீபித்துவிட்டது. அப்பொழுது சிசுவிற்கு எந்த ஜன்மத்தைக் காட்டுகிறாரோ அதை இனி சொல்லப்போகிறோம்.

அப்பா நாயனா! இதற்குமுன் ஜன்மத்தில் நீ சண்டாள ஜாதியில் பிறந்தாய். அந்த ஜாதியில்வந்த மனைவி விசேஷ கருப்பாயும் கிழிந்த கந்தல் புடவையைக் கட்டிக்கொண்டிருந்தாள். அந்த மனைவி இவள் தானாபார் என்று ஆத்மா கேட்டது. சிசு அவளைப்பார்த்து இவள் என்னுடைய மனைவிதான் என்று சொல்லிற்று. இந்த கிழிந்த சேலையை இவள் கட்டிக்கொண்டிருந்தாளா? ஆம்; இந்த கிழிந்த சேலையை இவள் கட்டிக்கொண்டிருந்தாள். இந்த சேலை உனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறதா? ஆஹா! எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. இதோ இந்த ஓலைக் குடிசையைப் பார்! எங்குபார்த்தாலும் தொண்டிகளாயிருக்கின்றன. இந்த ஓலை குடிசை உன்னுடையதுதானா என்று ஆத்மாகேட்டது. அக்குடிசையை சிசு பார்த்து இது என்னுடைய ஓலை குடிசைதான் என்று சிசு சொல்லிற்று.

ஆத்மா என்னும் கடவுள் சிசுவின் சண்டாள ஜாதியைக் காட்டிக்கொண்டிருக்கும்பொழுது சிசுவிற்கு ஜனனகாலம் சமீபித்து அந்த சிசுவின் தாய் இடுப்புநோய்ப் படும்பொழுது சிசு உடனே தலைகீழாய்த் திரும்பிற்று. சிசு தலைகீழாய்த் திரும்பியபிறகு, ஒஹோ! இனி நான் பூமியில் போய்ப் பிறக்கவேண்டியதாயிருக்கிறதென்று சிசு மிகவும் பயந்து தன் இரண்டுகைகளையும் குவித்து சிரசின்மேல் வைத்து, ஆத்மா என்னும் கடவுளே? என்னப்பனே! என் ஐயனே!! என் தந்தையே!!! இனி நான் மாயா பிரபஞ்சத்தில் போய்ப் பிறக்கமாட்டேன். இதுவரையில் நான் எடுத்த ஜன்மங்கள் போதும்போதும். என்னை ரக்ஷித்து இவ்விடமே இருக்கச்செய்யவேண்டுமென்று சிசுவானது மிகவும் பரிதாபத்துடன் ஆத்மா என்னும் கடவுளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

உலகத்தில் ஜனங்கள் சாதாரணமாய் என்ன சொல்லுவார்களென்றால், சிசு தாயின் கர்ப்பத்திலிருக்கும்பொழுது பூர்வஞானத்துடன் இருக்குமென்று சொல்லுவார்களேயொழிய சிசுவின் பூர்வஜன்மங்களையெல்லாம் ஆத்மாயென்னும் கடவுள் சிசுவிற்குக் காட்டுகிறாரென்று ஜனங்களுக்குத் தெரியவராது. அப்படிப்பட்ட ரகஸ்யங்களையெல்லாம் இப்பொழுது உங்களுக்கு இந்நூல்மூலமாய்த் தெரிவித்தோம்.

“மாவி” என்னும் பையில் கட்டுப்பட்டிருந்த சிசுவானது அப்பையிலிருந்து வெளிவந்துவிட்டது. அப்பை சிசுவின் தொப்புளுடன் சேர்ந்து சிசுவின் முழங்கால் கீழ் விழுந்திருக்கிறது.

சிசு தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிவர மிகவும் பயந்து, இரண்டு கைகளையும் குவித்து தன் சிரசின்மேல் வைத்து கும்பிட்டுக்கொண்டே தலைகீழாய்த் திரும்பியிருப்

பதையும், அது வெளியாக வேண்டிய துவாரத்தையும் இருபிளப்பாய்ப் பிளந்து இதோ எதிரிலிருக்கும் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது பாருங்கள்.

அப்பொழுது அக்குழந்தையின் சரீரம் எப்படியிருக்குமோ அதை இனி சொல்லப்போகிறோம். குயவன் சக்கரத்தில் பச்சை களிமண்வைத்து கோலால் அந்த சக்கரத்தைக் கிருகிருவென்று திருப்புவான். அப்பொழுது அந்த சக்கரம் தானாகவே சுழன்றுகொண்டிருக்கும். அதன்பிறகு, குயவன் சட்டியிலிருக்கும் ஜலத்தில் கைகளை நனைத்து சக்கரத்தில் சுழன்றுகொண்டிருக்கும் களிமண்ணில்வைத்து பானைசெய்து முடிந்தபின் அதை அறுத்து கீழே வைப்பான். அது, மிகவும் பச்சை களிமண்ணாய் இருப்பதனால் அந்த பானைமேல் விரல்களை வைத்தால் பள்ளம் விழும். குயவன் மண் எப்படி பச்சையாயிருக்கிறதோ! அதுபோல் கர்ப்பத்தில் இருக்கும் சிசுவின் சரீரமும் பச்சைமண்ணைப்போல் மிகவும் மிருதுவாயிருக்கும்.

எல்லா ஜீவராசிகளிலும், 10-வாயுவுகள் இருக்கின்றன. இந்த, 10-வாயுவுகளும் சரீரத்திலிருந்து என்னென்ன வேலைகளைச் செய்கின்றனவோ அவற்றையெல்லாம் இனி முன்சொல்வோம். இந்த, 10-வாயுவுகளிலும் தனஞ்சயன் என்னும் பெயருடன் ஒரு வாயுவு இருக்கின்றது. அந்த வாயுவு செய்யும் வேலையை இப்பொழுது சொல்லுகிறோம்.

சிசு தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிவராமல் ஆத்மா என்னும் கடவுளைக் கும்பிட்டுக் கொண்டிருப்பதனால் அச்சமயத்தில் தனஞ்ஜயவாயுவு சிசுவின் இடுப்பின் கீழும், பிட்டங்களுக்கு மேலும், இரண்டு இடங்களில் ஊன்றி நெட்டி, சிசுவை வெளியில் தள்ளும். அப்பொழுது சிசு இடுப்பின்கீழும், பிட்டங்களுக்கு மேலும் இரண்டு பள்ளங்கள் விழும். இதை நீங்கள் பார்க்கவேண்டுமானால், உங்கள்



'மாவி' என்னும் பை குழந்தை தொப்புளுடன் சேர்ந்து குழந்தை முழங்கால்கீழ் விழுந்திருக்கிறது பாருங்கள்.

வீட்டிலிருக்கும் பிள்ளை பெண்கள் இடுப்பின்கீழும், பிட்டங்களுக்கு மேலும் பாருங்கள். இரண்டு பள்ளமிருக்கும். இந்நூலாசிரியராகிய ஸ்ரீ யோகீஸ்வரர் சொல்வதற்கும் பிரத்தியக்ஷ அனுபவத்திற்கும் சரியா யிருக்குமேயொழிய ஒன்றாகிலும் பிசகாயிராது.

சிசு தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிவந்தபின் தொப்பிளுடன் சேர்ந்திருக்கும் மாவி என்னும் பையை தொப்பிளில்இருந்து நாலுவிரற்கடைவிட்டு அறுத்து அப்பையை அப்புறப்படுத்தி புதைத்துவிடுவார்கள். அதன்பிறகு குழந்தையைக் கழுவி துடைத்துப் படுக்கையில்வைத்து, குழந்தை அழவில்லையென்று குளிர்ந்த ஜலத்தையெடுத்து குழந்தை முகத்தில் இரைப்பார்கள். குளிர்ந்த ஜலம் குழந்தையின் முகத்தில் 'சில்' லென்று பட்டவுடன் திடுக்கிட்டு உடலைவிரித்து கைகால்களை உதரி, க்வா! க்வா!! க்வா!!! என்று மிகவும் சிறுங்குரலாய் அழும். குழந்தை, க்வா! க்வா!! என்று அழுவதை ஸ்திரீகள் கவனிக்கமாட்டார்கள். குழந்தை அழுதது என்பதுதான் அவர்களுக்குத் தெரியும். க்வா! க்வா!! என்பதற்கு என்ன அர்த்தமோ அதை இனி சொல்லப்போகிறோம்.

எல்லா பாஷைகளுக்கும் ஸம்ஸ்க்ருதபாஷை தாய் பாஷையாய் இருக்கிறது. க்வா! க்வா!! க்வா!!! என்பது ஸம்ஸ்க்ருதபாஷை. இதன் அர்த்தம் என்னவென்றால் எங்கே! எங்கே!! எங்கே!!! அதாவது, எனக்கு பூர்வ ஞானமிருந்ததே அந்த ஞானம் இப்பொழுது எங்கே என்பதேயாம். அதன்பிறகு,

மேற்சொல்லிய குழந்தை சிறுகச்சிறுக வளர்ந்து பெரியவனானபின் அவனுக்கு விவாகம் செய்வார்கள். விவாகம் செய்தபிறகு, ஆசாபாசங்களென்னும் மாயை மறுபடியும் அந்தஜன்மத்தில் அவனில் வந்து சேரும்.

ஆசாபாசங்கள் அவனில் வந்து சேர்ந்தபிறகு, அவன் கர்மத்திற்குத் தக்கபடி அனுபவிக்கவேண்டிய சுகதுக்கங் களையெல்லாம் அந்த ஜன்மத்தில் அனுபவித்துப் பிறகு, அச்சரீரத்தையும்விட்டு இன்னொரு சரீரத்தில் போய்ச் சேருகிறன். இதுபோல் ஒவ்வொரு ஸ்திரீபுருஷர்களும் இதுவரையில் எத்தனையோ கணக்கில்லாத ஜன்மங்களை எடுத்து வருகிறார்கள்.

ஒரு கிராமத்தில் நடக்கும் சந்தைக்கு அக்கிராமம் சுற்றுப் பக்கங்களிலிருக்கும் ஊர்களிலிருந்து ஸ்திரீபுரு ஷர்கள் சந்தைக்குவந்து அவர்கள் வந்தவேலையைப் பார்த் துக்கொண்டு மறுபடியும் மாலை தம் ஊர்போய் விடுவார் கள். ஒரு குடும்பத்திலிருக்கும் வீடும் மேற்சொல்லிய சந்தையைப்போல் இருக்கின்றது. எந்த தேசம், எந்த பட்டணம், எந்த ஜில்லா, எந்த தாலூக்கா, எந்த கிராமங் களிலோ இருக்கப்பட்டவர்கள் அவ்விடம் இறந்து இன் னொரு குடும்பத்திலிருக்கும் வீட்டில் தாய் தந்தைகளாக வும், மனைவிகளாகவும், பிள்ளைகளாகவும், பெண்களாகவும், பேரன், பேத்திமார்களாகவும், மாமன், மாமி, அத்தைக ளாகவும் இதுபோல் இன்னும் அனேக முறைகொண்டு அந்த குடும்பத்தில் வந்து பிறக்கின்றார்கள். இதற்குத் தாயுமான சுவாமிபாடல் பிரமாணம்.

தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற்கூட்ட மிதிலோர்
சந்தேக மில்லைமணி மாட மாளிகை மேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரசாலக் கோலம்
வஞ்சனைபொறாமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சனை யிலாதகனவே

யெந்த நாளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
யிரவுபக லில்லாவிடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவுமூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோம யானந்தமே.

இன்னொரு வீட்டில் போய்ப் பிறந்தபின் என்மனைவி, என் பிள்ளை, என்பெண்கள், என்வீடு, என்தோட்டம், என்துரவுகள் என்று தனதல்லாத வஸ்துவையெல்லாம் தனதே என்று எண்ணி தறசமயம் வந்து சேர்ந்திருக்கும் குடும்பத்தில் சொல்லிக்கொண் டிருக்கின்றார்கள். இன்னும் சில வருஷங்களில், இக்குடும்பத்தையும்விட்டு இன்னொரு குடும்பத்தில்போய்ச்சேரப்போகிறார்கள். ஆதலால், இதை சந்தையில் கூட்டமென்று சொல்லவேண்டியதாய் நேர்ந் தது. ஒரு குடும்பத்தில் ஒருவர் இறந்தால் இன்னொருவர் வந்து பிறக்கின்றார். இந்தக் குடும்பம் எப்பொழுதும் காலியாவதே இல்லை. ஒருவேளை சந்தானமில்லாவிட்டால் இன்னொரு பிள்ளையை ஸ்வீகாரமெடுத்து வளர்த்து அக் குடும்பம் போகாம லிருக்கும்படிச் செய்வார்கள்.

பிரம்மமாகிய ஈஸ்வரன் மாயை யென்பதை ஒன்று உண்டாக்கி ஸ்திரீபுருஷர்களை அந்த மாயையால் மோஹிக் கும்படிச் செய்து, பயாஸ்க்கோப்பில் பொம்மைகளைக் காட்டும் ஸூத்ரதாரியைப்போல், ஈஸ்வரனுகிய தானும் மேற்சொல்லிய ஸூத்ரதாரியைப்போல் இருந்து மாயை யென்னும் ஆசையால் ஸ்திரீபுருஷர்களை மோஹிக்கும் படிச் செய்து அவர்களின் கூத்துகளையெல்லாம் ஈஸ்வான் பார்த்து வருகிறார்.

ஆஹா! இந்த ஈஸ்வரசிருஷ்ட்டி என்ன விசித்திரமாய் இருக்கின்றதோ பாருங்கள்.

மானவ ஜனங்களெல்லோரும் இதுவரையில் அனேக ஜன்மங்களெடுத்து ஒவ்வொரு ஜன்மத்திலும் வரும் தாய்த் தந்தைகள், மனைவிமக்கள், பந்து ஜனங்களுடன் கூட சில வருஷங்கள்வரையில் மாத்திரமே கலந்திருந்து அவர்கள் மேல் விசேஷ அன்பாயும், ஆசையாயும் இருப்பார்கள். இவ்வாறாக யிருந்து தம்தம் ஆயுள் தீர்ந்தவுடன் மரண மடையும்பொழுது மனைவிமக்கள் மேலும், பந்து ஜனங் களின்மேலும், இருந்த ஆசைகளையெல்லாம் பூர்த்தியாய் மறந்து மற்றொரு தாயின் கர்ப்பத்தில் புதிதாய், அவர் களுக்குள்ளிருக்கும் ஆத்மாவாகிய கடவுள் சிருஷ்டிசெய்து வைத்திருக்கும் சிசுவு சரீரத்தில் போய்ச்சேர்ந்து பிறகு, பிறக்கின்றார்கள். அவ்வீட்டில் குழந்தையாய்ப் பிறந்து வளர்ந்தபின் மறுபடியும் அந்த ஜன்மத்தில் விவாகம் செய் வார்கள். விவாகம் செய்த பிறகு, அங்கு புதிதாய்வரும் மனைவிமக்கள் மேலும், பந்து ஜனங்களின்மேலும் விசேஷ ஆசையா யிருப்பார்களே யொழிய அதற்குமுன் ஜன்மத்தி லிருந்த தாய்த்தந்தைகள், மனைவிமக்கள், பந்து ஜனங்கள் முதலானவர்களின் ஞாபகம் எதுவும் அவர்களுக்கு இராது. ஆனால் இவர்கள் எத்தனை ஜன்மங்கள் எடுத்ததும் எங்கெந்த ஜாதியில் பிறந்ததும் என்னென்ன வேலைகளைச் செய்ததும் இவைகளெல்லாம் அந்தந்த ஸ்திரீபுருஷர்களில் இருக்கும் ஆத்மாயென்னும் கடவுளுக்குமாத்திரம் தெரிய வரும்.

இதுபோல் ஒவ்வொரு ஜன்மத்திலும் ஒவ்வொரு வீட்டில் பிறந்து அங்குள்ளவர்கள்மேல் ஆசையாயிருந்து மறுபடியும் அவ்வீட்டில் இறக்கும்பொழுது அவ்வீட்டி லுள்ளவர்கள் யாரும் அவர்களுடன்கூட போகமாட்டார் கள். அவர்கள் யாரும் அவர்களுடன் கூட போகாவிட்டா லும் அவர்களைத் தொடர்ந்து யார் போவாரென்றால், அவர்களுக்குச் சாக்ஷியாயிருந்த ஆத்மா என்னும் கடவு ளும் அவர்கள்செய்த புண்ய பாவங்கள் இவைகள் மாத் திரம் அவர்களைத் தொடர்ந்து செல்லும்.

பாவம் செய்தவர்களை ஆத்மா சிக்ஷை செய்வது.

ஓ ஸஹோதர! ஸஹோதரிகளே!

ஆத்மா என்பது ஒரே ஆத்மாவல்ல. உலகத்தில் எத்தனை கோடானுகோடி ஸ்திரீபுருஷர்களும், அதுபோல் ஜீவராசிகளும் இருக்கின்றனவோ அத்தனை ஆத்மாக்கள் பிரம்மத்திலிருந்து புறப்பட்டுவந்து எல்லா ஜீவராசிகளின் இருதய கமலங்களில் நிறைந்திருக்கின்றன.

எல்லா ஜீவராசிகளின் இருதயகமலத்தில் ஆத்மா என்னும் பெயரையுடைய கடவுள் நிறைந்திருந்து அந்தந்த ஜீவராசிகள் தினந்தோறும் செய்துவரும் புண்ய பாவங் களை யெல்லாம் அந்தந்த சரீரத்திலிருக்கும் ஆத்மாவாகிய கடவுள் பார்த்துக்கொண் டிருந்து, அந்தந்த புண்ய பாவங்களுக்குத் தக்கபடி நல்லது, கெட்டதுகளை ஆத்மா வாகிய கடவுள் அவர்களுக்குக் கொடுத்துவருகிறாரே யொழிய பிரம்மமாகிய பெரிய கடவுள் ஜனங்களுக்கு நல்லது கெட்டதுகளை கொடுப்பதில்லை. ஒவ்வொரு ஆத்மா வாகிய கடவுள் ஒவ்வொருவரையும் தண்டனை செய்வதை எல்லாம் இனி சொல்லப்போகிறோம்.

உலகத்திலுள்ள எல்லா ஸ்திரீ புருஷர்களுக்கும் தலை நோய், சுரம், வயிற்றுவலி, கட்டி, சிரங்கு, மூலவியாதி

பார்சவாய்வு, தேம்பல், படைகள், குஷ்ட்டவியாதி, இன்னும் இப்படிப்பட்ட அனேக விதங்களாகிய வியாதிகள் வந்து அவஸ்தைப்படுவதை நாமெல்லோரும் பிரத்யக்ஷமாய்ப் பார்த்துவருகிறோம். இவர்களே அல்லாமல் மற்றும் சிலர் கூன், குருடு, செவிடு, நொண்டி இன்னும் இப்படிப்பட்ட அனேக விதங்களாகிய அங்கயீன சரீரமுடையவர்களும் இருக்கின்றார்கள். இவர்களுக்கெல்லாம் மேற்சொல்லிய வியாதிகளும், அங்கயீன சரீரமும் வருவதற்குக் காரணம் எதுவோ அதை இனி சொல்லப் போகிறோம்.

ஒருவன் மிகவும் சொற்ப குற்றம் செய்தால் கோர்ட்டு கலையும்வரையில் மேஜஸ்ட்ரேட்டு அவனுக்கு தண்டனையை விதிப்பார். அதற்குமேல் இன்னும் சிறிதுகுற்றம் அதிகமாகச்செய்தால், பதினைந்துநாள் தண்டனை விதிப்பார். இதுபோல் அந்தந்த குற்றங்களுக்குத் தக்கபடி ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஆறு மாதங்களும், ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து, பத்து, பதினைந்து வருஷங்களும் இவ்வாறாக அந்தந்த குற்றங்களுக்குத் தக்கபடி கோர்ட்டார் சிக்ஷையை விதிப்பாரே யொழிய சுரம், தலைவலி, கூன், குருடு முதலிய சிக்ஷையை விதிக்க கோர்ட்டாரால் முடியாது. இதுகளையெல்லாம் அந்தந்த குற்றங்களுக்குத் தக்கபடி அவரவர்களின் இருதயகமலத்திலிருக்கும் ஆத்மாவாகிய கடவுள் எத்தனை விதங்களாகிய சிக்ஷகளை விதிக்கின்றாரோ அவற்றை இனி தெரிவிக்கப்போகிறோம்.

அந்தந்த ஸ்திரீ புருஷர்களின் இருதய கமலத்தில் சாக்ஷிமாத்திரனாய் நிவசித்துக் கொண்டிருக்கும் ஆத்மா என்னும் கடவுளானவர் என்ன செய்கிறாரென்றால், அந்தந்த ஸ்திரீ புருஷர்கள் எதையெதை மனதில் நினைக்கின்றார்களோ அவற்றையெல்லாம் அவரவர்களில் இருக்கும்

ஆத்மா யென்னும் கடவுள் உடனுக்குடனே அறிகின்றார். கடவுள் எவ்விடமோ தூரத்தில் இருந்தால் அவர்கள் நினைப்பதை எவ்வாறு அறிவார். இதன்றியும், அவரவர்கள் தினந்தோறும் செய்யும் புண்ய பாவங்களையெல்லாம் கடவுள் தூரமாயிருந்தால் எப்படிப் பார்ப்பார். எவ்வளவேனும் பார்க்க அவரால் முடியாது. அதனால், எல்லா ஜீவராசிகளினுடைய இருதய கமலத்தில் ஆத்மா என்னும் பெயருடன் வந்துசேர்ந்து அவரவர்கள் தினந்தோறும் செய்யும் புண்ய பாவங்களை எல்லாம் உடனுக்குடனே அறிந்து அந்தந்த புண்ய பாவங்களுக்குத் தக்கபடி எப்படிப்பட்ட சிக்ஷகளை ஆத்மா விதிக்கிறாரோ அதை இனி சொல்லப்போகிறோம்.

ஸ்திரீபுருஷர்கள் எல்லோரும் முன் ஜன்மத்தில் செய்த புண்யபாவ கர்மங்களுக்குத் தக்கபடி அதன் பலனை இந்த ஜன்மத்தில் அனுபவிக்கின்றார்களே யொழிய, இந்த ஜன்மத்தில் செய்த புண்யபாவ கர்மங்களினால் உண்டானதல்ல. இந்த ஜன்மத்தில் செய்யும் புண்யபாவ கர்மங்களின் பலத்தை இனி எடுக்கப்போகும் ஜன்மத்தில் அனுபவிக்கப் போகின்றார்கள். இந்த ஜன்மத்தில் செய்யும் பாவகர்மத்திற்காக இனி எடுக்கப்போகும் ஜன்மத்தில் அவனுக்கு எப்படிப்பட்ட வியாதிகளை ஆத்மாவாகிய கடவுள் சிக்ஷையாய் விதிக்கப்போகின்றாரோ அதை இனி சொல்லப்போகிறோம்.

யாராகிலும் ஒருவன் மிகவும் சொல்ப பாவம் செய்தால் அதை அவனது இருதய கமலத்திலிருக்கும் ஆத்மா என்னும் கடவுள் உடனே அறிகிறார். அவ்வாறு ஆத்மா அறிந்தபின், அவன் இனி எடுக்கப்போகும் ஜன்மத்தில் இன்ன வருஷம் இன்ன மாதம் இந்ததேதி இத்தனை மணிக்குச் சொல்ப சுரம் வந்து இத்தனை நாள்வரையில் அந்த

சுரத்தினல் கஷ்ட்டம் அனுபவிக்க வேண்டுமென்று முன் ஜன்மத்தில்செய்த பாவ கர்மத்திற்காக சொல்ப சுரத்தை ஆத்மா சிக்ஷையாய் விதிக்கின்ருர். இதுபோல் ஒரே புருஷன் அனேகமுறை அப்போதைக்கப்போது செய்து வரும் பாவ கர்மத்திற்காக அந்த ஒரு புருஷனுக்கே அனேகமுறை சொல்ப சுரம், விசேஷ சுரம், அதுபோல் சிறிய தலைவலி, விசேஷ தலைவலி, அதுபோல் சிறிய வயிற்று வலி, விசேஷ வயிற்றுவலி இவ்வாருக அவரவர்களின் இருதய கமலத்திலிருக்கும் ஆத்மா என்னும் கடவுள் அந்தந்த பாவத்திற்குத் தக்கபடி வியாதியை உண்டாக்குவார்.

இதைவிட பாவம் அதிகமாய்ச் செய்தால் மூலவியாதி, பார்சவாய்வு, கபத்துடன் பெருமூச்சு உண்டாவது, அநேக விதங்களாகிய படைகள், காமாலைகள், குன்மவியாதி, வெள்ளைகுஷ்ட்டம், கைகால்கள் குறைந்து அதிலிருந்து சீழ் ரத்தம் வந்து அவனும், மற்றவர்களும் சகிக்கக்கூடாத கெட்ட நாற்றத்தை உண்டாக்கும். இதற்கு குஷ்ட்ட வியாதியென்று சொல்லப்படும். ஆத்மா என்னும் கடவுள் குஷ்ட்ட வியாதியுடையவனது இருதயகமலத்தில் இருந்த போதிலும் அவனுக்கிருக்கும் கெட்ட நாற்றம் அவனுக் குள்ளிருக்கும் ஆத்மா யென்னும் கடவுளைப் பற்ருது. அதெப்படியென்ருல், சூர்யனது கிரணங்கள் கெட்ட வாசனை, நல்லவாசனையில் வியாபித் திருந்தபோதிலும் அந்த கெட்ட வாசனை, நல்ல வாசனை சூர்யனை எப்படிப் பற்ருதோ அதுபோல் அந்தந்த ஜீவர்கள் செய்யும் புண்ய பாவ கர்மங்களும், அந்தந்த ஜீவர்களுக்கிருக்கும் நாற்றங்கள் எதுவும் அவர்களின் இருதயகமலத்திலிருக்கும் ஆத்மாவைப் பற்ருது.

ஆத்மா என்னும் கடவுள் எல்லாஜீவராசிகளினுடைய இருதய கமலத்தில் நிவசித்துக்கொண்டு அவரவர்கள் தினந்

தோறும் செய்துவரும் புண்ய பாவங்களையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்து அந்தந்த புண்ய பாவங்களுக்குத் தக்கபடி சுகதுக்கங்களைக் கொடுக்கின்ருரென்று அனேக மானவ ஜனங்களுக்குத் தெரியவராது. கோவில்களில் இருக்கும் விக்கிரகங்களே நிஜமான கடவுளென்று ஜனங்கள் நம்பி அந்த விக்கிரகங்களைப் பார்த்துக் கும்பிட்டுத் தங்களுக்கு வேண்டும் வரத்தை மனதில் நினைப்பார்கள். கல் விக்ரகங்களைப் பார்த்து அவர்களுக்கு வேண்டும் வரத்தை மனதில் நினைத்தவுடனே அவர்களின் இருதய கமலத்திலிருக்கும் ஆத்மாவானவர்உடனே அறிந்து அவர்கள் கேட்ட வரங்களை அந்த ஜன்மத்தில் ஆத்மாவாகிய தான் கொடாமல் மறு ஜன்மத்தில் கொடுப்பார்.

"நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்"

என்று சிவவாக்கியர் சொல்லியிருக்கின்ருர். நட்டகல் லென்பது கோவில்களில் இருக்கும் விக்ரகங்கள். அந்த விக்ரகங்களை வரம் கேட்டால் அது கல்லா யிருப்பதனல் ஜனங்கள் கேழ்ப்பதை தெரிந்துகொள்ள அவ் விக்ரகங்களுக்குச் சக்தியிராது. "நாதனுள்ளிருக்கையில்" நாதனென்பது எதுவென்ருல், இதுவரையில் சொல்லிவந்த ஆத்மா வென்னும் கடவுளே யொழிய இதைவிட "நாதன்" வேருெருவருமில்லை. இந்த ஆத்மா யென்னும் நாதனுகிய கடவுள் அந்தந்த பாவத்திற்குத் தக்கபடி வியாதிகளைக் கொடுக்கிருர் என்று இதுவரையில் சொன்னேம். வியாதிகள் எதுவும் இல்லாதவர்கள் அனேகர் இருக்கின்ருர்கள். அப்படி இருப்பதற்குக் காரணம் என்னவென்ருல், முன் ஜன்மத்தில் அவர்கள் எந்த பாவ கர்மங்களையும் செய்தவர்களல்ல. அதனல் அவர்களுக்கு எந்த வியாதியும் இந்த ஜன்மத்தில் வரவில்லை. இதைவிட விசேஷ பாவங்களைச்

செய்தவர்களுக்கு இன்னும் எப்படிப்பட்ட அங்கயீன முள்ள வியாதிகள் வருகின்றனவோ அதை இனி சொல்லப் போகிறோம்.

சிலர் அஹங்காரத்தினால் விசேஷ துன்மார்க்க கார்யங்களைச் செய்து அநேகர்களின் மனதை நோகும்படி செய்பவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் செய்த துன்மார்க்க கார்யங்களை யெல்லாம் அவரவர்களின் இருதய கமலத்திலிருக்கும் ஆத்மா யென்னும் கடவுள் பார்த்துக் கொண்டிருந்ததனால் அவனுக்குத்தக்க சிக்ஷையை விதிக்க வேண்டுமென்று ஆத்மாவாகிய கடவுள் நினைத்து அவன் செய்த பாவகர்மத்திற்காக இனி எடுக்கப்போகும் ஜன்மத்தில் அவனுக்காக நொண்டி சிசுவை ஓர் ஸ்திரீ கர்ப்பத்தில் சிருஷ்ட்டிசெய்து அதன்பிறகு அவனைக் கொண்டுபோய் அந்த நொண்டி சரீரத்தில் போட்டுத் தானும் அவனுடன் கூடவே தொடர்ந்து அந்த நொண்டி சரீரத்தில் போய்ச் சேருவார். அப்படிச் சேருவதற்குக் காரணம்என்னவென்றால், அந்த நொண்டி ஜன்மத்தில் அவன் என்ன புண்ய பாவங்களைச் செய்கின்றானோ அதைப் பார்த்திருந்து அந்த புண்ய பாவத்திற்குத் தக்கபடி அதற்கு முன் எடுக்கப் போகும் ஜன்மத்தில் சுகதுக்கங்களைக் கொடுப்பதற்காக அவனுடன்கூடவே துடர்ந்துச் செல்லுகின்றார். அந்தந்த ஜீவர்கள் தம்சொந்த வீடாகிய மோக்ஷமென்னும்வீட்டை அடையும் வரையில் அந்தந்த ஆத்மாக்கள் அவர்களுடன் கூடவே தொடர்ந்து வந்துகொண்டே யிருப்பார்.

மற்றொருவன் சரீரத்திலிருக்கும் ஆத்மாவானவர் அவன் செய்த பாவகர்மத்திற்காக அவனை விசேஷசெவிடனைப் பிறப்பித்துத் தானும் அந்த செவிட்டுச் சரீரத்தில் போய்ச் சேருவார். வேறொருவன் சரீரத்திலிருக்கும் ஆத்மாவானவர் அவன் செய்த பாவத்திற்காக அவனைக் குருடனைப் பிறப்பித்துத் தானும் அந்த குருட்டுச் சரீரத்தில் போய்ச் சேருவார். இவ்வாறாக அந்தந்தஜீவர்களில் இருக்கும் ஆத்மாக்கள் உயர்வு, தாழ்வான சிக்ஷைகளை விதித்து ஆத்மாக்களாகிய தாமும், அவர்களுடன் கூடவே சென்று அந்தந்த ஜன்மங்களில் என்னென்ன நல்ல, கெட்ட கார்யங்களைச் செய்கின்றார்களோ அதை யெல்லாம் பார்த்திருந்து அதற்குத்தக்க தண்டனையை அடுத்த ஜன்மத்தில் விதிப்பார்.

இப்படிப்பட்ட அனேக விதங்களாகிய சிக்ஷைகளை கோர்ட்டு மேஜஸ்ட்ரேட்டு சிக்ஷிக்க அவரால் முடியாது. ஒருவனை குருடனாய் சிருஷ்ட்டித்த விஷயம் இதுவரையில் முன் சொன்னோமல்லவா? அந்த துன்மார்க்கன் குருட்டுச் சரீரத்தில்போய்ச் சேர்ந்த பிறகு, அந்தஜன்மத்தில் அவன் என்ன செய்கின்றானோ அதை இனிசொல்லப்போகிறோம்.

இவன் பிறக்கும்பொழுதே இரண்டு கண்களும் இல்லாமல் குருடனாய்ப்பிறந்து வளர்ந்து பெரியவனான பிறகு, அந்தக் குருடன் என்ன சொல்லுகிறானென்றால், ஐயோ! முன் ஜன்மத்தில் நான் என்ன பாவம்செய்தேனோ தெரியவில்லை. இரண்டு கண்களும் இல்லாமல் குருடனாய்ப் பிறந்து துக்கத்தை அனுபவிக்கின்றேன் என்று மிகவும் மனம் நொந்து ராமா ராமா என்று எப்பொழுதும் கடவுளைத் துதி செய்துகொண்டே இருப்பான். இவனுக்குத் தெரியாமல் இவன் கால் யார்மேலாகிலும் பட்டால் சுவாமீ! நான் குருடன், என் கால்பட்டது, மன்னிக்கவேண்டும் என்று மிகவும் வணக்கமாய் அவர்களைக் கேட்டுக்கொள்வான். இதுபோல் தன் மரணகாலம் வரையில் அவன் ஒருவருக்கும் தீங்குசெய்யாமல் தனக்குள் தான் தன் மனதை நொந்து, எல்லோருக்கும் அவன்மேல் கருணை உண்டாகும்படி கெஞ்சிக்கேட்டு பிச்சை யெடுப்பான்.

இவற்றை யெல்லாம் அவன் இருதய கமலத்திலிருக்கும் ஆத்மாவாகிய கடவுள் பார்த்து, "குருட்டுச் சரீரம் வந்தபின் இவனுக்கு நல்ல புத்தி வந்தது" என்று அவனுக்குள்ளிருக்கும் ஆத்மா என்னும் கடவுள் தெரிந்துகொண்டு "இவன் முன் ஜன்மத்தில் விசேஷ தீங்குசெய்து பாவமென்னும் மூட்டையைச் சம்பாதித்துக் கொண்டான் இதனால் இவனைக் குருடனாய்ச் சிருஷ்ட்டித்தேன். இவன் இந்த ஜன்மத்தில் ஒரு பாவகார்யமும் செய்யாமல் எல்லோருக்கும் இவன்மேல் கருணை உண்டாகும்படி கெஞ்சிக் கேட்டு பிச்சையெடுக்கின்றான். ஆதலால், கண்ணில்லாமல் இருக்கும் இந்தகுருட்டுச் சரீரம் போனவுடன் இவனை நல்ல வீட்டில் சிருஷ்ட்டி செய்யவேண்டும்" என்று அவனுக்குள் சாக்ஷி சொரூபனாயும், ஜீவாத்மாவாயும் இருக்கும் கடவுளானவர் தீர்மானம்செய்து, அதன்பிறகு அவன் குருட்டுச் சரீரம் போனபின் அவனை நல்ல செல்வமுடைய வீட்டில் ஆத்மாவாகிய தான் கொண்டுபோய்ப் போட்டு, அந்த ஜன்மத்தில் அவன் என்ன செய்கிறானோ என்பதை பார்ப்பதற்காக தானும் அவனுடன் கூடவே வருவார். இவ்வாறாகவே ஆத்மாவாகிய கடவுள் எல்லா ஜீவராசிகளின் இருதய கமலத்தில் இருந்து அவரவர்கள் தினந்தோறும் செய்துவரும் புண்ய பாவங்களுக்குத் தக்கபடி பலத்தைக் கொடுத்துக்கொண்டு வருகிறார். இந்த ரகஸ்யம் ஜனங்களுக்குத் தெரியாமல் கோவிலுக்குச் சென்று அங்குள்ள விக்ரகங்களைப் பார்த்து அவைகளே நிஜமான கடவுளென்று நம்பிக் கும்பிட்டு, தமக்குவேண்டும் வரங்களை மனதில் நினைத்துக்கொள்வார்கள். அவர்கள் அவ்வாறு மனதில் நினைத்த தக்ஷணமே அவர்களின் இருதய கமலத்திலிருக்கும் ஆத்மாவிற்கு உடனே தெரியவரும். அதன் பிறகு, அவர்கள் மர்ணமடையும்பொழுது ஆத்மாவாகிய

தானே அவர்களை வேறு சரீரத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பித்துத் தானும் அவர்களுடன் கூடவே சென்று, அவர்களின் இருதயகமலத்தில் நிவசித்துக்கொண்டிருந்து, முன் ஜன்மத்தில் அவர்கள் கேட்ட வரத்தை அந்த ஜன்மத்தில் ஆத்மாயென்னும் கடவுள் கொடுப்பார்.

எல்லோருக்கும் மூச்சி மூக்கில் நடந்து ஆயுள் குறைந்துவருவதை இனி சொல்லப்போகிறோம்.

மூச்சி மூக்கில் நடந்து ஆயுள் குறைந்து வருவது.

உலகத்திலுள்ள ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் தாயின் கர்ப்பத்திலிருந்து வெளி வந்ததுமுதல், இப்பொழுது ஜீவித்திருக்கும் நாள் வரையில் ரெப்பைமூடுமவ்வளவு நேரமும் எங்கும் நிற்காமல் இராப்பகலாய், மூச்சானது, அவரவர்களின் நாசியில் (மூக்கில்) உள்ளே ஏறிக்கொண்டும், மறுபடியும் கீழ் இறங்கிக்கொண்டுமாய் இருக்கின்றது. அவரவர்கள் பிறந்த நாள்முதல், இன்றையதேதி வரையில் செலவழிந்த மூச்சிகள் போக இன்னும் இருப்பில் எவ்வளவு மூச்சிகள் இருக்கிறதோ அவைகளும் சற்று நேரமாகிலும் நிற்காமல் இராப்பகலாய் மூக்கில் நடந்து இருப்பில் இருந்த மூச்சிகளெல்லாம் செலவழிந்து கொண்டேவந்து கடைசியில் இருந்த மூச்சானது மூக்கிலிருந்து வெளிவந்து ஓடிவிடும். அதன் பிறகு மூக்கில் நடக்க ஒரு மூச்சாகிலும் இருப்பில் இல்லாததனால், அப்பொழுது அந்தச் சரீரம் கட்டையைப்போல் விழுந்துக் கிடக்கும்.

கணக்கில்லாமல் எந்தகாலமும் மூச்சி மூக்கில் நடந்து கொண்டே இருக்குமா என்ன? அப்படி நடக்காது. அவ ரவர்களின் கர்மங்களுக்குத் தக்கபடி அந்தந்த வீட்டில் போய்ப் பிறந்து இத்தனைமணி, இத்தனைநாள், இத்தனை மாதங்கள், இத்தனை வருஷங்கள் வரையில் பிழைத்திருக்க வேண்டுமென்று ஒரு கணக்குண்டு. அந்த கணக்குப்படி இத்தனைமணி, இத்தனைநாள், இத்தனைமாதங்கள், இத்தனை வருஷங்களுக்கு எவ்வளவு மூச்சிகள் இருக்கவேண்டுமோ அவ்வளவு மூச்சிகள் மாத்திரம் இருக்கும். அந்த மூச்சிக ளெல்லாம் செலவழிந்தவுடன் இறந்துவிடுவார்கள். இந்த மூச்சியின் கணக்கைச் சொல்லுகிறோம் கேளுங்கள்.

ஒரு வீட்டில் குழந்தை பிறந்து, 6-மணிநேரமிருந்து இறந்துவிட்டால் அக்குழந்தைக்கு, 5,400 ஐயாயிரத்து நானூறு மூச்சிகள் மாத்திரம் இருக்கும். ஐயாயிரத்து நானூறு மூச்சிகளும் செலவழிந்தவுடன் அக்குழந்தை இறந்துவிடும். இன்னொரு வீட்டில்,

இன்று காலை 6-மணிக்குப் பிறந்து, நாளைய காலை 6-மணிக்கு இறந்துவிட்டால் அக்குழந்தைக்கு 21,600 இருபத்தோராயிரத்து அறுநூறு மூச்சிகள் மாத்திரம் இருக்கும். அந்த மூச்சிகளெல்லாம் செலவழிந்தவுடன் அக்குழந்தை இறந்துவிடும்.

வேறொரு வீட்டில் பத்து வருஷங்களிருந்து இறந்து விட்டால் அப்பாலகனுக்கு 7,77,60,000 எழுகோடி எழுபத்தேழுலக்ஷத்து அறுபதினாயிரம் மூச்சிகள் இருக் கும். அந்த மூச்சிகளெல்லாம் செலவழிந்தவுடன் அச்சிறு வன் இறந்துவிடுவான்.

ஒருவன் 85 எண்பத்தைந்து வருஷங்களிருந்து இறந்துவிட்டால், அவனுக்கு, 67,01,40,000 அறுபத்தேழு

கோடி ஒருலக்ஷத்து நாற்பதினாயிரம் மூச்சிகள் இருக் கும். அம்மூச்சிகளெல்லாம் செலவழிந்தவுடன் இறந்து விடுவான். இத்தனைக்கோடி மூச்சிகணக்கை உங்களுக்கு விவரமாய்த் தெரியும்படி கணக்கைக் காட்டுகிறோம்.

ஒருவருஷத்திற்கு 365-முந்நூற்று அறுபத்தைந்து நாள்கள் ஆகிறது. எண்பத்தைந்து வருஷங்களுக்கு 31,025 முப்பத்தோராயிரத்து இருபத்தைந்து நாள்கள் ஆகின் றது. நாள் ஒன்றிற்கு 21,600 இருபத்தோராயிரத் தறு நூறுமூச்சிகள் நடக்கின்றது. இதுகளையெல்லாம் பெருக்க வேண்டும். $365 \times 85 = 31,025$ இது, 85 வருஷங்களுக்கு வந்தநாட்கள். இந்த நாள்களையும் 21,600 மூச்சிகளையும் பெருக்கவேண்டும். $31,025 \times 21,600 = 67,01,40,000$ அறுபத்தேழுகோடி ஒருலக்ஷத்து நாற்பதினாயிரம் மூச்சி கள் ஆகிறது.

இத்தனைகோடி மூச்சிகளும் இருப்பதற்கு சரீரத்தில் ஒரு இடம் இருக்கவேண்டுமல்லவா? அந்த இடம் எது வென்றால் தொப்புள். இந்த தொப்புளில் மூச்சானது அந் தந்த வயதிற்குத் தக்கபடி எவ்வளவு மூச்சிகள் இருக்க வேண்டுமோ அவ்வளவு மூச்சியும் அனேக சுற்றுகளாய்ச் சுற்றி படுத்துக்கொண்டு அதிலிருந்து இராப்பகலாய் மூச்சி செலவழிந்துகொண்டேவந்து கடைசியில் தொப்புளில் மூச்சி எதுவுமில்லாமல் காலியாய்விடும். மூச்சி தொப்பு ளில் காலியாய்விட்டால் உயிர் போய்விட்டது என்று சொல்லுவார்கள். இந்த மூச்சியே உயிர் என்றும் பிராண னென்றும் சொல்லப்படுமேயொழிய இந்த மூச்சைவிட வேறு உயிராகிலும், அல்லது பிராணனாகிலும், சரீரத்தில் கிடையாது.

மனிதர்களினுடையவும், ஜீவராசிகளினுடையவும், ஆயுள் பிரமாணம் இந்த மூச்சேயென்று தெரிந்துகொள்

ளுங்கள். ஜோஸ்யர்கள் ஜாதகத்தில் எழுதும் வருஷங்களல்ல. ஜோஸ்யர் சொல்லுவதுபோல் நடக்குமென்று நம்பி ஜனங்கள் மோசம் போகின்றார்கள்.

எல்லா ஸ்திரீபுருஷர்களுக்கும் நாள் ஒன்றிற்கு 21,600 இருபத்தோராயிரத்து அறுநூறு மூச்சிகள் நடக்கின்றன. இருபத்தோராயிரத்து அறுநூறு மூச்சி கணக்கு எப்படிவந்ததோ அந்த கணக்கை விவரித்துச் சொல்லுகிறோம் கேளுங்கள்.

நிமிஷத்திற்கு 15-மூச்சிகள் நடக்கும். ஒருமணிக்கு 60-நிமிஷங்கள். இந்த 60-நிமிஷமும், 15-மூச்சையும் பெருக்கினால், $60 \times 15 = 900$ ஆகிறது. என்றால் மணிக்கு 900 தொளாயிரம் மூச்சிகள் நடக்கிறது. நாள் ஒன்றிற்கு 24-மணியாகின்றது. இந்த 24-மணியையும், 900 தொளாயிரம் மூச்சையும் பெருக்கினால், $24 \times 900 = 21,600$ இருபத்தோராயிரத்து அறுநூறு மூச்சிகள் ஆகின்றது. இதுபோல் ஒவ்வொருவருக்கும் தினந்தோறும் இருபத்தோராயிரத் தறுநூறு மூச்சிகள் செலவழிந்து தினந்தோறும் ஆயுள் குறைந்து வருகிறது. இதற்கு ஞெஞ்சரி விளக்கம் பிரமாணம் என்னவென்றால்,

"இறந்திடுமிருபத் தோ ராயிரத் தறுநூறுபேறும்,
இறந்திடுமிக் காயம்போனா லீசனைக் காண்பதென்னாள்"

ஆயுளை விருத்தி செய்துகொள்வதற்கும், மனதை, ஒருநிலையில் கொண்டுவந்து நிருத்துவதற்கும் இச்சிறிய நூலில் எழுதியிருக்கின்றோம். இதில் சொல்லியதுபோல் செய்துவந்தால் ஆயுளும் விருத்தியாகும், மனம் வெளி வியவகாரங்களில் ஓடாமல் ஒரே நிலையில் நின்றுவிடும். அதை இனி சொல்லப்போகிறோம்.

அந்தந்த உத்தியோகம் அந்தந்த வியாபாரம், பயிர்த்தொழில் செய்வது, இன்னும் அவரவர்களுக்கு வேண்டும் வேலைகளைச் செய்வது, படிப்பது, எழுதுவது, பேசுவது விளையாடுவது, தூங்குவது, இந்த காலங்களில் தவிர மற்ற சும்மாயிருக்குங் காலங்களிலும், மலமூத்திரங்களை விடும் பொழுதும் நடக்கும்பொழுது கார் பஸ் வண்டி ரெயிலில் போகும்பொழுதும் இந்தக் காலங்களிலெல்லாம் என்ன செய்யவேண்டுமென்றால்,

மூக்கு நுனியில் திருஷ்டியை நிருத்தி மூச்சி உள்ளே போகும்பொழுது அந்த மூச்சை மனதினால் பார்த்துக் கொண்டிருநது மறுபடியும் அந்த மூச்சி உள்ளே நிற்காமல் உடனே கீழ் இறங்கும். அப்பொழுது அதை இறங்கவிடாமல் சற்றுநேரம் உள்ளே நிருத்தி அதன்பிறகு விடவேண்டும். விட்டபிறகு அந்த மூச்சி கீழ்யிரங்கி மறுபடியும் கீழும் நிற்காமல் உடனே உள்ளேபோகும். அப்பொழுது அதை உள்ளே போகவிடாமல் அங்கும் சற்று நேரம் நிருத்த வேண்டும். இதுபோல் மூச்சி உள்ளே போகும்பொழுதும், போனபிறகு மறுபடியும் கீழ் இறங்கி உள்ளேபோகும் பொழுதும் அதை போகவிடாமல் ஒவ்வொரு மூச்சையும் அங்கங்கு சற்றுசற்றுநேரம் நிருத்தவேண்டும். இந்த இரண்டுசாதனங்களையும்செய்துவந்தால், என்றால் மூச்சை நிருத்துவது மூச்சை மனம் கவனித்துப் பார்த்துக்கொண்டிருப்பது. இவ்விரண்டையும் செய்துவந்தால் ஆயுள் விருத்தியாகிறது; அன்றியும் மனம் வெளி வியவகாரங்களில் போக அவகாசமில்லாமல் ஒரேயிடத்தில் நின்றிருக்கும்.

நெல் கேழ்வரகு சோளம் கம்பு முதலானவைகளுக்கு விதை எப்படியிருக்கிறதோ அதுபோல் சரீரமென்னும்

விருக்ஷத்திற்கும் விதையொன்று இருக்கின்றது. அது என்ன விதையென்றால் எண்ணங்களேயாம். இதற்குக் கைவல்யம் பிரமாணம் என்னவென்றால்,

எந்தவாருயிர் யாதோர் பொருளினைச்
சிந்தையாற் பற்றிக் காரியஞ் செய்திடின்
அந்தயோனியதா மென் றறிவினால்
பந்தமில் பொருள் பற்றுத றக்கதே.
சடமதாகிய தியான மெய்யாகிய
சர்வ முத்தியை நல்கும்
திடமான தெப்படியெனி லவரவர்
தியானமே பிறப்பாகும்
உடலமாசையாற் றியானிக்கிற்
றியானித்த வுடல்க ளாகுவர் மைந்தா
தொடர்பவங் கெடச் சொரூபமே
தியானிக்கிற் சொரூப மாகுவர் மெய்யே.

அதாவது, பொய்யாகிய நினைப்பானது சத்தியமாகிய பரிபூர்ண கைவல்யத்தைத் தரமாட்டா. அவரவர் மரண காலத்தில் நினைக்கும் ரூபமாகவே மறு ஜனனமுண்டாகும். அதாவது, பிராணனை விடும்பொழுது எதை நினைத்துப் பிராணனை விடுகின்றார்களோ அந்த ரூபத்தை அடைவார்கள். இதன்றியும்,

ஆசையாற் சந்திர னங்கந் தேய்ந்தனன்
ஆசையாற் சவுபரி யறிவை நீங்கினான்
ஆசையா னராசுர ணுவி போக்கினான்
ஆசையால் வாலியு மழிந்து போயினான்.

"பந்தமெனு மக்கள்மனை வீடுதோட்டந்தூரவு
பணமாகு மிதுக ளெல்லாம்
பாரினில் வரும்போது வந்ததிலை நாளைக்குப்
பாடைமேல் போகும்போது

சொந்தமென வந்திடா திடையினிற் கனவுபோல்
தோன்றியே வழிவ தென்று
சுத்தமா யெண்ணாமல் நித்தமே சதமென்று
தொல்லுலகிலெண்ணி நாளும்
வந்தமட மாதினோ டினிதாக வாடியே
வலிவை யெல்லாம் மிழந்து
வாழ்நாட் கழித்துடனிறப்ப தன்யாயமே."

"தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
கொண்டு போவார்."

(திருஞானசம்பந்தர்.)

தந்தையார் தாயாருடன் பிறந்தார் தாரமார்
புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்கனே போமா றேதோ மாயமா
மிதற்கேது மகிழவேண்டாம்
சிந்தைநீ ருமக்கென்று சொல்லக்கேண்மின் றிகழ்பதியும்
வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாம நமச்சிவாய வென்றெழுவார்க்
கிருவிசும்பி லிருக்கலாமே.

(திருஞானசம்பந்தர்.)

மாடுமக்களும் சுற்றமும் பெண்டிரு
மாளிகையுடன் வாழ்வு
நாடுராச்சிய மாண்டிடும் புகழ்ச்சியு
நம்ம தென்றே தேகத்தி
னூடுசென்று நீயெனதுட லியானென வுழன்
றலுத்திடு நெஞ்சே
வீடுவிட்டுயிர் ஏகிடும் போதினில்
வினைவழி நுழைந்தாயே.

(சிவானந்தபோதம்)

மானவ ஜன்மம் வருவதற்குக் காரணம் எண்ணங்களேயாம்.

அடிக்கடி உதித்துக்கொண்டிருக்கும் எண்ணங்களை யெல்லாம் யோகாக்கினியினால் கொளுத்திவிடவேண்டும். விரைக்காக வைத்தநெல்லை கொஞ்சம் வருத்து விரைத்தால் முளையாகாது. அதுபோல், மானவஜனங்களுக்கு சரீரம்வர விரையாயிருக்கும் எண்ணங்களை யோகாக்கினியினால் வருத்துவிட்டால் மறுபடியும் அவர்களுக்கு ஜன்மம் வரமாட்டா. நீங்கள் எண்ணங்களை யோகாக்கியினால் வறுக்கமாட்டீர்கள். ஆதலால், எந்த வேலையும் இல்லாமல் சும்மாய் இருக்கும்பொழுது இதுவரையில் முன்சொல்லியதுபோல் எப்பொழுதும் மூச்சையே பார்த்துக்கொண்டு வந்தால் பிராணன் என்கிற மூச்சை சரீரத்தைவிட்டுப் போகும்பொழுது அவர்களுக்கு எந்த எண்ணங்களும் வரவேமாட்டா. இவ் வப்பியாசத்தில், எண்ணங்கள் இல்லாததனால், பிராணனை விடும்பொழுது அவர்களுக்கு எந்த எண்ணங்களும் வரவேமாட்டா.

இவ்வளவேன்? ஒருவாரம்வரையில் மேற்சொல்லியதுபோல் மூச்சை மனதில் பார்த்துக்கொண்டும் மூச்சை மேலும், கீழும் நிறுத்திக்கொண்டும் வாருங்கள். அப்பொழுது அதன் அநுபவம் உங்களுக்கே பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும்.

இதன்றியும் மூச்சிவிஷயம் இன்னும் சொல்லுகிறோம் கேளுங்கள். எல்லோருக்கும் மூச்சி வலது நாசியில் நடக்கும்பொழுது எட்டங்குலம் நீளமவ்வளவு மூச்சி வலது நாசியில் வெளிவரும். இடது நாசியில் நடக்கும்

பொழுது பதினறங்குலம் நீளமவ்வளவு மூச்சி வெளிவரும். இதுபோல் தினந்தோறும் மூச்சிகள் நடப்பதனால் ஆயுள் சிறுகச்சிறுக குறைந்துகொண்டே வந்து உள்ளேயிருக்கும் மூச்சிகளெல்லாம் செலவழிந்தவுடன் இறந்துவிடுகிறார்கள்.

ஒரு வீட்டில் யாருக்காகிலும் ஒருவருக்கு வியாதி வந்து இறந்துவிட்டால் அந்த வியாதியின் பெயரைச் சொல்லி அதனால் இறந்துவிட்டாரென்று சொல்லுவார்களேயெழிய மூச்சிகளெல்லாம் சிலவழிந்துவிட்டது, அதனால் இறந்துவிட்டாரென்று ஒருவராகிலும் சொல்லமாட்டார்கள். அல்லது பிராணன் போய்விட்டதென்று சொல்லுவார்கள். பிராணன் என்பது எதுவென்றால்? இந்த மூச்சியேயாம். இந்த மூச்சைவிட வேறே பிராணனென்பது சரீரத்தில் இல்லை. சரீரத்தில் தச வாயுக்கள் என்றால், பத்து; பத்து வாயுக்கள் இருக்கின்றன. இந்த பத்து வாயுவிலும் பிர்ராணவாயுவே சிரேஷ்டமானது. இந்தப் பிராணவாயுவு எதுவென்றால், மூச்சி; இந்த மூச்சியைவிட இன்னும் வேறு பிராணன் என்பது சரீரத்தில் இல்லையென்று மறுபடியும் சொல்லுகிறோம். மூச்சி என்னும் பிராணன் சரீரத்தைவிட்டு எப்பொழுது கிளம்பிவிடுகிறதோ அப்பொழுது அந்த மூச்சிக்குச் சம்பந்தப்பட்ட மற்ற ஒன்பது வாயுக்களும், அதனுடன் கூடவே சென்றுவிடும்- இந்த பத்து வாயுக்களும் சென்றுவிட்டால் சரீரம் கட்டையைப்போல் விழுந்துகிடக்கும். அப்பொழுது அந்தச் சரீரத்தைப் பிணம் என்று சொல்லுவார்கள். பிணமாய் விழாதமுன், தான் குடியிருந்த சரீரத்திற்கு வந்த மனைவிமக்கள் மேலும், பந்து ஜனங்களின். மேலும் விசேஷ பிரீதியாயும், ஆசையாயும் இருப்பார்கள்.

அவர்கள்மேல் விசேஷஆசையாயிருந்தபோதிலும் பிராணனென்கிற மூச்சை விடும்போழுது மாத்திரம் அவர்கள்மேல் இருந்த ஆசையும், அவர்களையும் பூர்த்தியாய் மறந்து பிராணனை விட்டுவிடுவார்கள். அந்த ஆசைகளெல்லாம் சிலவருஷங்கள் அந்த வீட்டில் தற்காலம் இருக்கும் வரையில் மாத்திரம் இருக்கப்பட்ட ஆசைகளேயொழிய எப்பொழுதும் அந்த வீட்டில் இருப்பவர்கள்மேல் இருக்கப்பட்ட ஆசைகளல்ல. அந்த வீட்டிலிருந்து சென்றபிறகு, மறுபடியும் இன்னொரு குடும்பத்தில்போய்ப்பிறப்பார்கள். அங்குபோய்ப் பிறந்து, வளர்ந்து பெரியவர்களான பிறகு மறுபடியும் அந்த ஜன்மத்தில் வேறு மனைவி மக்கள், பந்து ஜனங்கள் புதியதாய் வருவார்கள். அப்பொழுது அந்த மனைவி மக்கள்மேலும், பந்துஜனங்களின்மேலும் அந்த ஜன்மத்தில் மாத்திரம் தற்சமயம் விசேஷ பிரீதியாயும், ஆசையாயும் அவர்கள்மேல் இருப்பார்களேயொழிய அதற்குமுன் ஜன்மத்தில் வந்துகொண்டிருந்த மனைவி மக்கள், பந்துஜனங்கள் விஷயம் எதுவும் அவர்களுக்குத் தெரியவராது. இதுபோல் ஒவ்வொரு ஜன்மத்திலும் புதிதாய் வந்துகொண்டிருக்கும் மனைவி மக்கள், பந்து ஜனங்கள்மேல் ஆசைகளுடன் இருப்பது, அதற்குமுன் ஜன்மங்களில் வந்துகொண்டிருந்த மனைவிமக்கள், பந்து ஜனங்கள் முதலானவர்களை மறந்துகொண்டிருப்பது. இதுபோல் ஒவ்வொரு ஜன்மத்திலும் வரும் பெண்டுபிள்ளைகளின்மேல் ஆசையாயிருந்து சென்றுகொண்டிருக்கிறார்கள். அவர்கள் சென்றபிறகு அவ்வீட்டில் இருக்கப்பட்டவர்கள் அழுகின்றார்கள். அப்படி அழுவதேன்? இன்று அவர்கள் சென்றால், இன்னும் சில வருஷங்களுக்குள் இவர்களும் சென்றுவிடுவார்களேயொழிய அதே வீட்டில் சாஸ்வதமாய் இருக்கமாட்டார்கள். அதற்காக ஏன் அழ

வேண்டும். அப்படி அழுவதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், இதுவரையில் கண்களுக்கெதிரில் பார்த்துக்கொண்டும் சந்தோஷமாய் அவர்களிடம் பேசிக்கொண்டும் அவர்களின்மேல் ஆசையாய் இருந்ததனால் அவர்களை நினைத்து துக்கப்பட்டு அழவேண்டியதாய் இருக்கின்றது. ஆஹா! இந்த மானவஜன்மம் என்ன விசித்திரமாய் இருக்கிறதோ பாருங்கள்.

சரீரத்தில் பத்து வாயுக்களும் இருந்தால்தான் அப்பொழுது, ஸ்திரீ புருஷர்களாய் இருந்து அங்குமிங்குமாய்த் திரிந்துகொண்டும் எல்லோரிடத்திலும் பேசிக்கொண்டும் எல்லா வேலைகளைச் செய்துகொண்டும் மனைவி மக்கள்மேலும் பந்து ஜனங்களின்மேலும் ஆசையாயிருப்பார்கள். சரீரத்தில் பத்துவாயுக்கள் இல்லாவிட்டால் எந்த வேலையும் செய்யாமல் சரீரம் கட்டையைப்போல் பிணமாய் விழுந்துகிடக்கும். இந்த பத்து வாயுக்களும் சரீரத்தில் இருந்துகொண்டு என்னென்ன வேலைகளைச் செய்கிறதோ அதை இனி முன்சொல்வோம்.

எல்லோருக்கும் மூச்சி தொப்புளில் இருக்குமேயொழிய மலமூத்திரங்கள் இருக்கும் வயிற்றில் இராது. மூச்சி தொப்புளில் இருப்பதனால் இந்த தொப்புளுக்கு ‘குண்டலி ஸக்தி’ என்றும் ‘மணிபூரக’ மென்றும் சொல்லப்படும். பாம்பானது பாம்புப்பெட்டியில் சுருணையாய்ச் சுற்றிக்கொண்டுஎப்படிப் படுத்திருக்கின்றதோ அதுபோல் மூச்சியென்னும் பாம்பானது தொப்புள் என்னும் பெட்டியில் சுருணையாய்ச் சுற்றிக்கொண்டு படுத்திருக்கும். இதற்குப் “போதலூரு வீரபிரம்மய்யங்காரு” சொன்ன பாடலை இங்கு சொல்லுகிறோம்.

இராகம்] ஆனந்தபைரவி [ஆதிதாளம்.

சந்தமாம—சந்தமாம—சந்தமாம

ஈ ஸந்திதெலிபே ஞானுலாரா||ச|| காயமனு புட்டலோன||ச|| பாமு மாயகானே மெலகுசுண்டு||ச|| ஜண்டநாக ஸ்வரமுலூதி||ச|| பாமுனு பாது பெகலிஞ்சவலெனு||ச|| தொம்மிதி வாகிள்ளு மூஸி||ச|| பாமுனு னெம்மதிகா பட்டவலெனு||ச|| பக்தியனே கட்டுகெட்டி||ச|| தேஹி தேறமுல ஸந்து||ச|| பாமு தெலியகுண்ட சுட்டுகொன்னதி||ச|| அஜபமந்த்ர த்யானமுஜேஸி||ச|| அகண்ட களதோ வெலுகுசுண்டு||ச|| பாமுனுபட்டே ஜோகியெவரே||ச|| ஓஹோ! அதனிபேரே வித்தகுருடு||ச||

அதாவது, சரீரத்தில் தொப்புள் என்னும் புற்றுக்குள் எவர்களுக்கும் தெரியாமல் மூச்சியென்னும் பாம்பு மாயமாய் படுத்துக்கொண்டிருக்கிறது. அந்த மூச்சியென்னும் பாம்பை; இரட்டை நாகசுரம் வாசிப்பதுபோல் இரண்டுமூக்குத் துவாரங்களிலும் மூச்சியென்னும் பாம்பை சமமாய் இழுத்துவிழுங்கி மூச்சி தொப்புளில் படுத்திருக்கும் இடத்தைவிட்டெழுப்பிநவத்துவாரமென்கிற ஒன்பது கதவுகளையும் சாற்றி மிகவும் நிதானமாய் அந்த பாம்பை பிடிக்கவேண்டும். இந்த மூச்சியென்னும் பாம்பைப் பிடிப்பதற்கு அதிக சிரத்தை பக்தி இருக்கவேண்டும். இந்த மூச்சியென்னும் பாம்பு சரீரத்திற்கு மத்யபாகமாகிய தொப்புள் என்னும் புற்றுக்குள் சுருணையாய்ச் சுற்றிக் கொண்டு அதிலிருந்து வெளிவரும்பொழுதும், வெளிவந்து மறுபடியும் உள் செல்லும்பொழுதும் தனக்குத்தானாகவே "ஸோஹம்" என்னும் மந்திரத்தை மூச்சியென்னும் பாம்பு இராப்பகலாய் ஜபம் செய்துகொண்டேயிருக்கும். அதாவது, மூச்சி உள்ளே போகும்பொழுது, 'ஸோ' என்னும் மந்திரத்துடன் சென்று, மறுபடியும் மூச்சி வெளிவரும் பொழுது 'ஹம்' என்னும் மந்திரத்தை தனக்குத் தானா

கவேஜபித்துக்கொண்டிருக்கும். மூச்சியும்பூணூலைப்போல் நீளமாயிருந்து ஸோஹம் மந்திரத்தை தனக்குத்தானாகவே ஒவ்வொருமூச்சியும்ஜபித்துக்கொண்டிருப்பதனால் இதற்கு அஜபகாயத்ரி என்கிற பெயருண்டாயிற்று. 'ஸோஹம்' என்னும் மந்திரத்திற்கு அர்த்தம் என்னவென்றால், நான் பிரம்மம், நான் பிரம்மம், நான் பிரம்மம் என்று இவ்வாறாக யோனி துவாரத்திலிருந்து வந்ததுமுதல் தன் மரண காலம்வரையில் ரெப்பை மூடுமவ்வளவு நேரமும் சும்மாயிராமல் "ஸோஹம், ஸோஹம், ஸோஹம்" நான் பிரம்மம், நான் பிரம்மம், நான் பிரம்மம் என்று ஒவ்வொரு மூச்சியும் இராப்பகலாய் ஜபம் செய்துகொண்டிருக்கும். பாம்பைப் பிடிக்கும் ஜோகியைப்போல், சித்த குருவும் மூச்சியென்னும்பாம்பைப்பிடிக்கும் ஜோதியாயிருந்துமூச்சியென்னும் பாம்பைப் பிடித்தார்.

மேற்சொல்லிய பாட்டில் எவ்வளவு ரகஸ்யமான அர்த்தம் அடங்கியிருக்கிறதோ பாருங்கள். எல்லா ஜீவ ராசிகளின் தொப்புள் என்னும் புற்றுக்குள் மூச்சியென்னும் பாம்பானது சுருணையாய்ச் சுற்றி படுத்துக்கொண்டிருக்கின்றது. மூச்சியென்னும் பாம்புதொப்புள் என்னும் பெட்டியில் சுருணையாய்ச் சுற்றிக்கொண்டு எப்படிப் படுத்திருக்கிறதோ அதை இதோ எதிரிலிருக்கும் படத்தில் ☞ காட்டப்பட்டிருக்கிறது பாருங்கள்.

சரீரத்தில் மூச்சி தங்கியிருக்கும் இடம் சொன்னோம். இந்த மூச்சிகளெல்லாம் எவ்வாறு சிலவழிந்துவருகிறதோ அதை இனி சொல்லப்போகிறோம்.



சரீரத்தில் மூச்சி தங்கியிருக்கும் இடம் சொன்னோம். இந்த மூச்சிகளெல்லாம் எவ்வாறு செலவழிந்து வருகிறதோ அதை இனி சொல்லப் போகிறோம்.

மூச்சி எவ்வாறு செலவாகிறது.

எல்லோருக்கும் மூச்சி வலது நாசியில் நடக்கும் பொழுது எட்டங்குலம் நீளமவ்வளவு மூச்சி வெளிவரும். அந்த எட்டங்குலம் நீளமவ்வளவு மூச்சி வெளிவரும் பொழுது, Carbonic acid gass என்றால், கெட்ட மூச்சாய் வெளிவரும். வெளிவந்தபின் அந்த கெட்ட மூச்சானது வெளியில் இருக்கும் ஆக்ஸிஜன் என்னும் பரிசுத்தமான காற்றில் கலக்கின்றது. கெட்டமூச்சி ஆக்ஸிஜன் என்னும் பரிசுத்தமான காற்றில் கலந்தவுடன் அந்தக் கெட்ட மூச்சானது மிகவும் பரிசுத்தமான நல்லமூச்சாய் விடுகிறது. எட்டங்குலம் நீளமவ்வளவு மூச்சி நல்லமூச்சாய் மாறியபிறகு அதில் நாலங்குலம் நீளமவ்வளவு மூச்சி வெளியில் நஷ்டமாய் என்றால் குறைந்து மிகுதியாயிருக்கும் நாலங்குலம் நீளமவ்வளவு மூச்சி மாத்திரம் மறுபடியும் உள்ளேசென்று அங்கு தொப்புளில் சுருணையாய்ச் சுற்றிக்கொண்டிருக்கும் மூச்சியுடன்சேர்ந்து மறுபடியும் வெளிவரும்பொழுது எட்டங்குலம் நீளமவ்வளவு மூச்சாய் வெளிவந்து மறுபடியும் நாலங்குலம் நீளமவ்வளவு மூச்சி நஷ்டமாய் மிகுதி நாலங்குலம் நீளமவ்வளவு மூச்சிமாத்திரம் மறுபடியும் உள்ளே சென்று அங்கு தங்கியிருக்கும் மூச்சியில் மறுபடியும் போய்ச்சேர்ந்து வெளிவரும் பொழுது எட்டங்குலம் நீளமவ்வளவு மூச்சாய் வெளிவரும். இதுபோல் வலது நாசியில் மூச்சி நடக்கும் பொழுது தொப்புளில் யிருந்து வரும் ஒவ்வொரு மூச்சியிலும் நாலு நாலங்குலம் நீளமவ்வளவு மூச்சி வெளிவந்து நஷ்டமாய்க்கொண்டே வருவதனால்தொப்புளில் சுருணையாய்ச் சுற்றிக்கொண்டிருந்த மூச்சியின் சுற்றுகளெல்லாம்

சிறுகச்சிறுக பிரிந்து மூச்சிகள் குறைந்துகொண்டே வருவதனால், ஆயுள்பிரமாணமும் குறைந்துவரும்.

இடது நாசியில் நடக்கும்பொழுது பதினறங்குலம் நீளமவ்வளவு மூச்சி வெளிவரும். வெளிவந்தபின் எட்டங்குலம் நீளமவ்வளவு மூச்சி நஷ்டமாய் என்றால் குறைந்து மிகுதியாயிருக்கும் எட்டங்குலம் நீளமவ்வளவு மூச்சிமாத்திரம் உள்ளேசென்று மறுபடியும் வெளிவரும்பொழுது பதினறங்குலம் நீளமவ்வளவு மூச்சி வெளிவந்து மறுபடியும் எட்டங்குலம் நீளமவ்வளவு மூச்சி நஷ்டமாய் எட்டங்குலம் நீளமவ்வளவு மூச்சிமாத்திரம் உள்ளே சென்று மறுபடியும் வெளிவரும்பொழுது பதினறங்குலம் நீளமவ்வளவு மூச்சாய் வெளிவரும். இடது நாசியில் நடக்கும் பொழுது ஒவ்வொரு மூச்சியிலும் எட்டங்குலம் நீளமவ்வளவு மூச்சி நஷ்டமாவதனால், இதில் ஆயுள் இன்னும் அதிகமாய்க் குறைந்துவிடும். இதுபோல் குண்டலி சக்தி என்னும் தொப்புளில் சுருணையாய்ச் சுற்றிக்கொண்டிருந்த மூச்சிகளெல்லாம் சுருணையில் இருந்து பிரிந்து சுற்றுகள் குறைந்து மூச்சுகளெல்லாம் சிலவழிந்தபிறகு மூச்சிகள் யெதுவும் தொப்புளில் இராது. தொப்புளில் மூச்சி எப்பொழுது இல்லாமல்போகிறதோ அப்பொழுது அந்தச் சரீரம் பிணமாய்விடும். ஆதலால்,

பிரபஞ்சத்தில் மானவ சரீரம் கிடைப்பது அறிது. அதிலும் கூன், குருடு, செவிடு, நொண்டி முதலாகிய அங்கயீனமில்லாமல் பிறப்பது மிகவும் அறிது. இப்படிப்பட்ட மிகவும் அருமையான சரீரமெடுத்தும் எந்தக் கடவுளின் பூஜைகள் இல்லாமல் அனேகவிதங்களாய்க் கஷ்டப்பட்டுப் பொருளைச் சம்பாதித்து எந்த தானதருமங்களைச் செய்யாமலும், அதிதி அப்யாகதிகளுக்குச் சாதம் போடாமலும், ஒருவருக்கும் பிச்சைக் கொடாமலும்

வயலைக்காக்கும் பதுமையைப்போல் பொருளைக் காப்பாற்றித் தன் பெண்டுபிள்ளைகளுக்கு ஆஸ்த்தி சேகரித்து வைத்து தன் அந்தியகாலத்தில் ஏதோ ஓர் வியாதிவந்து தான் குடியிருக்கும் சரீரத்தைவிட்டுக்கிளம்பி மறுபடியும் மற்றொரு தாயின் கர்ப்பத்தில் போய்ப்பிறந்து அந்த ஜன்மத்தில் குடிக்கக்கூழும், கட்டத்துணியும் இல்லாமல் அதிக கஷ்டப்படுவார்கள். அப்படிக் கஷ்டப்படுவதற்குக் காரணம் என்னவென்றால், தனக்கு முன்ஜன்மத்தில் பொருள் அதிகமாயிருந்தும் தான தருமங்களைச் செய்யாமலும் நல்ல கார்யங்களுக்குப் பொருள்கொடாமலும் எந்த அன்னதானம் செய்யாமலும் இறந்துவிட்டபடியால் மறுஜன்மத்தில் மிகவும் ஏழையாய்ப் பிறக்கநேர்ந்தது. பொருளைச் சம்பாதித்து எந்த தான தருமங்களையும் செய்யாமல் உலகத்தில் அநேகர் இருக்கின்றார்கள். இப்படிப் பட்டவர்கள் எல்லோரும் இன்னும் சிலநாளில் மரணமடைந்து அடுத்த ஜன்மத்தில் விசேஷ கஷ்டப்படுவார்கள். பொருளுடையவர்கள் இந்நூலை வாசித்து இனியாகிலும் ஜாக்கிரதைப்படவேண்டும். ஜாக்கிரதைப்பட்டால் இனி எடுக்கப்போகும் ஜன்மத்தில் செல்வமுடையவர்கள் வீட்டில் போய்ப் பிறந்து சுகத்தை அடைவீர்கள்.

இந்நூலை வாசிக்கும் ஓ சகோதர! சகோதரிகளே !! பொருள் இருந்தாலும்சரி; அல்லது இல்லாவிட்டாலும்சரி. அவரவர்களுக்குத் தக்கபடி தம் சக்தியானுசாரமாய்த் தான தருமங்களைச் செய்தும், ஏழைகளுக்குச் சாதம் கொடுத்தும் இன்னுமுள்ள நல்ல கார்யங்களையே செய்து வருவீர்களாகில் இந்தப் புண்ய விசேஷத்தினால் இனி எடுக்கப்போகும் ஜன்மத்தில் ஏழைவீட்டில் போய்ப் பிறவாமல் பொருளுடையவர்களின் வீட்டில் போய்ப் பிறந்து யாதொரு குறைவுமில்லாமல் தனவந்தனையும், சுகஜீவியாயும் இருக்கலாம். பொருளைவைத்துக்கொண்டு எந்த தான தர்மங்களைச் செய்யாமல் இறந்துவிட்டால் என்ன பிரயோஜனம். கஷ்டப்பட்டு பொருளைச் சம்பாதித்து எந்த தான தர்மங்களையும் செய்யாமல் இறப்பதனால் மறுஜன்மத்தில் தாழ்ந்த ஜாதியில் போய்ப்பிறந்து அன்ன வஸ்த்திரங்களுக்கில்லாமல் மிகவும் கஷ்டப்படவேண்டியதாய் நேரிடும். இந்த ரகஸ்யம் அனேகருக்குத் தெரியாமல் கஷ்டப்பட்டு பொருளைச் சம்பாதித்துப் பெண்டுபிள்ளைகளுக்கு வைத்து மோசம்போகின்றார்கள். இந்த பெண்டு பிள்ளைகளும், அவரவர்கள் சம்பாதித்த தனதான்யாதி ஐஸ்வர்யங்கள் எதுவும் அவர்களுடன்கூட வரப்பட்டதுகளல்ல. ஆனால், அவர்களுடன்கூட எது வருமென்றால், அவர்களுக்குச் சாக்ஷியாயிருக்கும் ஆத்மாவும், அவர்கள் செய்த தானதர்மங்கள் இவ்விரண்டுமாத்திரம் அவர்கள் கூட போகும். தம்முடைய நிழல் தம்முடன்கூட எப்படி தொடர்ந்து வருகிறதோ அதுபோல் அவர்கள் செய்யும் தர்மம் அவர்களுடன்கூட தொடர்ந்துச்செல்லும்.

சரீரத்தில் பத்து வாயுவுகள் இருந்து வேலைசெய்வதை இனி சொல்லப்போகிறோம்.

சரீரத்தில் பத்து வாயுவுகள் இருந்து செய்யும் வேலைகள்.

ஸ்திரீபுருஷர்கள் எல்லோரும் நாம் மனிதராய் இருக்கின்றோம் என்று நினைப்பார்களேயொழிய அவர்களுக்குள் பத்து வாயுவுகள் இருந்து அந்தந்த வாயுவு அதன் அதன் வேலையைச் செய்கிறதென்று அனேக மானவ ஜனங்களுக்குத் தெரியவராது. அந்த வாயுவுகள் என்ன வேலைகள் செய்கிறதோ அதை இனி சொல்லப்போகிறோம்.

வாயுவுகள்—10.

தசவாயு வின் பெயரைச் சாற்றக்கேள் ப்ராணன்
நிஜமார பானனோ் வ்யானன்—வசமாரு
மத்தகைய ஞக னுதானன் கிரிகரன்
தேவதத்தன் தனஞ்ஜய னிதுதான்.

இதில் பிரதான வாயுவுகள்—5.

ஹ்ருதி ப்ராணோ குதே பானோ உதாநஹ கண்ட தேஸஸ்திதஹ
ஸமானோ நாபிதேஸஸ்து வ்யாநஸ்ஸர்வ ஸரீரகஹ.

ப்ராண - அபான - உதான - ஸமான - வியான. இவ்வைந்து வாய்வுகளுக்கும் பஞ்ச பிராணன்களென்று சொல்லப்படும்.

இவ்வைந்து வாயுவுகளும் சரீரத்தில் இருந்து செய்யும் வேலைகளை இனி சொல்லப்போகிறோம்.

1. பிராண வாயுவு:—இது, இருதயத்திலிருந்து பசி தாகங்களை உண்டாக்கி புசித்த ஆஹாரத்தை ஜீர்ணிக்கும்படி செய்யும்.

2. அபான வாயுவு:—இது, குதத்தில் இருந்து மல மூத்திரங்களையும், ஸம்போக காலத்தில் புருஷர்களுக்கு சுக்கிலத்தையும், ஸ்திரீகளுக்கு ஸோணிதத்தையும் வெளியில் தள்ளும்.

3. உதான வாயுவு:—இது, கண்டத்தில் இருந்து சாப்பிடும் பதார்த்தங்களை விழுங்கி ரசம் வேறு திப்பி வேருய்ச்செய்து அந்த திப்பியை மலப்பையில் தள்ளும்.

4. ஸமான வாயுவு:—இது, நாபியில் இருந்து உதான வாயுவினல் செய்த அன்ன ரசத்தை ரத்தமாகச்செய்து சரீரத்திற்கெல்லாம் அனுப்பும்.

5. வியான வாயுவு:—இது, சரீரம் எங்கும் நிறைந்து சரீரத்தின்மேல் படும் குளிர், உஷ்ணங்களை அறியும். இதற்கு உபவாயுக்கள் ஐந்துண்டு. அதை இனி சொல்லப் போகிறோம்.

உபவாயுக்கள்—5.

நாக - கூர்ம - கிருகர - தேவதத்த - தனஞ்செய.

6. நாக:—இது, கண்டத்திலிருந்து வாந்தியை உண்டாக்கும். அன்றியும் நேத்திரங்களினல் பார்க்கச்செய்யும்.

7. கூர்ம:—இது, கண்களில் இருந்து ரெப்பைகளை திறக்கவும், மூடவும் செய்யும்.

8. கிருகர:—இது, மூக்கிலிருந்து தும்மலை உண்டாக்கும்.

9. தேவதத்தன்:—இது, மார்பில் இருந்து கபத்தை உண்டாக்கிகொட்டாவியையும்,விக்கலையும் உண்டாக்கும்.

10. தனஞ்ஜயன்:—இது, தாயின் கர்ப்பத்திலிருக்கும் சிசுவை நெட்டி வெளியில் தள்ளும். சிசுவை வெளியில் தள்ளுவது இதுவரையில் முன் சொல்லியிருக்கின்றோம். இதன்றியும் இன்னும் என்னசெய்யுமென்றல், ஸரீரத்தைவிட்டு பிராணன் போகும்பொழுது, பிராண, அபான, உதான, ஸமான, வியான, நாக, கூர்ம, கிருகர, தேவதத்த இந்த ஒன்பது வாயுவுகளும் ஸரீரத்தைவிட்டுப் போய்விடும். தனஞ்ஜய வாயுவுமாத்திரம் போகாமல் சரீரத்தில் இருந்துகொண்டு சவத்தை அதிகநேரம் வைத்தால் சரீரத்தை வீங்கும்படிச்செய்யும். இன்னும் அதிக நேரம் வைத்தால் நாற்றத்தை உண்டாக்கும். இந்த தனஞ்ஜய வாயுவு சரீரத்தைவிட்டு எப்பொழுது போகுமென்றல், ஸவத்தை சுடலைக்குக் கொண்டுபோய்த் தீ

மூட்டி எரியும்பொழுது பாதி சரீரம் வெந்தபிறகு 'டப்' என்னும் சப்தத்துடன் வெடித்து அப்பொழுது போகும்.

கொளுத்தாமல் புதைத்தால் சரீரத்தை அழுகச் செய்து நாற்றத்தை உண்டாக்கி சரீரத்தை மண்ணோடு மண்ணாய்ச்செய்து அதன்பிறகு தனஞ்ஜயவாயுவுபோகும். சரீரத்தில் அந்தந்த இடத்தில் இருந்த வாயுவுகளெல்லாம் சரீரத்தைவிட்டுப் போய்விட்டால் அதன்பிறகு சரீரத்தில் என்ன இருக்கும். ஒன்றுமேயிராது. வெறுங் கட்டை தான் விழுந்துகிடக்கும். அந்த கட்டையைப் பிணமென்று சொல்லுவார்கள். சரீரத்தில் வாயுகள் இருந்து செய்யும் வேலையைச் சொன்னோம்.

ஸ்ரீ யோகீஸ்வரர் பத்நியார் சிவபதவி அடைந்தபின் ஸ்ரீ யோகீஸ்வரர் யோகசித்தி பெற்றதை இனி சொல்லப் போகிறோம்.

ஸ்ரீ யோகீஸ்வரர் பத்தினியார் சிவபதவி அடைந்த பிறகு ஸ்ரீ யோகீஸ்வரர் யோகசித்தி பெற்றது.

யோகி + ஈஸ்வரர் = யோகீஸ்வரர். என்றால், யோகியும் ஈஸ்வரனும் ஒன்றாகின்றார்கள் என்பதேயாம்.

ஸ்திரீ புருஷர்களெல்லோரும் அனேக ஜன்மங்களாய் மனைவிமக்கள் பந்துஜனங்கள் தனதான்யாதி ஐஸ்வர்யங்களின்மேல் விசேஷ ஆசையாயிருந்து அந்த ஆசையோடே இறக்கின்றார்கள். இங்கு இறந்தபின் மறுபடியும் இன்னொரு வீட்டிலிருக்கும் தாயின் கர்ப்பத்தில் போய்ச் சேர்ந்து மறுபடியும் சிசுவாய்ப் பிறக்கின்றார்கள். இவர்கள்

இதற்கு முன்னிருந்த பழைய சரீரத்தைவிட்டு வரும் பொழுது அந்தப் பழைய சரீரத்தில் அவர்களுக்கிருந்த எல்லா ஆசைகளும் அந்தப் பழைய சரீரத்தைவிட்டு அதுகளும் என்றால், அவர்களுக்கு முன்ஜன்மத்திலிருந்த ஆசைகளும் அவர்களுடன்கூடவே தொடர்ந்துவந்து, அவர்கள் எந்தச் சரீரத்தில் போய்ச் சேருகிறார்களோ அந்தச் சரீரத்தில் அவர்களுக்கிருந்த ஆசைகளும் போய்ச் சேருகின்றன.

இதுபோல் ஒவ்வொரு ஜன்மத்திலும் சேர்ந்து விருத்தியாகும் ஆசைகளெல்லாம் அவர்களுடன் கூடவே தொடர்ந்து அனேக ஜன்மங்களாய் வந்துகொண்டிருக்கின்றன. இவ்வாறாக ஒவ்வொரு ஜன்மத்திலும் ஆசைகள் ஸ்திரீபுருஷர்களைத் தொடர்ந்துகொண்டே வரும் ஆசைகளையெல்லாம் போக்கடிக்க வேண்டுமென்று எண்ணினால் அவ்வாசைகள் அவர்களைவிட்டுப் போகுமோ? அவைகள் ஒருபோதும் அவர்களைவிட்டுப் போகவேமாட்டா. ஏனென்றால் மானவ ஜனங்களை ஈஸ்வரர் சிருஷ்டி செய்யும்பொழுது ஆசையென்பதை ஒன்று சிருஷ்டி செய்து அவர்களுக்குஅந்த ஆசையை கொடுத்தனுப்பினார். இந்த ஆசைகள் தானாகவே அவர்களுக்கு வந்த ஆசைகளல்ல. இவை, ஈஸ்வரனால் கொடுக்கப்பட்ட ஆசைகள். ஆதலால், இந்த ஆசைகள் இவர்களைவிட்டு நீங்காமல், இன்னும் ஜன்மங்கள் எடுத்துக்கொண்டே போகப்போக இந்த ஆசைகளெல்லாம் அபிவிருத்தி யாய்க்கொண்டே போகுமேயொழிய எள்ளளவேனும் அந்த ஆசைகள் அவர்களுக்குக் குறையவேமாட்டா. இது யென்ன ஒரு ஜன்மத்தில் வந்த ஆசைகளா? அல்லவே? அனேக ஜன்மங்களாய் அவர்களைத் தொடர்ந்துவரும் ஆசைகள்.

இவ்வளவு ஆசையில் மூழ்கி இருக்கப்பட்டவர்கள் யோகாப்பியாசம் செய்துவந்தால், அந்த யோகம் சிறுகச் சிறுக முதிர்ந்துகொண்டே வரும், யோகம் முதிர்ந்து கொண்டே வரவர அவர்களுக்கிருந்த ஆசைகளெல்லாம் நாளாவட்டத்தில் குறைந்துகொண்டே வரும். யோகாப்பியாச சாதனையினால் ஆசைகளெல்லாம் நாளாவட்டத்தில் சிறுகச்சிறுக குறைந்துகொண்டேவந்து கடைசியில் சூர்யனைக்கண்ட பனிபோல் அவர்களுக்கிருந்த எல்லா ஆசைகளும் அவர்களைவிட்டு நீங்கிவிடும்.

இதுகளெல்லாம் இந்நூலாசிரியராகிய ஸ்ரீ யோகீஸ்வரருக்கு எப்படித் தெரியுமென்றால், உலகத்திலுள்ள ஸ்திரீபுருஷர்கள் எல்லோரும் எல்லா ஆசைகளுடன் எப்படி இருக்கின்றார்களோ அதுபோல், இந்நூலாசிரியராகிய ஸ்ரீ யோகீஸ்வரர் தம் மனைவியாருடன் கூடி யிருக்கும்பொழுது அனேக ஆசைகளுடன் ஆதியில் இருந்தவரேயாம். இவ்வாறாக இருக்கும்பொழுது இவர் யோகாப்பியாசம் செய்து வரவர யென்ன ஆயிற்றென்றால், பொய் சொல்லுவது இன்னும் அனேக கெட்ட குணங்கள் இவரிடம் இருந்தன. இவைகளெல்லாம் யோகாப்பியாச சாதனையினால் சிறுகச்சிறுக மாறிக்கொண்டே வந்து கடைசியில் அந்தக் கெட்டகுணங்களெல்லாம் இவரை விட்டு யோகபலத்தினால் நீங்கிப் பிறகு, பொய் சொல்லாமலிருப்பது பூததயை பச்சாத்தாபம் ஜீவகாருண்யம் விஸ்வாசம் முதலாகிய மிகவும்நல்லகுணங்கள் ஏற்பட்டன. இந்த நல்ல குணங்களெல்லாம் யோகாப்பியாசத்தினால் உண்டாயிற்றென்று, ஸ்ரீ யோகீஸ்வரருக்கு அவர் அனுபவத்தால் நன்றாய்த் தெரியவருகிறது. இவர் யோகம் செய்யாமலிருந்திருந்தால் இவரிடமிருந்த கெட்டகுணங்கள் எதுவும் இவரைவிட்டு நீங்காமல் இவரிடம் இருந்து

கொண்டே யிருக்கும். அதன்பிறகு என்ன ஆயிற்றென்றால்,

ஆதியில் இந்நூலாசிரியராகிய ஸ்ரீயோகீஸ்வரர் வியாபாரம் செய்து தனவந்தராயிருந்தார். இவ்வாறிருக்கும்பொழுது, யோகாப்பியாசம் செய்யாதமுன் இவர் மனைவியார்மேல் விசேஷ அன்பாயும், ஆசையாயும் இருந்தார். அவ்வம்மையார்மேல் இருந்த அன்பும் ஆசையும், பொருள் மேலிருந்த ஆசையும் நாளாவட்டத்தில் சிறுகச்சிறுக குறைந்துகொண்டே வந்தன. இதற்குக் காரணம் யோகமேயாம். இவர் யோகம் செய்யாமலிருந்தால் மனைவியார் மேல் இருந்த ஆசையும், பொருள்மேல் இருந்த ஆசையும் இன்னும் இவரிடம் இருந்துகொண்டேயிருக்கும்.

இந்நூலை வாசிக்கப்பட்டவர்களுக்கு யோகாப்பியாசம் செய்யவேண்டுமென்கிற எண்ணம் இருக்கும் பக்ஷத்தில் அதை அடியோடே மறந்துவிடுங்கள். அப்படி மிஞ்சி செய்வீர்களாகில் எனதன்பர்களே! குடும்பவிஷயத்தில் விசேஷ விரக்தியுண்டாய்வெளிச்சென்றுவிடுவீர்கள். அப்பொழுது அக்குடும்பத்தைக் காப்பாற்ற திக்கில்லாமல் போய்விடும். ஆதலால், யோகாப்பியாசம் செய்ய பிரயத்தினப் படாதீர்கள். இதன்றியும் இந்த யோகபலத்தினால், இவர் வீட்டை விட்டுப் போய்விடுவார். அதன்பிறகு இவர் பத்னியார் இவர் இருக்குமிடத்தை விசாரித்துத் தெரிந்துக்கொண்டு அங்குசென்று நல்ல பேச்சுகளைச் சொல்லி அழைத்து வந்து ஒரு ஏகாந்த ஸ்தளத்தில் வைத்து இவருடன் கூடி அனுபவித்த சுகங்களெல்லாம் போய்விட்டதே யென்று அதே வியசனமாய் சிலகாலமிருந்துப் பிறகு 'சிவபதவி' அடைந்தார். இவர் விஷயமும் இவர் பத்னியார் விஷயமும் இவருடைய "ஜன்மசரித்திர"த்தை வாசித்தால் நன்றாய்த் தெரியவரும். அவ்வம்மையார் சிவபதவி யடைந்தபின்

உடனே இவர் எல்லாவற்றையும் விட்டு கௌபீனத்துடன் புறப்பட்டு ☛ இதோ எதிரில் ஸ்ரீ யோகீஸ்வரர் பத்னி யாரிருக்கும் படத்திற்கு இடதுகைப்புறமாய் இருக்கும் ஆஸ்ரமத்தில் முதல் போய்ச்சேர்ந்தார்.

இந்த ஆஸ்ரமம் வந்து சேர்ந்து யோகாப்பியாசம் செய்து யோகசித்திபெற்று அதன்பிறகு தம் அனுபவங்களை யெல்லாம் எழுதி அச்சிட்டு அந்நூலுக்கு "ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" என்று பெயர்வைத்து வெளிப்படுத்தினார். அதன்பிறகு அந்த ஆஸ்ரமத்தை விட்டு கடப்பை ஜில்லா கடிகோட்டை யென்னும் நான்கு மலை மத்தியில் போய்ச்சேர்ந்து யோகத்திலிருந்தார்கள். அதன்பிறகு அதைவிட்டு தென் இந்தியா செங்கல்பட்டு ஜில்லா பொன்னேரி தாலுக்கா "பஞ்சேஷ்ட்டி" கிராமத்தில் பெரிய மடம் கட்டி அங்கு சிலகாலம் யோகத்திலிருந்தார். இப்பொழுது அதையும்விட்டு கெம்பாபுர அக்ரஹாரம், பெங்களூர் சிடி, தென் இந்தியா. இவ்விடம் ஆஸ்ரமம்கட்டி யோகத்தில் இருக்கின்றார். இவர் செய்துவரும் யோகத்தினால் என்ன சித்தியாயிற்றோ அதற்குத் திருஷ்ட்டாந்தம் 'சிவவாக்கியர்' சொன்ன பாடலை இங்கு சொல்லுகிறோம்.

"உருத்தரித்த நாடியில் ஒடுகின்ற வாயுவை
கருத்தினால் இருத்தியே கபாலமேற்ற வல்லீரேல்
விருத்தருமே பாலராவார் மேனியும் சிவந்திடும்."

உருத்தரித்த நாடியில்=சிசு தரிக்கும் தொப்புளில், ஒடுங்குகின்றவாயுவை=அனேக சுற்றுகளாய்ச் சுற்றி ஒடுங்கி(தங்கி)இருக்கும்மூச்சை, கருத்தினால்இருத்தியே= மிகவும் சூக்ஷ்மபுத்தியினால் கழுத்தையும் முதுகையும் வளைத்து மூக்சைக் கொண்டுபோய்த் தொப்புளில் இருத்தி

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்.



இது, யோகத்தில் உட்காரும்பொழுது இருந்த சரீரம்.



இது, 3-மாதம், 13-நாள் யோகத்திலிருந்து வெளிவரும் பொழுது இருந்த சரீரம்.

ஸ்ரீ யோகீஸ்வரர் பத்னியார்.

பத்னியார் சென்றபிறகு, முதல் முதல் இருந்த ஆஸ்ரமம்.

அதாவது அழுத்திவிடவேண்டும். அழுத்திவிட்டவுடன் அம்மூச்சி மறுபடியும் வெளிவரும். வெளிவந்தவுடன் மறுபடியும் கழுத்தையும் முதுகையும் வளைத்து தொப்புளில் கொண்டுபோய் அழுத்திவிடவேண்டும். இவ்வாறு செய்வதற்கு "ஒட்யாணபந்தன" மென்று சொல்லப்படும். இதுபோல் அனேகமுறை மூச்சைக் கொண்டுபோய்த் தொப்புளில் அழுத்திக்கொண்டேவந்தால் அந்த மூச்சானது என்ன செய்கிறதோ அதை இனி சொல்லப் போகிறோம்.

நமது சரீரத்தில் எழுபத் தீராயிரம் மயிர் துவாரங்கள் இருக்கின்றது. மூச்சைத் தொப்புளில் இருத்தி அழுத்தும் பொழுது அந்த மூச்சி சரீரமெல்லாம் சுற்றித் திரிந்து சரீரத்திலிருக்கும் ஒவ்வொரு மயிர்க்கால் துவாரங்களிலும் மூச்சிசென்று அவருக் கிருக்கும் கிழத்தனத்தை மாற்றி விடும். இப்படிச் செய்வதுமே யல்லாமல் இன்னும் என்ன செய்கிறதென்றால்.

மூச்சைத் தொப்புளிலிருந்து வெளிவராதபடி அடிக்கடி அழுத்திக்கொண்டே யிருந்தால், அந்த மூச்சி பொறுக்க முடியாமல் முக்கலிட்டுக் கூச்சலிடும். எப்படி முக்கலிட்டுக் கூச்சலிடுகிறதோ அதை இனி சொல்லப்போகிறோம். நாய் குட்டிகள் போட்டவுடன் அக்குட்டிகள் கண்களைத் திறவாமல் படுத்துக்கொண்டுமுக்கலிட்டுச் சிறுங்குரலாய்க் கூவும். நாய்க்குட்டிகள் முக்கலிட்டுச் சிறுங்குரலாய் எப்படிக் கூவுகிறதோ அதுபோல், மூச்சைக்கொண்டு போய்த் தொப்புளில் இருத்தி அழுத்தி விடும்பொழுதெல்லாம் அந்த மூச்சானது மேற்சொல்லிய நாய்க்குட்டி முக்கலிட்டுக் கூவுவதுபோல் இந்த மூச்சும் முக்கலிட்டுப் பெருங் கூச்சலிடும். மூச்சி முக்கலிட்டுக் கூவுவது இந்நூலாசிரியராகிய ஸ்ரீ யோகீஸ்வரருக்குப் பிரத்தியக்ஷ அனுபவம்.

ஆதலால், அவர் அனுபவத்தை இங்கு சொல்லுகிறார். யோகாப்பியாசகாலத்தில் மூச்சி முக்கலிட்டுக் கூவும் விஷயம் இதுவரையில் எவர்களுக்கும் தெரியவராது. யோகாப்பியாசம் செய்யும்பொழுது மூச்சி முக்கலிட்டுக் கூவும் விஷயம் இப்பொழுதுதான் இந்நூலாசிரியரால் எல்லோருக்கும் தெரிகிறது. யோகத்தில் சித்திபெற்றவர்களுக்கு மாத்திரம் மூச்சி முக்கலிட்டுக் கூவுமேயொழிய சொல்பமாய் யோகம் செய்யப்பட்டவர்களுக்கு மூச்சி முக்கலிட்டுக் கூவாது.

அசன்பர்த்தி காசனகொட்டு காசய்ய செட்டியாரே? இந்நூலாசிரியராகிய ஸ்ரீ யோகீஸ்வரர் முதல் ஒரு முறை உங்கள் கிராமத்திற்கு வந்திருந்தபோது சிலருக்கு பிராணாயாமம் உபதேசித்தார். மறுபடியும் இரண்டாவது முறை உங்கள் கிராமத்திற்கு வந்து அவர்களை பரீக்ஷிக்கும்பொழுது, ராமசாமி என்பவர் மூச்சை உள்ளுக்கிழுத்து விழுங்கி கும்பித்த பிறகு அதாவது நிறுத்திய பிறகு அவர் இரண்டு மூக்கிலும் ஸ்ரீ யோகீஸ்வரர் பஞ்சை நன்றாய் அழுத்தி கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அவர் எவ்வளவு கணக்கு வரையில் எண்ண வேண்டுமோ அதுவரையில் விரல்களால் எண்ணிக்கொண்டிருந்தார். 20-நிமிஷங்கள் ஆயிற்று; இன்னும் அவர் கணக்கு பூர்த்தியாகவில்லை. எத்தனை நிமிஷங்கள் வரையில் இன்னும் எண்ணிக்கொண்டிருப்பாரோ தெரியவில்லை. அதன்பிறகு ஸ்ரீ யோகீஸ்வரர் அவர் மூக்கிலிருக்கும் பஞ்சையெடுத்து இனி போதும் என்று சொல்லினார். சற்றுநேரம் சென்றபிறகு மூச்சை வெளிவிட்டார்.

இருபது நிமிஷங்கள்வரையில் மூச்சை வெளிவிடாமல் கும்பகத்தில் நிறுத்துவது ரொம்பவும் விசேஷம். அவ்வளவு ஸ்திதிக்கு வந்தாரேயொழிய கழுத்தையும் முதுகை-

யும் வளைத்து மூச்சைக் கொண்டுபோய் தொப்புளில் நன்றாய் அழுத்தாமல்போனார். அதற்குக் காரணம் என்னவென்றால், அவருக்கு குருவாயிருக்கப்பட்ட ஸ்ரீ யோகீஸ்வரர் பிராணாயாமம் உபதேசிக்கும்பொழுது இந்த வித்தையை ராமசாமிக்கு உபதேசிக்கவில்லை. இதை ஏன் உபதேசிக்கவில்லையென்றால், பிராணாயாமம் ஆரம்பத்திலேயே இந்த மேலானபடியை அவருக்குச் சொல்லலாகாது. இது, படிப்படியாய் உயர்த்திக்கொண்டே போகவேண்டிய வித்தை. அதனால் இதை பிராணாயாம பிராரம்பத்திலேயே அவருக்குச் சொல்லவில்லை. இப்பொழுது இவர் மேல்படிக்கு வந்ததனால் கழுத்தையும் முதுகையும் நன்றாய்க் கீழுக்கு வளைத்து மூச்சைக்கொண்டுபோய்த் தொப்புளில் மேற்சொல்லியதுபோல் அடிக்கடி அழுத்திக்கொண்டேவந்தால், அப்பொழுது அந்த மூச்சி முக்கலிட்டுக் கூச்சலிடும். அப்படி முக்கலிட்டுக் கூச்சலிட்டபோதிலும் தான் எவ்வளவு கணக்குவரையில் எண்ண வேண்டுமோ அதுவரையில் மூச்சை வெளிவிடாமல் இருக்கவேண்டும். தன் கணக்கு எண்ணி முடிந்தபிறகு மூச்சை வெளிவிடவேண்டும். இந்த மேல்படியை ராமசாமிக்கு இப்பொழுது உபதேசித்தோம். இவருக்கு ராமயோகி என்று இன்று பட்டம் கொடுத்தோம். இனிமேல் இவர் மேற்சொல்லியதுபோல் கழுத்தையும், முதுகு, இடுப்பையும் வளைத்து செய்யவேண்டும். அப்பொழுது மூச்சியினுடைய வேகமும், பலமும்குறைந்து ராமயோகி சுவாதீனமாய் இரண்டங்குலம் நீளமவ்வளவு மூச்சி மாத்திரமே அவர் மூக்கில் ஏறுவதும், இறங்குவதுமாய் இருப்பதுமேயல்லாமல் அவருக்கு எந்த எண்ணங்களும் உதிக்காமல் நின்றுவிடும். பிராணாயாமத்தின் பலன் கடைசியில் இதுவேயாம்.

பிராணயாமமென்றால் பிராணனென்கிற மூச்சைப் பிடித்து ஆளுவதே பிராணயாமமென்று சொல்லப்படும். மூச்சைப்பிடித்து அடக்கி ஆளுவது என்றால், மூச்சைக் கொண்டுபோய்த் தொப்புளில் இருத்தி அழுத்துவதற்கே, பிடித்து அடக்கி ஆளுவது என்று சொல்லப்படும். விசேஷ கஷ்டப்பட்டு இவ்வாறாக பிராணயாமம் செய்வதற்கே பிரம்மவித்தையென்று சொல்லப்படும். பிரம்ம வித்தை யென்றால், பிரம்மத்தில் போய்க் கலந்துவிடுவதற்கு அப் பியாசம் செய்யும் வித்தைக்கு பிரம்ம வித்தையென்று சொல்லப்படும். அந்த பிரம்ம வித்தையை இச்சிரிய புத்த கத்தில் உபதேசித்திருக்கின்றோம்.

அய்யா! காசய்ப செட்டியாரே!! ஆயிரம் பிராமணர் களுக்கு சந்தர்ப்பணை செய்தால் எவ்வளவு புண்யம் வருமோ அவ்வளவு புண்யம் ஒரு யோகிக்கு ஆஹாரம் கொடுப்பவர்களுக்கு உண்டாகும். இப்பொழுது நீர் ராமயோகிக்கு ஆஹாரம் கொடுத்து வருகுறீர். உமது ஆஹாரம் அவர் வயிற்றில் போய் விழுவதனால், உமக்கு விசேஷ புண்யமுண்டாகும். அப்புண்ய விசேஷத்தினால் நீர் இனி எடுக்கப்போகும் ஜன்மத்தில் பெருத்த மேலான பதவியை அடைவீர் இதற்குச் சந்தேகமே இல்லை.

மூச்சைக் கொண்டுபோய்த் தொப்புளில் இருத்தி அழுத்தும்பொழுது இருக்கும் நோயை இவ்வள வவ்வள வென்று சொல்லமுடியாது. முன்ஜன்ம புண்யம் இருந் தால் மாத்திரம் அந்த நோயைப் பொருத்துக்கொள்வார் களேயொழிய முன்ஜன்ம புண்யம் இல்லாவிட்டால் எவ் வளவேனும் பொருக்கமாட்டார்கள்.

மூச்சைக் கொண்டுபோய் அப்படி அழுத்தவேண்டிய தேன்? அதனால் இந்த கஷ்டங்களையெல்லாம் படவேண் டியதேன்? என்று உங்களுக்கிருக்கலாம், இப்படிச் செய்வதனால் என்னபலன் உண்டாகுமென்றால், "கஷ்டே பலே" என்றால், மிகவும் கஷ்டப்பட்டு யோகாப்பியாசம் செய்து மூச்சியின் வேகத்தையும் அதன் பலத்தையும் கொழுப்பையும் அடக்கிவிட்டால் அதன்பிறகு அந்த மூச்சி அந்த யோகிக்கு வசமாய்ப் பிறகு அவர் இஷ்டம் போல் அம்மூச்சிநடக்கும். மூச்சி அவருக்கு வசமானபின் என்ன நன்மையை அந்த மூச்சி அவருக்குச் செய்கிறதோ அதை இனி சொல்லப்போகிறோம்.

ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் காலே படுக்கைவிட் டெழுந்தது முதல் மறுபடியும் இரவு படுக்கும் வரையில் கணக்கில்லாத எத்தனையோ எண்ணங்களை எண்ணிக் கொண்டிருப்பார்கள். அந்த எண்ணங்களையெல்லாம் அவர் கள் வாஸ்த்தவமாய் நினைப்பதே இல்லை. இந்த எண்ணங்க ளெல்லாம் எங்கெங்கிருந்தோ தனக்குத்தானாகவே, (ஜலத் தில் நீர்க்குமிழிகள் அடிக்கடி ஜலத்திலிருந்துப் பிறந்து பிறந்து உடனுக்குடனே ஜலத்தில் எப்படி மறைந்து விடுகிறதோ அதுபோல்) மூச்சியில் இருந்து எண்ணங்கள் அடிக்கடி பிறந்துபிறந்து மேற்சொல்லிய நீர்க்குமிழியைப் போல் உடனுக்குடனே அந்த எண்ணங்களெல்லாம் மறைந்து மறுபடியும், வேறுவேறு எண்ணங்கள் புதிதாய்ப் பிறந்துகொண்டேயிருக்கும். இந்த எண்ணங்களையெல்லாம் நாசப்படுத்தினால் மறுபடியும் அவருக்குப் பிறப்பு இறப் பென்பது இல்லை. இந்த எண்ணங்களையெல்லாம் நாசப் படுத்த யோகம் ஒன்றிற்கே அதிகாரமுண்டு.

மார்க்கண்டேய நாடகம் ரகஸ்யம் இனி சொல்லு கிறோம்.

மார்க்கண்ட நாடக ரகஸ்யம் ஸ்ரீ யோகீஸ்வரர் வெளிப்படுத்துகிறார்கள்.

1. மார்க்கண்டன் என்பது யார்?

2. இவருக்கு சிரஞ்சீவி பட்டமும், பதினாறு வயதும் எவ்வாறு வந்தது?

3. பாசக்கயிறு என்பது எது?

4. லிங்கமென்றால் எது?

5. வார்க்கண்டேயர் லிங்கத்தை ஏன் ஆலிங்கனம் செய்துகொண்டார்?

இக்கேள்விகளுக்குப் பதில்:—

1. மார்க்கண்டன். மார் என்றால் மரணம். கண்டன் என்றால், கண்டறிந்தவன். அதாவது, மரணத்தைக் கண்டறிந்தவன் மார்க்கண்டன்.

2. மார்க்கண்டேயருக்கு சிரஞ்சீவி பட்டமும், பதினாறுவயதும் எதுவோ அதை தெரிவிக்கின்றோம். எல்லோருக்கும் மூச்சி இடதுநாசியில் நடக்கும்பொழுது பதினாறங்குலம் நீளமவ்வளவு மூச்சி வெளிவரும். அந்த பதினாறங்குலம் நீளவவ்வளவு மூச்சை வெளியிடாமல் யோக பலத்தினால் நிறுத்திவிட்டால் அப்பொழுது அந்த பதினாறங்குலம் மூச்சி வெளிவராமல் சரீரத்திலிருக்கும் மூலாதார, சுவாதிஷ்ட்டான, மணிபூரக, அனாஹத, விசுத்தி, ஆஞ்ஞேய, ஸஹஸ்ராரமென்கிற இந்த ஏழு சக்கரங்களிலும் சுற்றிச் சுற்றித் திரிந்துகொண்டிருக்கும். மூச்சி இந்த ஏழு சக்கரங்களிலும் இராப்பகலாய் எக்காலமும் வெளிவராமல் உள்ளவே சுற்றிச் சுற்றித் திரிந்துகொண்டிரு

பதனால் மார்க்கண்டேயருக்கு இனி மரணமேது? அவருக்கு மரணமே இல்லை. இவர் மூச்சை வெளிவிடாததனால் மரணத்தை ஜயித்துவிட்டார். மரணத்தை ஜயித்துவிட்டதனால் இவருக்குச் சிரஞ்சீவிட்டம் வந்தது. மூச்சை வெளிவிட்டால் அது மூக்கில் ஏறிக்கொண்டும், மறுபடியும் கீழ் இறங்கிக்கொண்டுமாய் இருந்து தினம்தினம் மூச்சி செலவழிந்து ஆயுளைக் குறைத்துக்கொண்டேவரும். மேற்சொல்லியசிரஞ்சீவிபட்டம் நாடகத்தில்சொல்லும்சிரஞ்சீவி பட்டம். மார்க்கண்டேயருக்கு வாஸ்த்தவமான சிரஞ்சீவி பட்டம் எதுவோ அதை இனி முன்சொல்வோம். மார்க்கண்டேயருக்குச் சிரஞ்சீவிபட்டம் வந்ததைச் சொன்னோம். பதினா வயது எப்படி வந்ததோ அதை இனி சொல்லப்போகிறோம்.

மார்க்கண்டேயர் இடது நாசியில் நடந்துகொண்டிருந்த பதினாறங்குலம் நீளமவ்வளவு மூச்சை மார்க்கண்டேயர் வெளிவிடாமல் நிறுத்திவிட்டபடியால் இந்த பதினாறங்குலம் நீளமவ்வளவு மூச்சை மார்க்கண்டேயருக்கு பதினாறு வயதாய், யோகத்தில் சித்திபெற்ற யோகிகள் காட்டினார்கள். சித்திபெற்ற யோகிகளுக்குத்தவிற மற்றவர் எவர்களுக்கும் இதன் ரகஸ்யம் தெரியவராது. மார்க்கண்டேயருக்கு சிரஞ்சீவி பட்டமும், பதினாறு வயதும் எப்படி வந்ததோ அதன் ரகஸ்யம் இப்பொழுது உங்களுக்குத் தெரியவந்ததல்லவா?

பாசக்கயிறு என்பது எதுவோ அதைஇனி தெரிவிக்கின்றோம்.

3. பாசக்கயிறு ரகஸ்யம் வெளிப்படுத்தல்.

பாசக்கயிறு. பாசம் என்றால், ஆசை. கயிறு என்றால், மூச்சி. எல்லா ஆசைபாசங்களும் மூச்சியென்னும்

கயிற்றில் அடங்கியிருக்கின்றது. அதனால் இந்த மூச்சிக்குப் பாசக்கயிறு என்று யோகசித்திபெற்ற யோகிகள் பெயர் வைத்தார்கள். இந்த மூச்சைவிட பாசக்கயிறு என்பது வேறில்லை. பாசமென்கிற ஆசை மூச்சியென்னும் கயிற்றில் அடங்கியிருப்பதனால் இந்த மூச்சிக்குப் பாசக்கயிறுஎன்று பெயர் வைத்தார்களென்று மறுபடியும் சொல்லுகிறோம். மூச்சி என்னும் பாசக்கயிற்றில் இருந்து அடிக்கடி உதித்துக்கொண்டிருந்த எண்ணங்களில், மார்க்கண்டேயர் ஆதியில் கட்டுப்பட்டிருந்தார். மரணத்தைக் கண்டறிந்த மார்க்கண்டேயர் மரணத்தின் ரகஸ்யம் கண்டறிந்தபின் அவர் மூக்கில் நடந்துகொண்டிருந்த மூச்சை வெளிவிடாமல் நிறுத்திவிட்டார். மூச்சை வெளிவிடாமல் நிறுத்திவிட்டபடியால் அந்த மூச்சியில் அடங்கியிருக்கும் ஆசாபாசங்கள் அதன்பிறகு அவருக்கு ஏது? ஆசாபாசங்களெல்லாம் அவர் மூச்சியிலேயே அடங்கிவிட்டது. அதனால், அவருக்கு ஆசாபாசங்களென்பது இல்லை. ஆசாபாசங்கள் எப்பொழுது அவருக்கு இல்லையோ அப்பொழுதே அவர் சுத்த பிரம்மமாய் விட்டார். ஆசாபாசங்கள் உள்ளவரையில் பிரம்மமாகமாட்டார்கள்.

ஜனங்களெல்லோரும், ஆசாபாசங்களுக்கு முதல் காரணமாயிருக்கும் மூச்சியென்னும் பாசக்கயிற்றிரில் கட்டுப்பட்டிருக்கின்றார்கள். எந்த ஜன்மத்தில் இந்த ஆசாபாசங்களென்னும் பாசக்கயிற்றிலிருந்து விடுபடுகிறார்களோ அந்த ஜன்மத்தில் இவர்களும் மரணத்தைக்கண்டறிந்த மார்க்கண்டேயரைப்போல் சுத்த பிரம்மமாய்விடுவார்கள். பாசக்கயிற்றின் ரகஸ்யம் இப்பொழுது உங்களுக்கு நன்றாய்த் தெரியவந்ததல்லவா? லிங்கம் எதுவோ அதை இனி சொல்லப்போகிறோம்.

4. லிங்க ரகஸ்யம் வெளிப்படுத்துகிறார்.

எங்கும் பரிபூரணமாய் நிறைந்து வெட்டவெளியாயிருக்கும் பிரம்மமென்கிற ஈஸ்வரனை ஜனங்களுக்கு ஒரு லிங்க உருவமாய்க் காட்டினார்கள். ஏனென்றால், வெட்டவெளியாயிருக்கும் பிரம்மத்தை ஜனங்கள் காணமுடியாது. அதனால் இந்த லிங்கத்தை பிரம்மமாய் பாவிக்கும்படி ஜனங்களுக்குக் காட்டினார்கள்.

5. மார்க்கண்டேயர் லிங்கத்தை ஆலிங்கனம்செய்த ரகஸ்யத்தை ஸ்ரீ யோகீஸ்வரர் வெளியிடுகிறார்.

மார்க்கண்டேயருக்கு பதினாறுவயது முடிந்தது. அவரைக் கொண்டுபோவதற்காக எமன் கிடாவின்மேல் யேறிவந்தான். அப்பொழுது மார்க்கண்டேயர் எமனைப் பார்த்து லிங்கத்தைப்போய் ஆலிங்கனம் செய்துகொண்டார். லிங்கத்தை மார்க்கண்டேயர் ஆலிங்கனம் செய்துகொண்டபிறகு எமன் பாசக்கயிறைவீசி இரண்டுகயிறையும் பிடித்துஇழுத்தான். அப்பொழுது ஈஸ்வரன் லிங்கத்திலிருந்து புறப்பட்டுவந்து எமனை காலால் உதைத்ததாய் நாடகத்தில் காட்டுகிறார்கள். இதை எல்லோரும் பார்த்திருக்கலாம். இதன் ரகஸ்யம் எதுவோ அதை இனி சொல்லப்போகிறோம்.

மரணத்தை கண்டறிந்த மார்க்கண்டேயர் இடது நாசியில் நடக்கும் பதினாரங்குலம் நீளமவ்வளவு மூச்சை மார்க்கண்டேயருக்கு பதினாறுவயதாய் காட்டினார்கள் என்று இதுவரையில் முன்சொன்னோம்.

ஒவ்வொருவருக்கும் இருக்கும் ஆசாபாசங்கள் மூச்சியில் அடங்கி இருக்கிறது. இந்தமூச்சி எப்படி இருக்கிறதென்றால், கயிறைப்போல் நீளமாய் இருக்கிறது. ஆசாபாசங்களெல்லாம் இந்த மூச்சியென்னும் கயிற்றில் அடங்கி

இருப்பதனல் இந்த மூச்சிக்குப் பாசக்கயிறு என்று பெயர் வைத்தார்கள். மூச்சைவிட வேரே பாசக்கயிறு என்பது கிடையாது. ஜனங்கள் பாசக்கயிறு என்று சொல்லுவார் களேயொழிய ஆசாபாசங்கள் அடங்கியிருக்கும் மூச்சி தான் பாசக்கயிறு என்று அவர்களுக்குத் தெரியவராது. பாசக்கயிறு விஷயம் இபபொழுது எல்லோருக்கும் தெரிங் திருக்கலாம்.

மரணத்தைக் கண்டறிந்த மார்க்கண்டேயர் மூக்கில் நடக்கும் மூச்சியென்னும் பாசக்கயிற்றில் அடங்கியிருந்த ஆசாபாசங்களை யெல்லாம் மார்க்கண்டேயர் அந்த மூச்சி யிலேயே அடக்கிப் பிறகு தான் சுத்தபிரம்மமாய் தன் நிஜ சொரூபமாகிய பிரம்மத்தில் போய்கலந்துவிட்டார். மார்க் கண்டேயர் ஆத்மா பிரம்மத்தில் போய்க் கலந்துவிட்டதை நாடகத்தில் எப்படி காட்டினர்களென்ருல், மார்க்கண்டே யர் லிங்கத்தைப்போய் ஆலிங்கனம் செய்துகொண்டதாய் காட்டினர்கள். அதாவது, லிங்கமே ப்ரமம். மார்க்கண் டேயரே ஜீவாத்மா. மார்க்கண்டேயர் ஜீவாத்மா பிரம் மத்தில்போய் ஐக்யமானதை மார்க்கண்டேயர் லிங்கத் தைப்போய் ஆலிங்கனம் செய்துகொண்டதாய் நாடகத் தில் காட்டினர்கள்.

க்ருதயுகம்—த்ரேதாயுகம்—த்வாபரயுகம்—கலியுகம் என்று சொல்லும் இப்படிப்பட்ட யுகங்கள் எத்தனை யுகங் கள் ஜீவித்திருந்தபோதிலும் ஏதோ ஓர் காலத்தில் தான் தன் நிஜஸ்வரூபமாகிய ப்ரமத்தில்போய்க் கலந்துவிட வேண்டியது நிஸ்ச்சயம். ஆதலால், மூச்சியென்னும் பாசக் கயிற்றில் அடங்கியிருந்த ஆசாபாசங்களை யெல்லாம் ஜயித்து சுத்தப்ரம்மமாயிருக்கும் மார்க்கண்டேயர் கடைசி யில் என்ன செய்தாரென்ருல், தன் இருதய கமலத்தில்

இருக்கும் ஆத்மா என்னும் சிறிய கடவுளை ப்ரமமமாய் இருக்கும் பெரிய கடவுளில் கொண்டுபோய் சேர்த்துவிட் டார். மார்க்கண்டேயர்ஆத்மா,பிரம்மத்தில் போய்சேர்ந்த பிறகு மறுபடியும் அவருக்கு ஜனன மரணமென்கிற பிறப்பு இறப்பு இல்லை. மார்க்கண்டேயருக்கு பிறப்பு இறப்பு என்பது எப்பொழுது இல்லையோ அதுவே மார்க்கண் டேயருக்கு வாஸ்த்தவமான சிரஞ்சீவிபட்டமே யொழிய இதுவரையில் முன் சொல்லிய சிரஞ்சிவிபட்டம் வாஸ்த் தவமான சிரஞ்சிவி பட்டமல்ல. மார்க்கண்டேயர் விசேஷ பக்தியுடன் பூஜித்து லிங்கத்தை ஆலிங்கனம் செய்து கொண்டதனலேயே சிரஞ்சிவி பட்டமும், பதினறுவயதும் வரமாட்டா.

மானவ ஜனங்களுக்கு ஈஸ்வர பக்தியென்பது சிறு தேனும் இல்லை. ஆதலால், எல்லோருக்கும் ஈஸ்வரபக்தி உண்டாவதற்காக இதுவரையில் மேற்சொல்லிய ரகஸ்யங் களை யெல்லாம் ஒரு நாடகமாய்க்கட்டி அந்நாடகத்திற்கு, மார்க்கண்டேயர் நாடகம் என்று பெயர்வைத்து ஆட்ட மாடி ஜனங்களுக்குக் காட்டுகின்ருர்கள். அவ்வாறு காட்டி யும் ஜனங்களுக்கு ஈஸ்வர பக்தி யென்பது சிறிதேனும் உண்டாகவில்லை. மார்க்கண்டேயர் நாடக ரகஸ்யம் இப் பொழுது உங்களுக்கு நன்ருய்த் தெரியவந்ததல்லவா? ஸ்திரீ புருஷர்கள் தினந்தோறும் எண்ணும் எண்ணங்களை இனி சொல்லப்போகிருேம்.

எண்ணங்கள் எதிலிருந்து உதிக்கின்றன.

தினந்தோறும் ஸ்திரீ புருஷர்கள் எண்ணும் எண்ணங்களையெல்லாம் சொல்லமுடியாது. அதனால் அந்த எண்ணங்களுக்கு ‘மனது’ என்று ஒரு பெயரை வைத்தார்கள். இந்த எண்ணங்களே,மனதாகவும் மனதே எண்ணங்களாகவும் இருக்கின்றன. எண்ணங்களைவிட மனது வேறானதல்ல.

இந்த எண்ணங்களெல்லாம் எதிலிருந்து உதிக்கிறதென்றால், மூச்சியிலிருந்து உதிக்கின்றன. அதனால், எண்ணங்களுக்கெல்லாம் மூச்சி தாயாய் இருக்கின்றது. எண்ணங்களுக்கெல்லாம் தாயாய் இருக்கும் மூச்சியின் வேகத்தையும், பலத்தையும், அதன் கொழுப்பையும் யோகியானவர் கொன்றுவிட்டபடியால் அப்பொழுது அவர் மூச்சியிலிருந்து அடிக்கடி உதித்துக்கொண்டிருந்த எண்ணங்களெல்லாம் தலைகாட்டாமல் மறைந்துவிடும். எப்பொழுது எண்ணங்கள் தலைகாட்டாமல் மறைந்துவிடுகிறதோ அப்பொழுது அங்கு ஒன்றுமில்லாத வெட்டவெளியே இருக்கும். அதனால், இந்த யோகியானவர் வெட்டவெளியாய் தான் தானாய் நின்றுவிட்டார்.

எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் பிரம்மமென்கிற ஈஸ்வரனும் வெட்டவெளியாயிருக்கின்றார். மேற்சொல்லிய யோகியானவர் யோகாப்பியாசம் செய்து எண்ணங்களையெல்லாம் தலையெடுக்கவிடாமல் நாசப்படுத்தி மேற்சொல்லிய ஈஸ்வரனைப்போல் தானும் வெட்ட வெளியாய் தான் தானாய் நின்றுவிட்டபடியால் இந்த யோகியானவர் மேற்சொல்லிய ஈஸ்வரனுக்குச் சமானமாய் விட்டார். யோகியும்-ஈஸ்வரனும் ஸமமாய் விட்டபடியால் யோகீஸ்வரர் என்று பெயருண்டாயிற்று.

ஒரு மேகத்தில் என்றால், மப்பில் இன்னொரு மப்பு வந்து சேர்ந்து இரண்டு மப்புகளும் கலந்து ஒரே மப்பு ஆவதுபோல், மிகவும் பரிசுத்தமாயிருக்கும் யோகியினுடைய ஆத்மாவும், பரிசுத்தமாயிருக்கும் பிரம்மமென்கிற ஈஸ்வரன் இவர்கள் இருவரும் மேற்சொல்லிய மப்பைப்போல் கலந்து ஒன்றாய்விடுவார்கள். யோகியின் ஆத்மாவும், பிரம்மமென்கிற ஈஸ்வரனும் ஒன்றாய்க் கலந்தபின் மறுபடியும் அந்த யோகிக்கு ஜனன மரணமென்கிற பிறப்பு இறப்பு அவருக்கு இல்லை. பிறப்பு இறப்பு இல்லாமல் போவதே மோக்ஷமென்று சொல்லப்படும்.

யோகாப்பியாசத்தினால் எண்ணங்களையெல்லாம் தலையெடுக்கவிடாமல் நாசப்படுத்தினதால் இப்படிப்பட்ட பெரும் பதவி இவருக்குக் கிடைத்தது. இதனால்தான் யோகமே சிரேஷ்ட்டமானதென்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில் சொல்லியிருக்கின்றார்.

மூச்சைப்பிடித்து அதை கஷ்டப்படுத்துவதனால் என்ன பிரயோஜனம். இதனால் மோக்ஷத்தை அடைந்துவிடுவார்களா? சிவபூஜை, விஷ்ணு பூஜைகள் இருக்கின்றன. இந்த பூஜைகளைச்செய்து சுலபமாய் மோக்ஷத்தை அடையலாமென்று சிலர் சொல்லுவார்கள்.

ஐயா! மேற்சொன்னவர்களுக்கு யோகத்தின் மகிமை ஒன்றும் தெரியாது. யோகசாதனையில் அவர்கள் பிரவேசித்தவர்களும் அல்ல. அதனால் மூச்சைப்பிடித்து அதைக் கஷ்ட்டப்படுத்துவதேன்? பூஜைகளால் மோக்ஷத்தை அடையலாமென்று வாய் சுளுவாய் மோக்ஷத்தை சொல்லிவிடுகிறார்கள்.

மோக்ஷமென்னும் வீட்டை அடைய எந்த எண்ணங்களும் இல்லாமல் வெட்டவெளியாய் இருக்கவேண்டும். எண்ணங்களினாலல்லவோ பூஜைகளைச் செய்யவேண்டும்.

எண்ணங்கள் இல்லாவிட்டால் பூஜைகளை எவ்வாறு செய்ய முடியும். இந்தபூஜைகள், ஒவ்வொரு ஜன்மத்திலும் செய்து அது முதிர்ந்து பழமாய்ப் பழுத்தபின் அதற்கு மேல்படியாகிய மந்திர ஜபத்தில் கொண்டுபோய்விடும். இந்த மந்திர ஜபமும் செய்து அதுவும் முதிர்ந்து பழமாய்ப் பழுத்தபின் அதற்கு மேல்படியாகிய யோகத்தில்கொண்டு போய்விடும். மிகவும் கீழ்ப்படியாகிய விக்கிரகங்களையும், படங்களையும் பூஜை செய்பவர்களுக்கு யோகமகிமை அவர்களுக்குத் தெரியவராது. மிகவும் கீழ்ப்படியாகிய விக்கிரக பூஜைகளில் இருக்கப்பட்டவர்களுக்கு யோகம் மிகவும் வெறுப்பாயிருக்கும். அந்த வெறுப்பு எப்படிப்பட்டதென்றால்,

"கன்னிகையொருத்தி சிற்றின்பம் வேண்டுவளோ?
வேண்டாள் கைக்கொள்வள் பக்குவத்தில்"

கீழ்ப்படியாகிய விக்கிரக பூஜையில் இருக்கப்பட்டவர்களுக்கு யோகப்படியைச் சொன்னால் மேற்சொல்லிய கன்னிகையைப்போல் வெறுப்பாயிருப்பார்கள். இந்த விக்கிரக பூஜைகள் செய்து இது முதிர்ந்து பழமாய்ப் பழுத்தபின் அதற்கு மேல்படியாகிய மந்திர ஜபங்களை ஜபித்து அதுவும் முதிர்ந்து பழமாய்ப் பழுத்தபின் அதற்குமேல் யோகப் படிக்குப்போக அவர்களுக்கு இன்னிசையை உண்டாக்குமே யொழிய இப்பொழுது மிகவும் கீழ்ப்படியாகிய விக்கிரக பூஜையில் இருக்கப்பட்டவர்களுக்கு யோக விஷயம் மிகவும் வெறுப்பாயிருக்குமென்று மறுபடியும் சொல்லுகிறோம். இந்த யோகமும் முதிர்ந்து பழமாய்ப் பழுத்தபின் இவனே அவன், அவனே இவனாகின்றான் என்றால் ஈஸ்வரனும், யோகியும் சமமாய் விடுவார்கள்.

இதன் ரகஸ்யம் இப்படியிருக்க விஷ்ணு மதஸ்த்தர்களில் சிலர் என்ன சொல்லுவார்களென்றால், நாம் எப்

பொழுதும் அவன் ஆகமாட்டோம். அவன் ஆண்டான்; நான் அடிமை என்று சொல்லுவார்கள். ஆசாபாசங்களென்னும் மாயை எதுவரையில் இருக்கின்றதோ அதுவரையில் அவன் வேறாகவும், இவன் வேறாகவும் தோன்றும். ஆசாபாசங்களென்னும் மாயை எப்பொழுது அவர்களை விட்டு தொலைந்துவிடுகிறதோ அப்பொழுது நானே அவன் அவனே நான் என்பது அவர்களுக்குத் தெரியவருமே யொழிய மேற்சொல்லிய மாயை இருக்கும் வரையில் அவர்களுக்கு இவனே அவன், அவனே இவன், என்பது தெரியவராது.

இதன்றியும் பிரம்மமாகிய ஈஸ்வரன் என்று பிறந்தானோ அன்றே ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் பிறந்தார்கள். பிரம்மமாகிய ஈஸ்வரனுக்கும், ஸ்திரீ புருஷர்களுக்கும் ஒரே வயது. ஸ்திரீ புருஷர்களுக்கு ஆஸா பாஸங்களென்னும் மாயை மூடிக்கொண்டிருப்பதனால் இவர்களுக்கு அனேகமுறை ஜன்மங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. பிரம்மமென்கிற ஈஸ்வரனுக்கோ ஆஸாபாசங்களென்னும் மாயை இல்லாததனால், அவனுக்குப் பிறப்பு இறப்பு என்பது இல்லாமல் எப்பொழுதும் மிகவும் பரிசுத்த பிரம்மமாகவே இருக்கின்றான். அவன் அம்ஸமே ஆத்மா என்னும் பெயருடன் ஸ்திரீ புருஷர்களிலும் எல்லா ஜீவராசிகளிலும் வந்து சேர்ந்திருப்பதனால், அவன் என்றோ, நாமும் அன்றே என்று சொல்லவேண்டியதாய் நேரிட்டது.

சரியை—கிரியை—யோகம்—ஞானம் என்று நான்கு படிகளுண்டு அப்படிகளை இனி சொல்லப்போகிறோம். அதைப் பார்த்தாகிலும் நிஜஸ்திதியை விஷ்ணுமதஸ்த்தர்கள் தெரிந்துகொள்ளட்டும்.

சரியை, கிரியை, யோகம், ஞானப் படிகளைச் சொல்லுகிறார்.

சரியை, கிரியை, யோகம், ஞானமென்று நான்கு படிகளுண்டு. இதில் மூன்றாவது படியாகிய யோகம் செய்து யோகசித்திபெற்றால், எண்ணங்களெல்லாம் தலை காட்டாமல் ஓடிவிடும். எண்ணங்கள் தலைகாட்டாமல் ஓடி விட்டால் அப்பொழுது அங்கு ஒன்றுமில்லாமல் வெட்ட வெளியாய்த் தான்தானாய் நின்றுவிடுவார்கள். அவ்வாறு நின்றுவிடுவதே நான்காம்படியாகிய ஞானமாகும். மூன்றாம் படியாகிய யோகத்தைக் கஷ்டப்பட்டு செய்து யோகசித்திபெற்றால் ஞானியாவார்கள். ஞானியான பிறகு அவர்கள் ஒன்றுமே செய்யவேண்டியதில்லை. யோக சித்திபெற்றால் அதுவே நான்காம்படியாகிய ஞானமாகும். இதற்கு வள்ளலார் பாடல் பிரமாணம்.

சரியையிலே யீசன் †சடவடிவமாய் நின்றான்
கிரிகையிலே மந்திரத்திற் கிட்டி—யருகிருந்தா
னானமிலா யோகத்தி னுள்ளொளியாயே நின்றான்
ஞானமதி தானா யினன்.

சரியை:—விக்கிரகங்கள், படங்கள் இவைகளை பூஜை செய்வது. இது, முதற்படி. இதற்கு சரியையென்று சொல்லப்படும்.

கிரியை:—விக்கிரகங்களையும், படங்களையும் பூஜை செய்து இப்பூஜைகள் முதிர்ந்து பழமாய்ப் பழுத்தப்பின் இதற்கு மேல்படியாகிய மந்திரஜபத்திற்குப் போவார்கள். இவர்கள் மந்திர ஜபத்திற்குப் போனபிறகு, மறுபடியும் கீழ்ப் படியாகிய விக்கிரகங்களையும், படங்களையும் பூஜை

† சடவடிவம், என்றால், மரங்களினால் செய்த விக்ரகங்கள்.

செய்ய அவர்களுக்கு இச்சையிராது. இதற்கு கிரியை என்று சொல்லப்படும். இது, இரண்டாம்படி. இந்த கிரியை முதிர்ந்து பழமாய்ப் பழுத்தபிறகு இதற்கு மேல் படியாகிய யோகத்தில் போக இச்சையை உண்டாக்கும்.

யோகம்:—இந்த யோகத்தில் எண்ணங்களெல்லாம் சூன்யமாய்ச் செய்து வெட்டவெளியாய் தான்தானாய் நின்றுவிடுவார்கள். இது, மூன்றாம்படி இவ்வாறு நின்று விடுவதே ஞானம். ஞானத்தில் ஒன்றுமே செய்வதில்லை. யோகசித்தியேஞானமென்று மறுபடியும்சொல்லுகிறோம். இதன்றியும் நிஷ்டானுபூதி பிரமாணம் சொல்லுகிறோம்.

அலையுமனத்தை யகத்தடக்கு மவனே சரியை கடந்தோனும்
அலையுமனத்தை யகத்தடக்கு மவனே கிரியை முடித்தோனும்
அலையுமனத்தை யகத்தடக்கு மவனே யோக தற்பரனும்
அலையுமனத்தை யகத்தடக்கு மவனே ஞானி யதிசூரன்.

பலவிடங்களிலும் குரங்கைப்போல் ஓடித்திரியும் மனதை ஓடவிடாமல் அடக்கினால் ஞானமடையலா மென்று பெரியோர்களெல்லாம் சொல்லி யிருக்கிறார் கள். ஆதலால், மனதை அடக்க ஒவ்வொரு படியாய் சாதனம் செய்துச்சென்றால், கடைசிபடியாகிய ஞானத்தை அடையலாம்.

கருத்தினால் இருத்தியே என்று சிவவாக்கியர் சொன்ன இச்சிறிய பாட்டில் எவ்வளவு பெரியதாகிய அர்த்தம் அடங்கியிருக்கின்றது பாருங்கள். இந்த பாட்டின் கீழ், கபாலமேற்றவல்லிரேல் = மூச்சைகபாலத்திற்குக்கொண்டு போவாராகில்; விருத்தருமே பாலராவார் = கிழவரா யிருக் கப்பட்டவர் அவர் கிழத்தனம்நீங்கி பாலராய்விடுவார். மேனியும் சிவந்திடும் = சரீரம் சிவப்பு நிறமாய் மாறிவிடும்.

யோகிகள் ஐநூறு ஆயிரவருஷங்கள் ஜீவித்திருக்கும் ரகஸ்யம் வெளிப்படுத்துகிறார்.

யோகிகள் ஐநூறு ஆயிர வருஷங்கள் ஜீவித்திருக்கும் ரகஸ்யம்.

யோகிகள் அனேக வருஷங்கள் யோகாப்பியாசம் செய்து மூச்சியின் வேகத்தையும், அதன் பலத்தையும் நாளாவட்டத்தில் சிறுகச்சிறுக அடக்கிக்கொண்டே வருவார்கள். அப்பொழுதும் அந்த மூச்சியின் வேகமும், பலமும் சிறுகச்சிறுக குறைந்து கொண்டே வந்து கடைசியில் எல்லோருடைய மூக்கிலும் குதிரை ஓட்டம்போல் ஓடிக்கொண்டிருக்கும் மூச்சைப்போல் சித்தியடைந்த யோகிகளின் மூக்கில் ஓடாமல் இரண்டங்குலம் நீளமவ்வளவு மூச்சி மாத்திரம் யோகிகளின் மூக்கில் ஏறி அங்கு சற்று நேரம் நின்று மூக்கில் ஏறிய அந்த இரண்டங்குலம் நீளமவ்வளவு மூச்சியே மறுபடியும் மெதுவாய்க் கீழ் இறங்கி கீழும் சற்றுநேரம்நின்று மறுபடியும் அந்ச இரண்டங்குலம் நீளமவ்வளவு மூச்சியே மெதுவாய் மேல் ஏறி மறுபடியும் அங்கு சற்றுநின்று இதுபோல் அந்த இரண்டங்குலம் நீளமவ்வளவு மூச்சியே யோகத்தில் சித்திபெற்ற யோகிகளின் மூக்கில் மெதுவாய் மேல்ஏறிக்கொண்டும் மறுபடியும் மெதுவாய் கீழ் இறங்கிக்கொண்டும் அங்கங்கு சற்று சற்று நேரம் நின்று இதுபோல் தினந்தோறும் யோகசித்தி பெற்ற யோகிகளுக்கு நடக்கும் மூச்சிகளெல்லாம் மிகவும் மெதுவாய் நடந்துகொண்டிருக்கும். சித்திபெற்ற யோகிகளின் மூக்கில் நடக்கும் ஒவ்வொரு மூச்சும் மெதுவாய் ஏறுவதனாலும் அங்கங்கு சற்றுசற்று நிற்பதனாலும் அந்த யோகிக்கு ஆயுள் விருத்தியாகிறது. இதன்றியும்,

யோகிகள் மூக்கில் மூச்சி மேலுக்கேறி சற்றுநேரம் நின்று மறுபடியும் அம்மூச்சி கீழ் இறங்கும்பொழுது

அதை இறங்கவிடாமல் யோகியும் சற்றுநேரம் நிறுத்திப் பிறகு அம்மூச்சை வெளிவிடுவார். விட்டபின் அம்மூச்சி மெதுவாய்க் கீழ்இறங்கி கீழும் சற்றுநேரம் நின்று மறுபடியும் அம்மூச்சி உள்ளே ஏறும்பொழுது அதை ஏறவிடாமல் தாமும் அங்கு சற்றுநேரம் நிறுத்துவார். மூச்சி தானாகவே அங்கங்கு நிற்பதுடன்கூட யோகியும் அந்த மூச்சை அங்கங்கு சற்றுநேரம் நிறுத்துவதனால் இதிலும் அவருக்கு ஆயுள் விருத்தியாகிறது. இதன்றியும்,

ஸ்திரீ புருஷர்கள் எல்லோருக்கும் மூச்சி வலது நாசியில் நடக்கும்பொழுது எட்டங்குலம் நீளமவ்வளவு மூச்சி வெளிவரும். யோகசித்தி பெற்ற யோகிகளின் வலது நாசியில் நடக்கும் மூச்சி எட்டங்குலம் நீளம் வெளிவராமல் இரண்டங்குலம் நீளமவ்வளவு மூச்சிமாத்திரமே வெளிவரும். வலது நாசியில் வரும் மூச்சியில் ஒவ்வொரு மூச்சியிலும் ஆறங்குலம் நீளமவ்வளவு மூச்சி கூடிவருவதனால் இதிலும் அவருக்கு ஆயுள் விருத்தியாகிறது. இதன்றியும்,

எல்லோருக்கும் இடது நாசியில் பதினாரங்குலம் நீளமவ்வளவு மூச்சி வெளிவரும். அதுபோல் யோகசித்தி பெற்ற யோகியின் இடது நாசியில் பதினாறங்குலம் நீளம் மூச்சி வெளிவராமல் யோக பலத்தினால் இரண்டங்குலம் நீளமவ்வளவு மூச்சிமாத்திரம் வெளிவரும். இடது நாசியில் வரும் ஒவ்வொரு மூச்சியிலும் பதினாலங்குலம் நீளமவ்வளவு மூச்சி கூடிவருவதனால் இதிலும் அவருக்கு ஆயுள் விருத்தியாகிறது.

யோகி பேசினாலும், நடந்தாலும் அவருக்கு ஆயுள் குறைந்துவிடும். அதனால் அவர் யார் கண்களுக்கும் அகப்படாமல் ஒரு ஏகாந்த இடத்தில் இருந்து யோகாப்பியாசம் செய்து முடிந்தபின் எப்பொழுதும் மூச்சையே கவ

னித்துக்கொண்டிருப்பார். அப்பொழுது அவருக்கு எந்த எண்ணங்களும் உதிக்கவே மாட்டா. மனம் ஒருவேலை செய்யும்பொழுது இன்னொரு வேலையில் போகாது.

இதுவரையில் சொல்லியதுபோல் யோகி மூச்சை சேகரித்து (சேர்த்து) வைத்துக்கொண்டு வருவதனாலும், ஒவ்வொரு முறையும் யோகாப்பியாசம் செய்யும்பொழுதெல்லாம் அதிகநேரமூச்சி கும்பகத்தில் இருப்பதனாலும் அந்த யோகிக்கு இதில் ஆயுள் அதிகமாய் வளர்ந்து, ஐநூறு ஆயிர வருஷங்கள் ஜீவித்திருப்பார். நம்முடைய ஆயுள் பிரமாணம் இந்த மூச்சே யொழிய சூர்ய சந்திரர்கள் நடக்கும் நாட்களல்ல. இத்தனை வருஷங்கள் ஜீவிப்பதனால் என்ன பிரயோஜன மென்று நீங்கள் நினைக்கலாம். அந்த பிரயோஜனம் அந்த யோகிக்குத் தெரியவருமே யொழிய மற்றவர்களுக்குத் தெரியவராது.

யோகி யோகம் செய்து சும்மாய் உட்கார்ந்திருக்கும்பொழுது அவருக்கு எண்ணங்கள் எதுவும் உதிக்காமலிருக்கும். எந்த எண்ணங்களும் உதிக்காமலிருப்பதற்கே 'நிஷ்ட்டை' யென்று சொல்லப்படும். எதையும் நினையாமல் சும்மாய் உட்கார்ந்திருந்தபோதிலும் சும்மா யிருக்கிறோம் என்கிற நினைப்புமாத்திரம் அங்கிருக்கிறது. நினைப்பு அங்கிருக்கிற தென்று எப்படித்தெரியு மென்றால், யோகி யோகாப்பியாசம் செய்து சும்மாய் உட்கார்ந்திருக்கும்பொழுது யோகாப்பியாசம் செய்த உஷ்ணத்தினால் அவர் சிரசிலிருக்கும் அமுர்தம் கரைந்து சிரசு பின்பக்கம் மெதுவாய் இறங்கி தீனிப்பைக்குள்போகும். அப்பொழுது சிரசிலிருந்து அமுர்தம் இறங்குவது யோகிக்கு நன்றாய்த் தெரியவரும். இந்நூலாசிரியராகிய ஸ்ரீ யோகீஸ்வரர் யோகம் செய்து சும்மாய் உட்கார்ந்திருக்கும்பொழுது யோகாக்னி

ஈஸ்வரன் லிங்கத்திற்குள் இருக்கும்பொழுது, தாராபாத்திரத்திலுள்ள குளிர்ந்த ஜலத்தால் அவர் உஷ்ணம் சாந்தியாகிறது. அந்த ஈஸ்வரன் தேவதா சரீரமெடுத்து சதுர் புஜங்களுடன் வெளிவரும்பொழுது அவருக்கு யோகாக்னி விசேஷமாய் இருக்கும். அப்பொழுது தமது யோகாக்னியை குளிர்ச்சி செய்து கொள்வதற்காக "கங்கை"யை தமது மனதில் நினைப்பார். நினைத்தவுடன் கங்கை வந்து ஈஸ்வரர் எதிரில் நிற்பாள். நின்றவுடன் அவளையெடுத்துத் தமது சிரசின்மேல் வைத்து கங்கை சாய்ந்துவிழாமல் இருக்கும்படி தமது சடையால் சுற்றிக் கட்டி சடையை சொரிகிவிடுவார். கங்கை சிரசில்போய் அமர்ந்தவுடன் ஈஸ்வரரது யோகாக்னி உடனே குளிர்ந்துவிடும். ஈஸ்வரர் தமது யோகாக்னியை குளிர்ச்சி செய்து கொள்வதற்காகவே கங்கையைத் தமது சிரசில் வைத்துக் கட்டிவிட்டார். இந்த ரகஸ்யம் யோகிகளுக்குத் தவிர மானவ ஜனங்கள் ஒருவருக்கும் தெரியவராது. அதனால் இந்த ரகஸ்யத்தை உங்களுக்கு வெளியிட்டுச் சொன்னோம்.

சூட்டினுல் அவர் சிரசிலிருக்கும் அமுர்தம் கரைந்து அப்போதுக் கப்போது சொட்டு சொட்டென்று விழுந்து கொண்டேயிருக்கும்.

ஈஸ்வரனும் மஹா யோகி. அவருக்கு உஷ்ணம் அதிகமாய் இருப்பதனுல் லிங்கத்தின் சிரசின்மேல் தாராபாத்திரம் கட்டி அது நிறைய ஜலம்விட்டு அதிலிருக்கும் ரந்திரம் வழியாய் இராப்பகலாய் ஜலம் லிங்கத்தின் சிரசின்மேல் விழுந்துக்கொண்டிருக்கும்படி அர்ச்சகர் தாரா பாத்திரத்தில் ஜலம் குறையாமல் இருக்கும்படி எப்பொழுதும் விட்டுக்கொண்டே யிருப்பார். குளிர்ந்த ஜலம் குணம் என்னவென்முல், உஷ்ணத்தைக் கொடுக்கும். "உஷ்ணம் உஷ்ட்ணஞ்ச சீதளம்" என்முல் உஷ்ணத்திற்கு உஷ்ணமே கொடுத்தால் சீதளமுண்டாகும். லிங்கத்திற்குள் இருக்கும் ஈஸ்வரன் அதிக உஷ்ணத்துடன் இருப்பதனுல் இந்த குளிர்ந்த ஜலம் போய் அவர் சிரசில் எப்பொழுதும் விழுந்துக்கொண்டே யிருப்பதனுல் ஈஸ்வரருடைய உஷ்ணம் நீங்கிவிடும். அதனுல், ஈஸ்வரனுக்கு "அபிஷேகப் பிரியஹ" என்முல், ஈஸ்வரனுக்கு அபிஷேக மென்முல் ரொம்பவும் பிரீதி என்பதேயாம்.

இந்த ஈஸ்வரனைப்போல் இந்நூலாசிரியராகிய ஸ்ரீ யோகீஸ்வரர் யோகம்செய்து அதனுல் விசேஷ உஷ்ணமுண்டாய் இவர் சிரசிலிருக்கும் அமுர்தம் கரைந்து அடிக்கடி விழுந்துகொண்டிருக்கும். இந்நூலாசிரியராகிய ஸ்ரீ யோகீஸ்வரர் அதை பார்க்கவேண்டுமென்றெண்ணி அமுர்தம் சிரசிலிருந்து கீழ் இறங்கி தீனிப்பைக்குள் போகும் பொழுது அதைப் போகவிடாமல் தொண்டையினிடம் மூடி வாயில் கொண்டுவந்து வலது உள்ளங்கையில் வைத்துப் பார்த்தார். அது எப்படி யிருந்த தென்முல், மிகவும்

இளம் நுங்கு என்ன நிரமாய் இருக்கிறதோ அந்த நிரமாயும், வழவழப்பாயும் பெரிய புளியங்கொட்டை அவ்வளவு பிரமாணம் இருந்தது. அதை யோகீஸ்வரர் தம் இடது கையால் தொட்டுப் பார்க்கும்பொழுது ஜாங்கைப்போல் நீளமாய் வந்தது. கட்டியா யிருந்ததே யொழிய இளகலாய் இல்லை. அதன்பிறகு, அதை நாக்கினால் யெடுத்து வாயில் வைத்து சப்பிப்பார்த்தார். அது ஒரு மணமாயும் நல்ல ருசியாயும் இருந்தது. நினைப்பு நிஷ்ட்டையில் இருந்ததனா லல்லவோ இதுகளெல்லாம் தெரியவந்தது. சுருதியில் சொல்லி யிருப்பதற்கும், ஸ்ரீ யோகீஸ்வரர் அனுபவத்திற்கும் சரியாயிருக்கிறது.

"சுரு || ஷஷ்ட்டும் தாலுசக்ரம் தத்ர அம்ருத
தாரா ப்ரவாஹ கண்டிகா மூலரந்த்ர"

தாலுசக்ரமென்கிற ஆறாவது சக்ரத்திலிருந்து தொண்டையினிடமிருக்கும் ரந்திரத்தில் அமுர்தம் இறங்கி ப்ரவாஹமாய் வந்துகொண்டிருக்கும். இதன்றியும் அகஸ்த்தியர் பாடல்,

"கள்ளப்பா கள்ளுமங்கே வடியும்பாரு"

என்று சொல்லியிருக்கின்றார். அதாவது, சிரசிலிருக்கும் அமுர்தம் கள்ளைப்போல் வெண்மையாயிருக்கும் அதனால் 'கள்ளப்பா கள்ளு' என்று அகஸ்த்தியர் சொல்லியிருக்கின்றார். அவரும் யோகசித்தி பெற்றவராதலால் அவர் அனுபவத்தை கள் என்று சொல்லினர். இதன்றியும் ஸ்ரீ யோகீஸ்வரர் யோகாப்பியாசம்செய்து சும்மாய் உட்கார்ந்திருக்கும் பொழுது இவர் யோகம் செய்யுங்காலத்தில் கும்பகத்தில் நிறுத்திய மூச்சானது உள்ளே சென்று சரீரத்திற்குள் அந்ததந்த இடங்களில் படுத்துக்கொண்டிருக்கும்நாடிகளையெல்லாம் கும்பகத்தில் நிறுத்திய மூச்சி கிளப்பிவிடும்.

அவைகள் கிளம்பியபிறகு, அந்த நாடிகளெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து வலது காது பிளக்கும்படி பெரிய சப்தத்துடன் தச (பத்து)வித வாத்தியங்கள் இராப்பகலாய் வாசித்துக்கொண்டிருக்கும். இதற்குச் சுருதி பிரமாணம்.

தர்ஜந்யங்குஷ்ட்டாப்யாம் கர்ணரந்த்ரே நிமீல்யநாதம்
ஸ்ருணயாத் ப்ரதமம் சிணிசிணி த்விதீயா சிணீ
த்ருதியா ஸங்கம் சதுர்தோ வேணுநாதஹ பஞ்சமம் [பேரி
வீணாநாதஹ ஷஷ்ட்டும் தாளஹ ஸப்தமம் கண்டா அஷ்ட்டமம்
நவமம் ம்ருதங்கஹ தஸமம் மேகநாதஹ
தஸமம் பரித்யஜ்ய ப்ரணவநாத மப்யஸேத்
தத்ர ஓங்காரே மனோலீநம் பவதி.

என்று சுருதி சொல்லுகிறது, ஆனால் இந்த சுருதிக்கும் அந்த நாதசப்தத்தின் 'சோரம்' இப்படிப்பட்டதென்று சொல்ல சக்தியில்லை. பூலோகத்திலுள்ள வாத்ய சொரங்களை அனுசரித்து ஏதோ ஓர்விதமாய் சொல்லி விடுகிறதேயொழிய இந்த சுருதியாகிலும், அல்லது மற்ற இன்னும் எந்த சுருதியாகிலும், நான்கு வேதமாகிலும் இந்த நாதசப்தத்தைச்சொல்ல சக்தியில்லை. ஆனால் மிகவும் கஷ்ட்டப்பட்டு யோகாப்பியாசம் செய்து யோகசித்தி அடைந்தவர்கள் மாத்திரம் அந்த நாதஸப்தங்களைக் கண்டறிவார்கள். அவர்கள் கண்டறியலாமேயொழிய அவர்களாலும் அந்த நாதசப்தங்களை இதரர்களுக்குச்சொல்லமுடியாது. சிரசில் அமுர்தம் வருவது, நாதசப்தம் வலதுகாதில் கேழ்ப்பது இவ்விரண்டும் இந்நூலாசிரியராகிய ஸ்ரீ யோகீஸ்வரர் அனுபவம். ஆதலால், அவர் அனுபவத்தை இங்கு சொல்லுகிறார்.

"நிஷ்ட்டை"யில் எதையும் நினையாமல் சும்மாய் உட்கார்ந்திருப்பதும், இந்த தசவித நாதஸப்தங்களைக் கேழ்ப்பதும் ஒரு பெரிதான தல்ல. இவ்விரண்டையும் கடந்து

சுத்த சூன்யமாயிருக்கும் வெளியோடே வெளியாய்ப் போய்க் கலக்கவேண்டும். அங்குபோய்க் கலந்தபிறகு, நிஷ்ட்டையில் இருப்பது, நாதசப்தங்களைக் கேழ்ப்பதும் எதுவும் அவர்களுக்குத் தெரியவராது. இது, இந்நூலாசிரியருடைய அனுபவம். அவர் அனுபவத்தை இங்கு சொல்லுகிறார்.

மேற்சொல்லியதுபோல் தான் வெளியோடே வெளியாய்க் கலந்துவிடுவதற்கே "நிர்விகல்ப சமாதி" யென்று சொல்லப்படும். அதாவது, நிர் = என்றால் இல்லை; விகல்ப = மென்றால் ஸங்கல்ப விகல்பங்கள். என்றால், நினைப்பு மறப்புகள் இல்லாமல் இருப்பதே "நிர்விகல்பம்" என்று சொல்லப்படும். சமாதியென்பது இதுவேயாம். இதை விட வேறே சமாதியென்பது இல்லை.

ஆயுளை விருத்தி செய்துகொள்ளவும் மனதை எங்கும் ஓடவிடாமல் நிறுத்தி மோக்ஷமடைய உபதேசம்.

உலகத்தில் அனேக 'குரு'வுகள் இருக்கின்றார்கள். அவர்களெல்லோரும் ஏதோ ஓர் மந்திரத்தை உபதேசித்து அதை ஜபம் செய்யும்படிச்சொல்லி, மனதிற்கு அதிக வேலையைக் கொடுப்பார்கள். மந்திரம் ஜபிக்கும்வேலையை மனதிற்குக் கொடுத்தால் அவர்கள் மோக்ஷமென்னும் தம் சொந்தவீட்டைப்போய் அடையமாட்டார்கள். மனதிற்கு எந்த வேலையும் கொடாமல் சும்மாயிருந்தால் மோக்ஷமென்னும் தம் சொந்தவீட்டைப் போய்ச்சேரலாம். அவ்வாறு எதையும் நினையாமல் சும்மாயிருக்கும் உபதேசம் இனி சொல்லப்போகிறோம். எந்தவேலையும் இல்லாமல் சும்மா

யிருக்கும் சமயங்களிலெல்லாம் அடியில் சொல்வதுபோல் இருந்தால் அவர்கள் பிராண பிரயாண காலத்தில் எந்த எண்ணங்களும் வராமல் பிராணனென்கிற மூச்சை விட்டு விடுவார்கள். அவ்வாறு விடுவாராகில் மறுபடியும்அவர்கள் இன்னொருதாய் கர்ப்பத்தில் போய்ப் பிறக்கமாட்டார்கள். அவ்வாறு பிறக்காமல் போவதே மோக்ஷம். அப்படிப் பட்ட மோக்ஷமென்னும் வீட்டை அடைய உபதேசம் இனி சொல்லப்போகிறோம்.

குரு உபதேசம்

அந்தந்த உத்யோகம், அந்தந்த வியாபாரம், பயிர்த் தொழில் செய்வது, இன்னும் அவர்களுக்கிருக்கும் வேலைகளைச் செய்து, இப்படிப்பட்ட சமயங்களிலும், இதன்றியும், படிப்பது எழுதுவது விளையாடுவது பேசுவது தூங்குவது இக்காலங்களில் தவிர, மற்ற சும்மா இருக்குங் காலங்களிலும், மல-மூத்திரங்களை விடும்பொழுதும், நடக்கும் பொழுதும், வண்டி, கார், பஸ், ரெயிலில் பிரயாணம் செய்யும்பொழுது யாருடனும் பேசாமல் இருந்து என்னசெய்ய வேண்டுமோ அதை இனி சொல்லபோகிறோம். இனி சொல்வதுபோல் நீங்கள் இருப்பீர்களாகில் மனதை ஜயித்தவராகின்றீர்கள். எப்பொழுது மனதை ஜயிக்கின்றீர்களோ அப்பொழுதேஉலகத்தைச் ஜயித்தவராகின்றீர்கள். உலகத்தை ஜயிக்க உபதேசம் இனி சொல்லப்போகிறோம். இந்த உபதேசத்திற்குஸ்னானம் மடி பூஜை எதுவும் வேண்டியதில்லை. எங்கு எப்படி உட்கார்ந்தும், நடந்துமாய் இருக்கின்றார்களோ அவ்விடமெல்லாம் செய்யலாம்.

நடந்தாலும் சரி, உட்கார்ந்தாலும் சரி; எங்கெங்கு எப்படியெப்படி இருக்கின்றீர்களோ அங்கெல்லாம், கீழ்ப்

பார்வையாய் மூக்கு நுனியைப்பார்த்து அந்த மூக்கு நுனியில் மனதை நிறுத்தி மூச்சி உள்ளே போகும்பொழுது அந்த மூச்சை மனதினால் பார்த்துக்கொண்டிருந்து, மூச்சி உள்ளே சென்றதும் உடனே மறுபடியும் கீழ் இறங்கும். மூச்சி கீழ்இறங்கும்பொழுது அதை இறங்கவிடாமல் சற்று நேரம் தடுத்து நிறுத்திப் பிறகு வெளிவிடவேண்டும். அது வெளிவந்ததும் மறுபடியும் உடனே உள்ளே ஏறும். ஏறும்பொழுது அதை ஏறவிடாமல் அவ்விடமும் சற்றுநேரம் தடுத்து நிறுத்திப் பிறகு விடவேண்டும். விட்டவுடன் உள்ளே போகும். போனபிறகு மறுபடியும் அது கீழ் இறங்கும்பொழுது அதை இறங்கவிடாமல் தடுத்து சற்று நேரம் நிறுத்திப் பிறகு விடவேண்டும். இதற்கு எந்த மந்திரமும் இல்லை, மூச்சை மாத்திரம் சும்மாய் கவனிக்கவேண்டும்.

மூச்சி உள்ளேசென்றால் ரெப்பைமூடுமவ்வளவு நேரமும் அங்கு நிற்காமல் உடனே கீழ் இறங்கும். இறங்கியபின் கீழும் ரெப்பை மூடுமவ்வளவு நேரமும் நிற்காமல் மறுபடியும் உடனே உள்ளே ஏறும். கெடியாரம் பெண்டுலம் ஆடும்பொழுது இரண்டு இடங்களிலும் நிற்காமல் ஒரே ஆட்டமாய் எப்படி நடக்கிறதோ அதுபோல் மூச்சியும் எங்கும் நிற்காமல் தாயின் கர்ப்பத்திலிருந்து வெளி வந்ததுமுதல் அவரவர்களின் மரணகாலபர்யந்தம் மூக்கில் மூச்சி எங்கும் நிற்காமல் நடந்துகொண்டே இருக்கும்.

எங்கும் நிற்காமல் நடந்துகொண்டே இருக்கும் மூச்சியில் ஒவ்வொரு மூச்சையும் கீழும் மேலும் அங்கங்கு சில நேரம் நிறுத்திக்கொண்டுவருவதனால் "ஆயுள் விருத்தியாகும்" மனம் எப்பொழுதும் மூச்சைகவனித்துக்கொண்டேயிருப்பதனால் அம்மனம் வெளி வியவகாரங்களில் போக அவகாசமே என்றால், தீர்க்கையே இல்லை மற்ற குருவுகள் உபதேசிக்கு உபதேசங்களில் மனதிற்கு வேலையுண்டு.

இந்த உபதேசத்தில் மனதிற்கு வேலையென்பது இல்லவேயில்லை. ஆதலால், இதையே நீங்கள் 'குரு' வாக்காய் நினைத்து இந்த உபதேசத்தை சாதனை செய்து வருவீர்களாகில் இந்த சாதனை விசேஷமாய் முதிர்ந்து பிறகு உங்கள் பிராண பிரயாணகாலத்தில் மனைவி மக்கள் மேலும், பந்து ஜனங்களின்மேலும் மனம் போகாமல் பிராணனென்கிற மூச்சை விட்டுவிடுவீர்கள். அவ்வாறு விடுவதனால் அடுத்த ஜன்மத்தில் மேலான பதவியை தப்பாமல் ஸத்தியமாய் அடைவீர்கள். இந்த உபதேசம் ஸர்வகால ஸர்வாவஸ்தையிலும் செய்துகொண்டிருந்தால் மாத்திரம் பிராண பிரயாணகாலத்தில் மனம் எவர்களின் மேல் போகாமல் பிராணனை விட்டுவிடுவார்கள். காலை மாலைகளில் மாத்திரம் சற்றுநேரம் செய்தால் அதனால் பிரயோஜனமில்லை. எந்த வேலையும் இல்லாமல் சும்மாயிருக்கும் சமயங்களிலெல்லாம் ஒவ்வொரு மூச்சையும் அங்கங்கு நிறுத்திக்கொண்டும், மூச்சை கவனித்து பார்த்துக்கொண்டும் இருந்தால்தான் பிராணனைவிடும்பொழுது மனம் எவர்களின்மேலும் போகாமல் மூச்சியிலேயே நின்றிருந்து மூச்சியும், மனமும் ஒன்றாய்ச்சேர்ந்து சென்றுவிடும். இவ்வாறு சென்ற பிறகு, இனி எடுக்கப்போகும் ஜன்மத்தில் மேலான பதவியை அடையலாமென்று இன்னொரு முறையும் உங்களுக்குச் சொல்லுகிறோம். இப்படிப்பட்ட அதி ரகஸ்யமான உபதேசங்களை உபதேசிக்கும் குருக்கள் இல்லாததனால் ஸ்திரீபுருஷர்கள் எல்லோரும், காலை தூங்கி எழுந்ததுமுதல், மறுபடியும் இரவு படுக்கும் வரையில் அனேக கணக்கில்லாத உதவியற்ற எண்ணங்களையெல்லாம் எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். மேற்சொல்லிய உபதேசத்தைச் செய்துவந்தால் எந்தஎண்ணங்களும் அவர்களிடம் வருவதற்கு இடமில்லை. இனி எல்லோரும்

ஜாக்ரதைப் படுவதற்காக இந்த உபதேசத்தைச் சொன்னோம்! சொன்னோம்!!

ஆசைகள் ஸ்திரீபுருஷர்களை எவ்வாறு தொடர்ந்து வருகிறதோ அதை இனி சொல்லப்போகிறோம்.

ஆசைகள் ஸ்திரீ புருஷர்களை எவ்வாறு தொடர்ந்துவருகிறதோ அதை வெளியிடுகிறார்.

பிரம்மமாகிய ஈஸ்வரன் ஆதியில் என்றால், முதல் பிரபஞ்சத்தை சிருஷ்ட்டிசெய்யும்பொழுது ஸ்திரீ புருஷர்களை சிருஷ்ட்டிசெய்து அவர்களுக்கு வீடு, தோட்டம், துரவு, பொருளையும் கொடுத்தார். கொடுத்து இன்னும் என்ன செய்தாரென்றால், ஆசை என்பதை ஒன்று உண்டாக்கி அதையும் அவர்களுக்குக் கொடுத்தார். கொடுத்த பிறகு, எல்லோரும் அந்த முதல் ஜன்மத்தில் மனைவி மக்கள் மேலும், பந்துஜனங்களின் மேலும் தனதான்யாதி ஐஸ்வர்யங்களின்மேலும் சில வருஷங்கள் ஈஸ்வரனால் கொடுக்கப்பட்ட ஆசையுடன் இருந்து பிறகு பிராணனை விட்டார்கள். இவர்கள் பிராணனை விடும்பொழுது அந்த ஜன்மத்தில் அவர்களுக்கிருந்த எல்லா ஆசைகளும் அவர்களுடன்கூடவே தொடர்ந்து இன்னொரு ஜன்மத்தில் புதிதாய் வந்த சரீரத்தில் போய்ச் சேர்ந்தன. அங்குபோய்ச் சேர்ந்தபிறகு, மறுபடியும் அந்த ஜன்மத்தில் வேறு மனைவிமக்களும் பந்துஜனங்களும் தனதான்யாதி ஐஸ்வர்யங்களும் புதிதாய் வருகின்றன. அப்பொழுது முன் ஜன்மத்தில் தன்னுடன் கூடவே தொடர்ந்துவந்த ஈஸ்வரனால் கொடுக்கப்பட்ட ஆசைகள், மறுஜன்மத்தில் புதியதாய் வந்த ஆசைகள் இவ்விரண்டு ஆசைகளும் ஒன்றாய்ச் சேர்ந்து அதிகமாயிற்று. இதுபோல் ஒவ்வொரு ஜன்மத்திலும் வரும் ஆசைகள் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து பெரிய மூட்டையாய்வளர்ந்து தன்னுடன்கூடவேதொடர்ந்துவருவதனால் இப்பொழுது இருக்கும் ஜன்மத்தில்வந்த மனைவி மக்கள் மேலும், தனதான்யாதி ஐஸ்வர்யங்களின் மேலும் விசேஷ ஆசையாய் இருக்கின்றார்கள். ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களுக்கும் இருக்கும் ஆசைகளும், நல்ல கெட்ட குணங்களும் ஆதியில் இருந்து அவர்களுடன் கூடவே தொடர்ந்துவருகிறதேயொழிய இப்பொழுது இந்தஜன்மத்தில் புதிதாய்வந்த ஆசைகளல்ல. கலியுகம் பிறந்தது முதல் ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களும் இதுவரையில் எத்தனையோ ஜன்மங்களை எடுத்திருக்கின்றார்கள். இப்பொழுது இந்த ஜன்மத்திலிருக்கும் மனைவிமக்கள் பந்துக்கள் முதலானவர்கள் எல்லோரும் இன்னும் சில வருஷங்களில் இறந்தபின் மறுபடியும் ஒருவர்க்கொருவர் சம்பந்தமில்லாமல் எங்கெந்த தேசத்தில், எங்கெந்த பாஷை பேசும் வீட்டில் போய்ப் பிறப்பார்களோ தெரியவராது. இவர்கள் ஒரு ஜன்மத்தில் சிகப்பு நிரமாயும், ஒரு ஜன்மத்தில் மாநிரமாயும், ஒரு ஜன்மத்தில் கருப்பு நிரமாயும், இதுபோல் ஒவ்வொரு ஜன்மத்திலும் முகம் வேறுவேறு ரூபமாயும் மாறுபட்டு வந்துகொண்டிருப்பார்களேயொழிய ஒரு ஜன்மத்தில் வந்த நிரம்போலவும், ரூபம் போலவும் இன்னொரு ஜன்மத்தில் வரமாட்டார்கள். ஆனால், அவர்கள் சரீரத்திற்குள்ளிருக்கும் ஜீவன்மாத்திரம் எந்த ஜன்மத்திலும் மாறுபடாமல் ஒரேவிதமாய் வந்துகொண்டிருக்கும். இவர்கள் எல்லோரும் இறந்து எங்கெங்கோ போய்ப் பிறந்த பிற்கு மறுபடியும் இவர்களுக்கும், முன்ஜன்மத்தில் இருந்தவர்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இராது.

இந்த மரணம் எப்படி இருக்கிறதென்றால், இரவு படுத்துத் தூங்கும்பொழுது வீடு, மனைவி, மக்கள், தோட்டம், துரவுகள், வஸ்த்து, வாகனங்கள், பந்துக்கள் முதலானவர்களையும் தன் சரீரத்தையும் மறந்து எப்படித் தூங்குகின்றார்களோ அதுபோல் பிராண பிரயாணகாலத்தில் தன் குடும்பத்தாரையும் எல்லா ஆஸ்திகளையும் தன் சரீரத்தையும் தூக்கத்தில் மறந்தவனைப்போல் பிராணனை விடும்பொழுது மறந்து எதன்மேல் விசேஷ ஆசை வைத்திருந்தார்களோ, அதைமாத்திரம் நினைத்துக்கொண்டே பிராணனை விட்டு மறுபடியும் அவர்களின் புண்ய பாவங்களுக்குத் தக்கபடி அரசன் வீட்டிலோ, தனவான்களின் வீட்டிலோ, ஏழைகளின் வீட்டிலோ, அல்லது பிச்சை எடுக்கப்பட்டவர்களின் வீட்டிலோ போய்க் குழந்தையாய்ப் பிறப்பார்கள். பிராணனை விடும்பொழுதும் நினைத்த நினைப்புதான் அவர்களுக்கு விதையாயிருந்து அதனால் மறுபடியும் சரீரம் வருகிறது.

நெல், கேழ்வரகு, கம்பு, சோளம் முதலானவைகளுக்கெல்லாம்விதை எப்படி இருக்கிறதோ அதுபோல், மானவ சரீரம் வருவதற்கும் விதை யொன்றுண்டு. அது என்ன விதை யென்றால் எண்ணங்களென்னும் விதையேயாம். இதை இதுவரையில் முன் சொன்னோம். இந்த எண்ணங்களென்னும் விதையினால் தான் ஓர் வீட்டில் குழந்தையாய்ப் போய்ப் பிறக்கின்றார்கள். அங்குபோய்க் குழந்தையாய்ப் பிறந்தபின் சிறுகச் சிறுக வளர்ந்துவருவார்கள். அதன் பிறகு தம்மைப்பெற்ற தாய்த் தந்தைகளின் மேலும், சகோதர சகோதரிகளின் மேலும் ஆசையாய் இருப்பார்கள். அவர்கள் பெரியவர்களாய் வளர்ந்தபின் அவர்களுக்கு அந்த ஜன்மத்தில் மறுபடியும் விவாகம் செய்கிறார்கள். செய்தபின் மறுபடியும் மனைவி வருகிறாள்.

அதன்பிறகு, அவர்களுக்குக் குழந்தைகள் உண்டாகும். அப்பொழுது தன் மனைவிமேலும் மக்கள் மேலும் விசேஷ ஆசையாய் இருப்பார்கள். இதுபோல் ஒவ்வொரு ஜன்மத்திலும் வரும் மனைவி, புத்திரர்கள், புத்திரிகைகள், பேரன் பேத்திமார்களின் மேல் விசேஷ ஆசையுடையவர்களா யிருந்து கடைசியில் ஏதோ ஓர் வியாதிவந்து பிராணனை விடும்பொழுது அவர்களின் குடும்பத்தாரை யெல்லாம் பூர்த்தியாய் மறந்து பிராணனை விட்டுவிடுவார்கள்.

ஒரு குடும்பத்தில் இருப்பவர்களில் யாருக்காகிலும் ஒருவருக்கு ஏதோ ஒரு வியாதிகண்டு இறந்துவிட்டால் அவரைப்பார்த்து அக்குடும்பத்தி லுள்ளவர்கள் எல்லோரும் அழுது துக்கப்படுவார்கள். அவர் இன்று இறந்தால் அவ்வீட்டில் இருப்பவர்களும் சில வருஷங்கள் வரையில் ஜீவித்திருந்து பிறகு இவர்களும் அவர்களைப்போல் இறக்கப்பட்டவர்களே யொழிய அதே வீட்டில் சாஸ்வதமாய் இருக்கப்பட்டவர்களல்ல.

ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களும் இதுவரையில் எந்தெந்த ஜாதியிலேயோ பிறந்து எத்தனையோ ஜன்மங்களை எடுத்திருக்கின்றார்கள். இந்த கலியுகம் முடிவதற்குள் இன்னும் கணக்கில்லாத எத்தனையோ ஜன்மங்களை இப்பொழுதிருக்கும் ஸ்திரீபுருஷர்கள் இனியும் எடுக்கப்போகிறார்கள். இந்த பிறப்பு இறப்பு எப்படி இருக்கிறதென்றால், தூங்கி எழுந்திருப்பவனைப்போல் இருக்கிறது. அதாவது, ஓர் வீட்டில் இறப்பதே தூக்கம். இறந்ததன் மற்றோர் வீட்டில்போய் மறுபடியும் பிறப்பதே தூங்கி எழுந்திருப்பவன்.

ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் அவர்கள் சொந்தவீடு போய்ச் சேருவதற்காக இனி சொல்லப்போகிறார்.

ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் அவர்கள் சொந்தவீடு போய்ச்சேருவது.

ஸ்திரீபுருஷர்கள் எல்லோரும் ஆசாபாசங்களென்னும் மாயையில் கட்டுப்பட்டிருப்பதனால் அந்த ஆசைகளால் இதுவரையில் அனேக ஜன்மங்களெடுத்து ஒவ்வொரு ஜன்மத்திலும் ஒவ்வொரு வீட்டில்போய்ப் பிறந்து அவ்வீட்டில் சில வருஷங்களிருந்து மறுபடியும் அந்த வீட்டில் இறந்து இதுபோல் அநேகமுறை அனேக கணக்கில்லாத வீடுகளில் போய்ப் பிறந்திருக்கின்றார்கள். இந்த கலியுக முடிவதற்குள் இனியும் கணக்கில்லாத எத்தனையோ வீடுகளில் போய்ப் பிறக்கப்போகிறார்கள். இவைகளெல்லாம் அவர்கள் சொந்த வீடு ஆகமாட்டா. இவர்கள் சொந்த வீடு எதுவோ அதை இனி சொல்லப்போகிறோம்.

பிரம்மமாகிய ஈஸ்வரன் என்று பிறந்தாரோ அன்றே ஸ்திரீபுருஷர்களும் பிறந்தார்கள். பிரம்மமாகிய ஈஸ்வரனுக்கும் ஸ்திரீபுருஷர்களுக்கும் ஒரேவயது. ஸ்திரீபுருஷர்களுக்கு ஆசாபாசங்களென்னும் மாயை இருப்பதனால் இவர்கள் அடிக்கடி பிறந்துகொண்டும், இறந்துகொண்டுமாய் இருக்கின்றார்கள். பிரம்மமாகிய ஈஸ்வரருக்கு ஆசாபாசங்களென்னும் மாயை இல்லாததனால் அவருக்கு பிறப்பு இறப்பு என்பது இல்லாமல் எப்பொழுதும் மிகவும் பரிசுத்தப் பிரம்மமாகவே இருக்கின்றார். அவர் அம்ஸமே ஆத்மா என்னும் பெயருடன் வந்து ஸ்திரீ புருஷர்களிலும், எல்லா ஜீவராசிகளிலும் நிறைந்திருப்பதனால் அவன் என்றோ நாமும் அன்றே என்று சொல்லவேண்டியதாய் நேர்ந்தது. அவர் அம்ஸமே நாமாயிருப்பதனால் அவருக்கு எது சொந்தவீடோ அந்தவீடே நமது சொந்தவீடு.

அவர் இருக்கும் வீட்டில் நாமும் போய்ச் சேர்ந்துவிட்டால் நமது சொந்தவீடு போய்ச் சேர்ந்தவர்கள் ஆகின்றோம். நமது சொந்தவீடு போய்ச் சேர்ந்துவிட்டால் மறுபடியும் பிறப்பு இறப்பு என்பது வரமாட்டா. அவர் எப்பொழுதும் வெட்டவெளியாகவே இருக்கின்றார். அந்த வெட்டவெளியே அவர்வீடு. அதுபோல் நாமும் எந்த எண்ணங்களும் இல்லாமல் வெட்டவெளியாயிருந்து அந்த வெட்டவெளியில் போய்ச்சேரவேண்டும். இவ்வாறு சேர்ந்துவிடுவதற்கே மோக்ஷமென்று சொல்லப்படும்.

ஆகாயத்தில் இருக்கும் நக்ஷத்திரங்களின் ரகஸ்யம் இனி சொல்லப்போகிறோம்.

நக்ஷத்திர ரகஸ்யங்களை ஸ்ரீ யோகீஸ்வரர் வெளிப்படுத்துகிறார்.

எந்த ஆதாரமும் இல்லாமல் வெட்டவெளியாயிருக்கும் ஆகாயத்தில், சூர்யன் சந்திரன் நக்ஷத்திரங்கள் இவைகளெல்லாம் நின்றிருக்கின்றன. கணக்கில்லாத எத்தனையோ நக்ஷத்திரங்கள் ஆகாயமெல்லாம் நிறைந்திருக்கின்றன. இந்த நக்ஷத்திரங்களெல்லாம் யாரோ அதை இனி சொல்லப்போகிறோம்.

அஸ்வனி-பரணி-கிருத்திகை-ரோகிணி என்று இப்படிப்பட்ட பெயர்களுள்ள, 27-இருபத்தேழு நக்ஷத்திரங்கள் இருக்கின்றன. தாயின் கர்ப்பத்திலிருந்து சிசுவுகள் எந்த நக்ஷத்திரத்தில் வெளிவருகிறதோ அப்பொழுது அந்த சிசுவுகள் நக்ஷத்திரம் உடனே ஆகாயத்தில் முளைக்கும். அந்த சிசுவுகள் பிறந்து வளர்ந்து பெரியவரானபிறகு எத்தனை வருஷங்கள் வரையில் ஜீவித்திருக்கின்றார்களோ அத்தனை வருஷங்கள் வரையில் அவர்களின் நக்ஷத்திரம்

ஆகாயத்தில்இருக்கும். அவர்கள் மறுபடியும் எப்பொழுது இறக்கின்றார்களோ அப்பொழுது அவர்களின் நக்ஷத்திரம் ஆகாயத்திலிருந்து விழும். அவர்கள் இன்னொரு வீட்டில் போய் மறுபடியும் எந்த நக்ஷத்திரத்தில் பிறக்கின்றார்களோ அப்பொழுது அவர்களின் நக்ஷத்திரமும் ஆகாயத்தில் மறுபடியும் முளைக்கும். ஆகாயத்தில் மிகவும் சிறிய சிறிய நக்ஷத்திரங்கள் கணக்கில்லாமல் அனேகம் இருக்கின்றன. அதைவிட சற்றுப் பெரிதும், அதைவிட இன்னும் சற்றுப் பெரிதும், அதைவிட மேலும் சற்றுப் பெரிதும் இதுபோல் படிப்படியாய் சிறிதும் பெரிதுமாய்க் கலந்து ஆகாயமெல்லாம் நக்ஷத்திரங்கள நிறைந்திருக்கின்றன. இந்த நக்ஷத்திரங்களெல்லாம் மானவ ஜனங்களின், நக்ஷத்திரங்களேயாம். இவைகளெல்லாம் மானவ ஜனங்களின் நக்ஷத்திரங்களென்று சொல்வதற்குப் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தம் ஒன்று சொல்லுகிறோம். எதாகிலும் ஒரு நக்ஷத்திரம் ஆகாயத்திலிருந்து விழும்பொழுது பெரிய வெளிச்சத்துடன்விழும். அப்பொழுது ஜனங்கள் அதைப்பார்த்து என்ன சொல்லுவார்களென்றால் "யாரோ மகராஜன் போய்விட்டான்" என்று சொல்லுவார்கள். ஆதலால், ஆகாயத்திலிருக்கும் நக்ஷத்திரங்களெல்லாம் மானவ ஜனங்களின் நக்ஷத்திரங்களே என்று சொல்வதற்கு இதுவே பிரத்தியக்ஷ திருஷ்டாந்தம். மிகவும் சிறிது சிறிதாயிருக்கும் நக்ஷத்திரங்களெல்லாம் யாருடைய நக்ஷத்திரங்களென்றால், பிச்சை எடுக்கப்பட்டவர்கள், கூலிவேலைசெய்யப்பட்டவர்கள், இன்னும் மிகவும் ஏழையா யிருக்கப்பட்டவர்களின் நக்ஷத்திரங்கள். அதைவிட சற்றுப் பெரிதாயிருக்கும் நக்ஷத்திரங்கள் யாருடைய நக்ஷத்திரங்களென்றால், சற்றுப் பெரிய அந்தஸ்த்தில் இருக்கப்பட்டவர்களின் நக்ஷத்திரங்கள். அதைவிட இன்னும் சற்று பெரிய நக்ஷத்திரங்களாயிருப்பது யாருடைய நக்ஷத்திரமென்றால் அதைவிட பெரிய அந்தஸ்த்தில் இருக்கப்பட்டவர்களின் நக்ஷத்திரங்கள். அதைவிட பெரியதாயிருக்கும் நக்ஷத்திரங்கள், முன் சொன்னவர்களைவிட இன்னும் அதிக அந்தஸ்த்தில் இருக்கப்பட்டவர்களின் நக்ஷத்திரங்கள். அதைவிட இன்னும்பெரியதாயும், ப்ரகாசமாயும் இருக்கப்பட்ட நக்ஷத்திரங்கள் யாருடைய நக்ஷத்திரமென்றால், சக்ரவர்த்திகள், அரசர்கள் ராணிமார்களின் நக்ஷத்திரங்கள். இவைகளெல்லாம் எல்லா இடங்களிலும் மிகவும் சிறிது, அதைவிட சற்றுப் பெரிது, அதைவிட இன்னும் சற்று பெரிது இதுபோல் சிறிதும் பெரிதுமாய்க் கலந்து ஆகாயமெல்லாம் நிறைந்திருக்கின்றன. இரவில் இறந்துவிடப்பட்டவர்களின் நக்ஷத்திரங்கள் மாத்திரம் விழுவது நன்றாய்த் தெரியவரும். பகலில் இறந்துவிடப்பட்டவர்களின் நக்ஷத்திரம் வெளிச்சமாயிருப்பதனால், விழுவது தெரியவராது.

எங்கெங்கு எந்தெந்த தேசங்கள் இருக்கின்றனவோ அந்த தேசங்களிலெல்லாம் மானவஜனங்கள் இருக்கின்றார்கள். அவர்களின் நக்ஷத்திரங்களெல்லாம் அந்த தேசங்களில் இருக்கும். ஒருவன் இவ்விடமிருந்து லண்டனுக்குச் சென்று அங்கு இறந்துவிட்டால், அங்கு பிராணன் போனவுடன் இவ்விடம் இருக்கும் அவனது நக்ஷத்திரம் உடனே விழுந்துவிடும். யுத்தத்தில் அனேகர்கள் மாண்டுபோகிறார்களல்லவா? அவர்களின் விஷயம் இச்சிறிய நூலில் சொல்லமுடியாது. அது, ஒரு பெரிய கதையாய்ப்போகும் மானவஜனங்களின் நக்ஷத்திரங்களை இதுவரையில் சொன்னோம்.

ஸப்த ரிஷிகளின் நக்ஷத்திரங்களையும், அருந்துதி நக்ஷத்திரமும் இனி சொல்லப்போகிறோம்.

சப்த ரிஷிகள் நக்ஷத்திரம் அருந்துதி நக்ஷத்திரம் ரகஸ்யம் வெளிப்படுத்தல்.

இதுவரையில் சொல்லிய நக்ஷத்திரங்களையெல்லாம் இரவில் ஆகாயத்தில்பார்த்துக்கொண்டே வாருங்கள். ஓரிடத்தில் கட்டில் கால்களைப்போல் நான்கு பக்கங்களிலும், நான்கு நக்ஷத்திரங்கள் ஒரே பிரகாசமாய் நின்றிருக்கும். அதைமுதல் கண்டுபிடிக்க வேண்டும். அதன்பிறகு வலது கைப்புரமாயிருக்கும் கட்டிலினுடைய கீழ்ப்புரமா யிருக்கும் நக்ஷத்திரத்தைப் பாருங்கள். அதற்குச் சில தூரத்தில் வலது கைப்புரமாய் அதே பிரகாசத்துடன் இன்னொரு நக்ஷத்திரமிருக்கும். அதற்கு நேராய்ச் சற்று தூரத்தில் அதே பிரகாசத்துடன் இன்னொரு நக்ஷத்திரம் இருக்கும். அதற்கு சிலதூரத்தில் அதே பிரகாசத்துடன் இன்னொரு நக்ஷத்திரமிருக்கும். இந்த மூன்று நக்ஷத்திரங்களின் தூரமும் ஏற்றக்குறைச்சலில்லாமல் ஒரே சமமாயிருக்கும். இந்த ஏழு நக்ஷத்திரங்களையும் முதல் கண்டுபிடிக்கவேண்டும்.

இந்த ஏழு நக்ஷத்திரங்களும், யாருடைய நக்ஷத்திரங்களென்றால், வசிஷ்ட்டர் - விஸ்வாமித்ரர் - வால்மீகர் - நாரதர் என்று இப்படிப்பட்ட பெயர்களையுடைய ஏழு ரிஷிகள் இருக்கின்றார்கள். மேற்சொல்லிய ஏழு நக்ஷத்திரங்களும் இந்த ஏழு ரிஷிகளின் நக்ஷத்திரங்களேயாம். இந்த ஏழு நக்ஷத்திரங்களிலும் ஆறாவது நக்ஷத்திரங்களின் மத்தியில் வரிசையாயிருக்கும் மூன்று நக்ஷத்திரங்களின் மத்தியில் இருக்கும் நக்ஷத்திரம் யாருடைய நக்ஷத்திரமென்றால், வசிஷ்ட்டருடைய நக்ஷத்திரம். அந்த நக்ஷத்திரத்திற்குப் பக்கத்தில் மிகவும் சமீபமாய் எப்பொழுதும் ஒரே மின்னலாய் அடிக்கடி 'மினுக்-மினுக்' கென்று ஒரு சிறிய நக்ஷத்

திரம் மின்னிக்கொண்டிருக்கும். இந்த சிறிய நக்ஷத்திரத்தை நீங்கள் கண்டுபிடியுங்கள். இது, யாருடைய நக்ஷத்திரமென்றால், வசிஷ்ட்டரது பத்நியார் பதி வ்ரதா சிரோமணியாகிய 'அருந்துதி தேவி' நக்ஷத்திரம். அதனால், தன் நாயகனுடைய பக்கத்தில் மிகவும் சமீபமாய் இருந்து சற்றுநேரமாகிலும் ஓயாமல் எப்பொழுதும் 'மினுக் - மினுக்' கென்று, மின்னிக்கொண்டே இருப்பாள். இதையும் கண்டுபிடியுங்கள்.

விவாககாலத்தில் அருந்துதியைப் பாருங்கள் என்று புரோகிதர் தம்பதிகளுக்குச் சொல்வார். அவ்வாறு சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், வசிஷ்ட்டரும் அவர் பத்நியாரும் எப்படி ஒற்றுமையாய் இருக்கின்றார்களோ அதுபோல் நீங்களும் ஒற்றுமையாய் இருக்கவேண்டுமென்று புரோகிதர் தம்பதிகளுக்குச் சொல்லுகிறார்.

இந்த ஏழு ரிஷிகளுக்கும், அருந்துதிதேவிக்கும் மரணமென்பது இல்லை. அதனால், அவர்களின் நக்ஷத்திரங்கள் ஆகாயத்தில் எந்த காலத்திலும் இருந்துகொண்டே இருக்கும். மற்ற மானவ ஜனங்களினுடைய நக்ஷத்திரங்களெல்லாம் அவர்கள் மரணமடையும்பொழுது விழும். மறுபடியும் அவர்கள் பிறக்கும்பொழுது அவர்களின் கூடவே அவர்களின் நக்ஷத்திரங்கள் ஆகாயத்தில் முளைக்கும். மானவ ஜனங்களெல்லாம் எந்த யுகத்தில் அவர்களின் சொந்த வீடாகிய மோக்ஷமென்னும் வீட்டை போய்ச் சேருகிறார்களோ அப்பொழுது ஆகாயத்தில் ஒரு நக்ஷத்திரமாகிலும் இராமல் எங்குபார்த்தாலும் ஒரே வெட்ட வெளியாயிருக்கும்.

இவர்களின் சொந்த வீடாகிய மோக்ஷமென்னும் வீட்டை இவர்கள் போய்ச்சேருவது மிகவும் கஷ்ட்டம்.

ஏனென்றால், மோக்ஷமென்னும் வீட்டை அடைவதற்கு எந்த வஸ்து விரோதமா இருக்கிறதோ அந்த வஸ்துவே தமக்குவேண்டுமென்று ஸ்திரீபுருஷர்கள் விசேஷ ஆசைப் படுகிறார்கள். அந்த வஸ்து எதுவென்றால், மனைவி மக்கள் பந்து ஜனங்கள் வஸ்து வாஹனங்கள் தனதான்யாதி ஐஸ்வர்யங்கள். இவைகளெல்லாம் மோக்ஷமென்னும் வீட்டை அடைவதற்கு விரோதமான வஸ்துக்கள். இப்படிப்பட்ட வஸ்துக்களை யெல்லாம் எப்படி விடுவார்கள். விடவே மாட்டார்கள். அவைகளை விடாததனால் அடிக்கடி ஜன்மங்கள் வந்துகொண்டே யிருக்கின்றன. அடிக்கடி ஜன்மங்கள் வந்துகொண்டிருப்பதனால், அவர்களின் நக்ஷத்திரங்கள் எக்காலத்திலும் ஆகாயத்தில் இருந்துகொண்டே யிருக்கும்.

மோக்ஷமென்னும் வீட்டை அடைவதற்கு எந்த எண்ணங்களும் இல்லாமல் இருக்கவேண்டு மென்று அனேக முறை இந்நூலில் சொல்லியிருக்கின்றோம். மேற்சொல்லிய சம்சார விஷயங்களெல்லாம் எண்ணங்களினாலல்லவோ உண்டாகிறது. எண்ணங்கள் இல்லாவிட்டால் சம்சார விஷயம் எப்படி நடக்கும். அதனால், மோக்ஷ மென்னும் வீட்டை இந்த சம்சாரிகள் அடையமாட்டார்கள்.

மோக்ஷ மென்னும் பதத்திற்கு சரியான அருத்தம் என்ன வென்றால், விடுதலை-விடுதலை யென்றால், எல்லா ஆசாபாசங்களிலிருந்து விடுபடுவது. இந்த ஆசாபாசங்களுக்கெல்லாம் முதல் காரணமாயிருப்பது எதுவென்றால், எண்ணங்கள். இந்த எண்ணங்களினாலேயே ஆசாபாசங்கள் உண்டாகிறது. எண்ணங்களில்லாவிட்டால் ஆசாபாசங்கள் உண்டாவதற்கு இடமே இல்லை. ஆதலால், ஆசாபாசங்களுக்கெல்லாம் மூலகாரணமாயிருக்கும் எண்ணங்களை சூன்யமாய் என்றால், எதையும் நினைக்காமல் இருக்க

வேண்டும். எதையும் நினைக்காமலிருந்தால் அங்கு ஒன்றுமேயில்லை. வெட்டவெளிதான் இருக்கும். அந்த வெட்டவெளியே ஆத்மா. அதுவே ஜீவாத்மா, அதுவே பரமாத்மா, அதுவே கூடஸ்த்தன், அதுவே மஹாத்மா, அதுவே நாராயணன், அதுவே ப்ரம்மம், அதுவே ஆலிலைமேல் பள்ளிகொண்டான், அதுவே நீ, அதுவே நான், எல்லா ஜீவராசிகளிலும் இதுவே இருக்கின்றது. ஆதலால், எந்த எண்ணங்களையும் தலையெடுக்கவிடாமல் செய்து வெட்டவெளியாய் தான்தானாயிருந்து பிறகு, தன் நிஜ சொரூபமாகி பிரம்மத்தில் போய்க் கலந்து விடவேண்டும். இவ்வாறு கலந்துவிடுவதற்கே மோக்ஷமென்று மறுபடியும் சொல்லுகிறோம். மோக்ஷத்தின் ரகஸ்யம் இப்பொழுது தெரிந்துகொண்டீர்களல்லவா?

சிவ, விஷ்ணு கோவில்களின் ரகஸ்யம் இனிசொல்லப் போகிறோம்.

சிவ விஷ்ணு கோவில்களின் ரகஸ்யம் வெளியிடுதல்.

எங்கும் பரிபூரணமாய் நிரைந்திருக்கும்பிரம்மமென்கிற கடவுள் ஒருவரே இருக்கின்றார். அக்கடவுளைப் பார்க்க முடியாததனால் சிலைகளினாலும்,மரங்களினாலும்,செம்புகளினாலும் முன்னுள்ள பெரியோர்கள் லிங்கம் ஆவடையார் விக்ரகங்கள் செய்து அவ்விக்ரகங்களுக்கு பரமசிவனென்றும், விநாயகரென்றும், சுப்ரமண்யரென்றும், பார்வதி, சாமுண்டீஸ்வரி, கன்னியா பரமேஸ்வரி, காமாக்ஷி, விசாலாக்ஷி என்று இவ்வாறாக அனேக திருநாமங்களை அவ்விக்ரஹங்களுக்கு வைத்து சிவமதஸ்த்தர்களுக்காக சிவன்

கோயில்களைக் கட்டி அந்தந்த மூலஸ்தானத்தில் அந்தந்த விக்ரகங்களை வைத்தார்கள்.

இதுபோல்ஸ்ரீராமர், கிருஷ்ணன், நரசிங்கன், பார்த்தசாரதிப் பெருமாள், லக்ஷ்மி என்னும் பெயர்களுடன் அனேக விக்கிரகங்களைச் செய்து விஷ்ணு மதஸ்த்தர்களுக்காக விஷ்ணு கோவில்களைக்கட்டி அந்தந்த மூலஸ்தானத்தில் அந்த விக்ரகங்களை வைத்தார்கள். விஷ்ணு கோவில்களில் இருக்கும் விக்ரகங்கள் தம் நான்கு கைகளையும் காட்டி என்ன சொல்லுகிறதோ அதை கீழ் சொல்லப்போகிறோம்.

பார்த்தசாரதி பெருமாள் சொல்லுகிறார். "நான் ஒரு கையில் சங்கும், இன்னொரு கையில் சக்ரமும் பிடித்து மற்றொரு கையால் என் இடது பாதத்தைக் காட்டி என் பாதத்தின்மேல் திருஷ்ட்டியை நிறுத்தி எதையும் நினையாமல் சும்மாயிருங்களென்று என் வலது கையை உங்களுக்குக் காட்டுகிறேன். நான் கல்லுருவமாய் நின்றிருப்பதனால், சும்மா யிருங்களென்று சொல்ல வாயில்லாமல் இருக்கின்றேன். அதனால், சும்மா யிருங்களென்று என் வலது கையை உங்களுக்குக் காட்டுகிறேன்." சிவன் கோவில்களில் இருக்கப்பட்ட விக்கிரகங்களும் இதுபோல் காட்டுகின்றன.

"விஷ்ணு கோவில்களிலுள்ள விக்கிரகம் ☞ இதோ எதிரிலிருக்கும் படத்தில்காட்டப்பட்டிருக்கின்றதுபாருங்கள். நீங்கள் இரண்டு கைகளையும் குவித்து நமஸ்கரித்து சிலதுநாளில் அழிந்துபோகத்தக்க வரங்களை என்னைக் கேழ்க்கின்றீர்கள். உங்களுக்குப் பெருத்த மோக்ஷ ஸாம்ராஜ்யபதவியைக் கொடுக்க கோவிலில் நான் கல் விக்ரஹமான கடவுளாய் நின்றிருக்கின்றேன்.

ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாள்.

நீங்கள் இரண்டு கைகளையும் குவித்துக் கும்பிடும் ரகஸ்யம் என்னவென்றால், ஜீவாத்ம ஸ்வரூபமாயிருக்கும் எங்களை பரமாத்மா சொரூபமாயிருக்கும் உம்மில் ஐக்யம் செய்துகொள்ள வேண்டுமென்னும் பாவனையே நீங்கள் இரண்டு கைகளையும் குவித்துக் கும்பிடுவதற்குக் காரணமென்று தெரிந்துகொள்ளுங்கள். எதையும் நினையாமல் சும்மாயிருங்களென்று நான் என் வலதுகையால்காட்டுவது போல் நீங்கள் எதையும் நினையாமல் சும்மாயிருப்பீர்களாகில் அப்பொழுது இராக்ஷதர்களை ஸம்ஹரித்த சக்கரம்

இதோ எனது வலதுகையில் இருக்கிறது பாருங்கள். நீங்கள் எதையும் நினையாமல் சும்மாயிருப்பீர்களாகில் மறுபடியும் உங்களுக்கு எந்த எண்ணங்களும் உதிக்காமல் இருக்கும்படி இந்த சக்கரத்தினால் அந்த எண்ணங்களை யெல்லாம் நாசப்படுத்தி அதன்பிறகு, உங்களை நான் என்னில் ஐக்யம் செய்துகொள்வேன். உங்களை நான் என்னில் ஐக்யம் செய்துகொண்டபிறகு, இக்கலியுகத்தில் சிலர் வந்து என்னில் ஐக்யமானார்களென்று மிகவும் சந்தோஷித்து என் இடதுகையிலிருக்கும் சங்கை வாயில்வைத்து 'பம்-பம்' என்று பூரிப்பேன்'' என்னும் பாவனையாய் முன்னிருந்த பெரியோர்கள் சிலைகளிலும, மரங்களிலும், செம்புகளிலும் நான்கு கைகளையும் நான்கு விதங்களாய் விக்ரஹங்களில் செய்து அந்த விக்ரகங்களை கோவில் மூலஸ்தானத்தில் வைத்து பூஜிக்கும்படி பெரியோர்கள் ஏற்படுத்தினார்கள்.

இந்நூலாசிரியராகிய, ஸ்ரீ யோகீஸ்வரர் இந்நூலில் அனேக இடங்களில் என்ன சொல்லியிருக்கிறாரென்றால், எதையும் நினையாமல் சும்மா யிருக்கவேண்டுமென்று சொல்லி யிருக்கின்றாரல்லவா? யோகீஸ்வரர் எவ்வாறு சொல்லி வந்தாரோ அதுபோல் எல்லா மதஸ்த்தர்களின் கோவில்களிலுள்ள விக்ரஹங்களும் எதையும் நினையாமல் சும்மாயிருங்களென்று தம் வலது ஹஸ்தத்தை ஜனங்களுக்குக் காட்டுகின்றன.

எங்கும் பரிபூரணமாய் நிறைந்து வெட்டவெளியாயிருக்கும் பிரம்மமென்கிற ஈஸ்வரனுக்குப் பேச வாயில்லை. ''தைவம் மாநுஷரூபேண', என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்றால், தைவம் மனுஷ்யரூபமாய் வந்து சொல்வார் என்றிருக்கிறது. ஆதலால், இந்நூலில் சொல்லியிருக்கும் வாக்கியங்களெல்லாம் தேவவாக்கென்றெண்ணி இதில்

உபதேசித்திருக்கும் உபதேசத்தை குருவாக்காய் எண்ணி எப்பொழுதும் சாதனை செய்துவாருங்கள். அதனால் நீங்கள் கடைத்தேறலாம்.

ஓ சகோதர! சகோதரிகளே!!

இந்நூலை ஒருமுறை வாசிப்பதனால் யாதொரு பிரயோஜனமும் இல்லை. இதை அடிக்கடிவாசித்துக்கொண்டே இருக்கவேண்டும். அவ்வாறு வாசித்தால், இதிலுள்ள விஷயங்களெல்லாம் நன்றாய் விளங்கும். விளங்கியபின், இனி எடுக்கப்போகும் ஜன்மத்திற்காக வேண்டிய ''உபதேசம்'' இதில் இருக்கிறபடியால் அதைக் கண்டுபிடித்து சாதனை செய்துவருவார்கள். அந்த சாதனையிலிருந்து பிராணனென்கிற மூச்சை விடுவாராகில் இந்த சாதனையின் பலன் என்னவென்றால் இனி முன் எடுக்கப்போகும் ஜன்மத்தில் ஸத்யமாய் மிகவும் மேலான பதவியை தப்பாமல் அடைவார்கள்.

ஈஸ்வராவதாரமெடுத்த ஓ! ப்ரஹ்மமே!!

எல்லோருக்கும் நன்மையை உண்டாக்கக் கடவாய் ப்ரஹ்மமாகிய ஈஸ்வரா! ஈஸ்வரா!! ஈஸ்வரா!!!

ராமாவதாரமெடுத்த ஓ! ப்ரஹ்மமே!!

எல்லோருக்கும் நன்மையை உண்டாக்கக் கடவாய் ப்ரஹ்மமாகிய ராமா! ராமா!! ராமா!!!

கிருஷ்ணவதாரமெடுத்த ஓ! ப்ரஹ்மமே!!

எல்லோருக்கும் நன்மையை உண்டாக்கக் கடவாய் ப்ரஹ்மமாகிய கிருஷ்ண! கிருஷ்ண!! கிருஷ்ண!!!

சுரு || "ஆப்யாயந்து மமாங்காநி வாக் ப்ராணஸ் சக்ஷுஹு ஸ்ரோத்ரமதோ பல மிந்த்ரியாணி ஸர்வாணி, ஸர்வம் ப்ரஹ்மோப நிஷதம் மாஹம் ப்ரஹ்ம நிராகுர்யாம், மாமா ப்ரஹ்ம நிராகரோத் நிராகரணமஸ்த்வ நிராகரணம் மே அஸ்து ததாத்மநி நிரதேய உபநிஷத்ஸு தர்மாஹ ஸ்தே மயிஸந்துதே மயி ஸந்து, ஓம் ஸாந்திஹி! ஸாந்திஹி!! ஸாந்திஹி!!!"

அடியேனுடைய வாக்கு பாணி (கைகள்) பாதம் பாயுரு உபஸ்தங்களாகிய கர்மேந்திரியங்களும், கண்கள் மூக்கு நாக்கு செவிகள் தேகத்தின்மேலிருக்கும் தோல் முதலாகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், மனோ புத்தி சித்த அஹங்காரங்களாகிய அந்தக்கரணங்கள் நான்கும், பஞ்ச பிராணன்களும், சப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தங்களாகிய தந்மாத்திரைகளும், நாக கூர்ம க்ருகுர தேவதத்த தனஞ்ஜயனென்னும் ஐந்து உப வாயுக்களும் விஷயாதிகளில் ஓடாமல், பரப்பிரம்மமாகிய ஆத்ம சொரூபத்தில் நின்று திருப்தியடையக்கடவன். வேதாந்த பிரதிபாதகமாகிய ஸச்சிதாநந்த பரப்பிரம்மம் சர்வ சொரூபியாகக் கடவது. ஆத்மசொரூபியாகிய அடியேன், அந்தப் பரப்பிரம்மத்தை நிராகரிக்காமல் இருக்கக்கடவேனாக. அந்தப் பரப்பிரம்மம் ஆத்ம சொரூபியாகிய அடியேனை நிராகரிக்காமலிருக்கக்கடவதாக. அந்தப் பரப்பிரம்மத்தினுடைய ஆதரணை அடியேனுக்கு உண்டாகக்கடவதாக. அடியேனுக்கு அந்தப் பரப்பிரம்மத்தில் விஸ்வாசமும், பிரம்ம லக்ஷியபாவமும் உண்டாகக்கடவன. மேலும், அந்தப் பரப்பிரம்மத்தில் ஆசையுடைய அடியேனுக்கு உபநிஷத்துகளில் சொல்லப்பட்ட தருமங்களெல்லாம் உண்டாகக் கடவன. சகல தருமங்களும் அடியேனிடத்தில் உண்டாயிருக்கக்கடவன. ஓ! பிரணவ சொரூபியாகிய பரப் பிரம்

மமே! ஓ நாராயணா! சாந்தி! சாந்தி!! சாந்திஹி!!! சகல விக்கினங்களும் பரிகரிக்கக்கடவாய் கிருஷ்ணா!

இந்நூலை வாசிக்கப்பட்டவர்களும், வாசிப்பதைக் கேழ்க்கப்பட்டவர்களும் ஈஸ்வரர் கிருபையால் தீர்க்காயுஷாயும், எந்த நோயும் இல்லாமல் புத்ரசந்தானங்களுடன் சுகஜீவிகளாயும் பல்லாண்டு பல்லாண்டாய் இருக்கவேண்டுமென்று உங்கள் எல்லோரையும் ஆசீர்வதிக்கின்றோம்.

ததாஸ்து! ததாஸ்து!! ததாஸ்து!!!

அதாவது,

அதுபோல் ஆகக்கடவது! அதுபோல் ஆகக்கடவது!! அதுபோல் ஆகக்கடவது!!! என்பதேயாம்.

இங்ஙனம்,

பரமஹம்ஸ ஸச்சிதானந்தன்

கேம்பாபுர அக்ரஹார மடம் மடாதிபதிகள்.
பெங்களூர் சிடி (தென் இந்தியா.)

ஓம்
தத் ஸத்
ஸ்ரீ பரப் பிரம்மணே நமஹ.

அநேக ரகஸ்யங்கள் அடங்கிய மூன்றாம் பதிப்ப
ஜனன மரண ரகஸ்யம்
முற்றிற்று.

S. B. Press, Choolai. P.I.C Ms 18 (2-8-47) 1000

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்,

கெம்பாபுர அக்ரஹாரம் மடம் பேங்களூர் சிடி.

1865ஸ்ரு பிப்ரவரிமாதம் 16-ந், தேதி வியாழக்கிழமை மாலை $6\frac{1}{2}$-மணிக்கு சிம்ம லக்கினத்தில் ஜனனமானார்.